

வின்சென்ட் செல்வகுமார்

# எச்சரிக்கை செய்திகள்

# எச்சரிக்கைச்
# செய்திகள்

## வின்சென்ட் செல்வகுமார்

VOICE OF JESUS PUBLICATIONS

**இயேசுவின் தொனி பதிப்பகம்**

தபால் பெட்டி எண்: 6, இராமநாதபுரம் - 623 501

தென்னிந்தியா

**Phone: 98941 31211, 94423 22264**

**E.Mail: vojpublication@gmail.com, vojmedia@gmail.com**

# Echarikkai cheithigal

by bro. **vincent selvakumaar**

I Edition : June-2004
II Edition : August-2004
III Edition : December-2004
IV Edition : March-2005
V Edition : December 2006
VI Edition : May-2007
VII Edition : June-2008
VIII Edition : January - 2012 • Copies 2000
IX Edition : February - 2014 • Copies 2000
Type-setting : Mrs.Josephin Kumar, Ramnad.
Printer : D.A. Selvaraj, Sivakasi. • Phone : 04562-254881
Press : Angel Printers, Sivakasi • Cell : 94433 54881
Published by : Voice of Jesus Publications,
E.Mail: vojpublication@gmail.com
vojmedia@gmail.com
Ramanathapuram. South India.
Cell : 98941 31211 & 94423 22264

**VOICE OF JESUS PUBLICATION**

**P.O.Box : 6, Ramanathapuram - 623 501. South India.**
**Phone : 98941 31211, 94423 22264**
**E.mail: vojpublication@gmail.com,**
**vojmedia@gmail.com**

# முன்னுரை

துவக்கம் என்று ஒன்றிருந்தால் முடிவு என்ற ஒன்று தவிர்க்க முடியாதது. இது உலகப் பொது விதி.

உலகத்தின் ஆரம்பம் பற்றி நம்முடைய வேதம் ஆதியாகமம் துவக்க அதிகாரங்களில் மிகவும் தெளிவாகவும், விரிவாகவும் சொல்கிறது. நாம் பார்த்த பொதுவிதிப்படி உலகத்திற்கு துவக்கம் என்று இருந்தால் முடிவு என்றும் ஒன்று இருக்க வேண்டுமல்லவா? ஆம். கண்டிப்பாக இருக்கத்தான் வேண்டும். அது எப்படி நடைபெறும் என்றும், அந்திமக்காலத்தில் உலகத்தில் நடைபெறும் அடையாளங்கள் என்னென்ன என்பது பற்றியும் வேதம் பல அதிகாரங்களில் தெளிவாகச் சொல்லி வைத்திருக்கிறது.

உலகத்தின் கடைசிக்காலம் பற்றி வேதம் சொல்லும் அடையாளங்களை எல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால் அதிர்ச்சியும் ஆச்ச ரியமுமாயிருக்கிறது. காரணம், அது நாம் வாழும் இந்தக் காலம்தான் என்பதுதான். வேதத்தில் கடைசிக் காலம் பற்றி நான் வாசித்தபோது அடைந்த ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் தான் இந்தப் புத்தகத்தில் பதிவு செய்துள்ளேன்.

உலகத்தின் கடைசிக் கால அடையாளங்களை வேதம் பல்வேறு விதங்களில் வெளிப்படுத்துகிறது. விஞ்ஞானரீதியாக, சமுதாயரீதியாக, ஆவிக்குரியரீதியாக, மனித சுபாவங்களின் அடிப்படையில் என்று பல்வேறு அடையாளங்களைக் காட்டு கிறது. அவற்றுள் சிலவற்றைக் கட்டுரையாக்கி என்னுடைய இயேசு வின் தொனி என்ற சிறு மாதாந்திரப் பத்திரிகையில் வெளியிட்டு வந்தேன். இந்தக் கட்டுரைகள் பத்திரிகையில் வெளிவந்த போது வாசகர்களால் மிகவும் விரும்பி வரவேற்கப்பட்டன. அதிலும் கட்டுரையினூடே பல விஞ்ஞானப் பூர்வமான ஆதாரங்களைக் கண்டபோது அவர்கள் மகிழ்ச்சி இரட்டிப்பானது. நிறையப்பேர் பாராட்டிக் கடிதங்கள் எழுதினார்கள். அவர்கள் தந்த ஊக்கமும், உற்சாகமும்தான் என்னை அவ்விதமான கட்டுரைகளை தொடர்ந்து எழுதத் தூண்டியது.

இன்னும் இவற்றையெல்லாம் தொகுத்து ஒரே புத்தகமாக வெளியிட்டால் நலமாக இருக்குமே என்ற கருத்தையும் அவர்கள் தான் எனக்கு வலியுறுத்தினார்கள். இன்னும் பல போதகர்களும்,

நண்பர்களும் இதே கருத்தை வழிமொழிய விளைவு: உங்கள் கையில் தவழும் இந்தப் புத்தகம்!

இந்தப் புத்தகத்தைப் படித்து முடிக்கும்போது கொஞ்சம் வானத்து நட்சத்திரங்கள் பற்றி, வைரஸ் கிருமிகள் பற்றி, எண்கள் பற்றி, ரோபோக்கள் பற்றி, எருசலேம் தேவாலயம் பற்றித் தெரிந்துகொண் டிருப்பீர்கள். விஞ்ஞானம் சார்ந்த புத்தகங்களோ, சரித்திரம் சார்ந்த புத்தகங்களோ எழுதும்போது அதை மிகவும் கவனமாக எழுத வேண்டும். வாசிப்பவர்களை கொஞ்சமும் அலுப்புத் தட்டாமல் வாசிக்க வைக்க வேண்டும் என்று எண்ணுபவன் நான். கொஞ்சம் தவறினாலும் உங்களுக்குப் பாடப்புத்தகங்கள் ஞாபகத்திற்கு வந்து, அதைத் தொடர்ந்து லேசானது முதல் மிதமானது வரை தூக்கம் வந்துவிட எண்பது விழுக்காடு சாத்தியமிருக்கிறது. எனவேதான், ரொம்பவும் கவனமாக கடினமான வார்த்தைகளை அதிகமாக பயன்படுத் தாமல் எளிய வார்த்தைகளைக் கொண்டு என் பாணியிலேயே சொல்லியிருக்கிறேன்.

நீங்கள் வாசிக்க எடுத்திருக்கும் இந்தப் புத்தகம் இதன் நான்காவது பதிப்பு. இப்புத்தகத்தின் முதல் பதிப்பு வெளிவந்த முதல் மாதமே இதன் பிரதிகள் யாவும் விற்பனையாகிவிட்டன. இரண்டாவது மாதமே மறுபடியுமாக அடுத்த பதிப்பை வெளியிட வேண்டிய நிலை உண்டாயிற்று. இரண்டாவது பதிப்பும் அதே போல விரைவிலேயே பிரதிகள் தீர்ந்துவிட்டன. முன் பதிப்புகள் யாவற்றிற்கும் நீங்கள் தந்த வரவேற்பிற்காக நன்றி செலுத்துகிறேன்.

இப்புத்தகத்தை அதிகமாக இளைஞர்கள் விரும்பிப் படிக்கிறார்கள். அடுத்ததாக வேதாகம கல்வி பயிலும் மாணவர்கள் படிக்கிறார்கள். கடைசிகாலத்தின் எச்சரிப்புக்களை யாவரும் படித்துத் தெரிந்துகொள்வது நல்லது. அது வருகைக்கும், தேவனை சந்திக்கவும் நம்மை ஆயத்தப்படுத்தும். கடைசிக்காலம் பற்றி இக்கட்டுரைகள் பத்திரிகையில் வெளியிடப்பட்ட காலத்தில் எல்லாம் யாரும் அதிகமாக அலட்டிக் கொள்வதில்லை. ஆனால் இப்போது கிறிஸ்தவர்களின் மனநிலையில் நிறைய மாற்றம் தெரிகிறது. உலகில் அடுத்தடுத்து உண்டாகிக்கொண்டிருக்கும் பயங்கரங்கள் அந்த மனநிலையை உண்டாக்கியுள்ளன. எனவே, இப்போது கடைசிக்காலம் பற்றி வேதம் சொல்லும் காரியங்களை அதிகமாக ஆராய முற்பட்டிருக்கிறார்கள். அப்படி முற்பட்டிருப்

பவர்களுக்கு சிறிதளவாவது இப்புத்தகம் பயன்தரும் என்று விசுவாசிக்கிறேன்.

இப்புத்தகத்தின் ஆக்கத்திற்கு பெரிதும் உதவிய சிவகாசி யிலுள்ள ஏஞ்சல் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு. செல்வராஜ் அவர் களை நன்றியுடன் நினைவு கூர்கிறேன். இவர் மிகவும் கவனமாகச் செயல்பட்டு இந்தப் புத்தகத்தின் ஆக்கத்திற்கு பெரிதும் துணை புரிந்திருக்கிறார். அதைப் போலவே இப்புத்தகத்தின் வடிவமைப்புக் கும், அச்சுக்கோர்வைக்கும் பெரிதும் உதவின சகோதரிகள் ஜோஸ்பின் குமார் மற்றும் பெனிட்டா ஆகியோரையும் நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

நிச்சயமாகவே இந்தப் புத்தகம் உங்கள் யாவருக்கும் மிகுந்த பயனுள்ளதாக இருக்க வேண்டுமென்று ஜெபிக்கிறேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

அன்புடன்,

***வின்சென்ட் செல்வகுமார்***

# உள்ளே...


- புல்மேயும் ஓநாய்கள் 01
- புல்மேயும் ஓநாய்கள் II 18
- எல்லாம் எண்கள் மயம் 29
- சிலைக்குள் ஜீவன் 43
- தலைக்குமேல் ஆபத்து 55
- ஆலயம் காட்டும் அடையாளம் 65
- வா, என் இனிய எதிரியே 75
- காற்றினிலே வரும் மரணம் 91
- இது கடைசிக் காலமா? 103
- அந்த ஏழு சம்பவங்கள் 111
- இயேசுவின் வருகை நம்பகமானதா? 127

# 1

## *எச்சரிக்கைச் செய்தி*

### மத்தேயு 24: 4-5

ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையா ருங்கள். ஏனெனில் அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக்கொண்டு, நானே கிறிஸ்து என்று சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள்.

### மத்தேயு 24: 23-24

அப்பொழுது இதோ கிறிஸ்து இங்கே இருக்கிறார். அதோ அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள்.

ஏனெனில் கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்க தரிசிகளும் எழும்பிக் கூடுமானால் தெரிந்து கொள்ளப் பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக பெரிய அடையா ளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.

### பிலிப்பியர் 3:2

நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள். பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

## புல்மேயும் ஓநாய்கள்

அது ஒரு காடு.

வழக்கமாக தாங்கள் புல்மேயும் இடத்திற்கு வந்த ஆடுகள் தூரத்திலேயே ஸ்தம்பித்து நின்றுவிட்டன. காரணம், தாங்கள் புல்மேயும் இடத்தில் ஒரு ஓநாய் புல்மேய்ந்து கொண்டிருந்தது தான்.

ஆடுகளுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை.

“ஓநாய்கள் எப்படிப் புல்மேயும்?” பெரிசுகள் ஆச்சரியப் பட்டன.

“ஓநாய்கள் புல்தின்னுமாம்மா..?” குட்டிகள் கேள்வி கேட்டன.

ஆடுகளின் பேச்சுக்குரல் கேட்டு அவற்றை நிமிர்ந்து பார்த்த ஓநாய் அவற்றை சட்டை செய்யவே இல்லை. சாதாரணமாக தன் தலையைக் கவிழ்த்துக்கொண்டு இன்னும் மும்முரமாய் புல் மேய்ந்தது.

இன்னும் ஆடுகள் பயத்துடன் நின்றுகொண்டேயிருக்க, ஓநாய் தன் தலையை ஒரு நாலங்குலம் உயர்த்தி, “வாருங்கள் நண்பர்களே... இங்கே புற்கள் வெகு பசுமையாயிருக்கின்றன. ஏன் நிற்கிறீர்கள் நீங்களும் மேயலாமே..” என்றது.

ஒரு வயசாளி ஆடு கொஞ்சம் தைரியம் வரவழைத்துக் கொண்டு அடித்தொண்டைக் குரலில், “நாங்கள் புல்மேயும் இடத்தில் நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்? என்றது. தன் காதுகளுக்குப் பின்னால் வியர்ப்பது ஸ்பஷ்டமாக தெரிந்தது.

“ஓ.. இது நீங்கள் புல்மேயும் இடமா? மன்னியுங்கள். நான் கொஞ்சம் உங்கள் புல்லில் பசியாறிக் கொள்வதில் உங்களுக்கு ஆட் சேபணை இல்லையே..?

ஓநாயின் நாகரீகமான பேச்சும், நடவடிக்கையும் ரொம்பவும் ஆச்சரியமாக இருந்தது.

“அம்மா அம்மா.. ஓநாய் அங்கிளை நான் பக்கத்திலே போய் பார்க்கவா.. ரொம்ப ஆசையாயிருக்கிறது” என்றது ஒரு துறு துறுப்பான குட்டி.

“மடக்கழுதை பேசாமலிருக்க மாட்டே? வா.. இப்படி..” என்ற படி தன் முன்னங்காலை உயர்த்தி குட்டியின் தலையில் ஒரு குட்டு வைத்தது தாய் ஆடு.

இப்போது ஓநாய் தன் தலையை தாராளமாக உயர்த்திப் பார்த்தது.

“என்ன பார்க்கிறீர்கள்? ..ஓ.. நான் புல்மேய்வதையா? ஓநாய் கள் புல் தின்பது உங்களுக்குப் புதிது. அப்படித்தானே? நானும் ஒரு காலத்தில் மாம்சம் சாப்பிடும் ஓநாயாகத்தான் இருந்தேன். ஆனால் ஒரு நாள் நினைத்துப் பார்த்தேன்...” கொஞ்சம் தலையை சாய்த்துக் கொண்டு வானத்தை நோக்கி கண்கள் செருக ஒரு தெய்வீகப் பார்வை பார்த்தது ஓநாய். பார்ப்பதற்கு அது வானத்தில் உள்ள கடவுளுடன் தொடர்பு கொள்வது மாதிரி தோன்றியது.

அதே நிலையிலேயே தன் பேச்சை ஓநாய் தொடர்ந்தது. “நாம் நம் உயிரை வளர்க்க இன்னொரு உயிரை பலியிடுவதா? இது பெரும் பாவமல்லவா என்று சிந்தித்தேன். ஆனாலும் என்ன செய்ய இது

இறைவனின் படைப்பின் சூட்சுமம் ஆயிற்றே. ஒரு சாதாரண ஓநாய் அதை மாற்றமுடியுமா? ஆனாலும் இந்தப் பாவநிலை யிலிருந்து விடுபட பலமாய் சிந்தித்தேன். மனம் நொந்த நிலையில் கடவுளிடம் முறையிட்டேன். சுமார் நாற்பது நாட்கள் அன்ன ஆகாரம் இல்லாமல் ஒரே தவம் தான். மோனநிலையில் நாபிக் கமலங்கள் தரையில்பட சுருண்டு கிடந்தேன்.. என் நிலைகண்டு மனம் இரங்கிய கடவுளும் என்மேல் கருணை வைத்து எனக்கு காட்சியளித்தார்'' அப்படியே சிலிர்த்துக் கொண்டு சிலாகித்துப் போய் நின்றது.

மறுபடியும் தன் பேச்சை தொடர்ந்தது, "நான் என் நிலையை அவருக்கு விளக்கி என்னைப் புல் தின்னும் ஓநாயாக மாற்றிவிடக் கெஞ்சினேன். அவரும் கருணை கூர்ந்து என்னை அப்படியே மாற்றி விட்டார். அன்றிலிருந்து எனக்கு மாமிச வாடை கூட குமட்டலை ஏற்படுத்துகிறது. புல்தான் பிடிக்கிறது. ஆனால் அப்புறம்தான் இதில் உள்ள சிக்கல் புரிந்தது. நான் புல் தின்பதால் என் இனம் என்னை சேர்த்துக் கொள்வதில்லை. என் தோற்றம் ஓநாயாக இருப்பதால் ஆடுகளும் என்னை நண்பனாக நினைப்பதில்லை. ம்.... எல்லாம் என் விதி..'' கண்களில் கொஞ்சம் கண்ணீர் திரண்டது.

சுற்றியிருந்த ஆடுகளுக்கு துக்கம் நெஞ்சையடைத்தது. சில ஆடுகள் கண்ணீர் விட்டன.

"இல்லையில்லை.. நீ அழக்கூடாது. நாம் ஒரே உணவுப்பழக்கம் உடையவர்கள். இனி நண்பர்களாக இருப்போம்.'' என்றன.

ஒரு கிழட்டு ஆட்டுக்கு மாத்திரம் கொஞ்சம் சந்தேகம். தன் குட்டிகளை எச்சரித்தது.

"கடவுளாவது ஒரு ஓநாய்க்கு காட்சியளிப்பதாவது.. இதில் ஏதோ சூழ்ச்சியிருக்கிறது கவனமாக இருங்கள்''

"வயசாச்சே ஒழிய உனக்கு புத்தியே இல்லை. பார் அந்த ஓநாயை எவ்வளவு சாந்தமாக இருக்கிறது? கடவுள் அதை உண்மையாகவே மாற்றிவிட்டார்.''

ஒன்றிரண்டு நாட்களில் ஆடுகளுடன் தன் நட்பை பலப்படுத்திக் கொண்ட ஓநாய் அவைகளுடன் அந்நியோந்நிய மாகப் பழகியது. அவைகளுடன் ஒன்றாக படுத்துக் கொண்டது.

நிறைய ஜோக் அடித்தது. சமயங்களில் புல்லும் மேய்ந்தது.

"நான் நேற்று வரும் வழியில் இன்னும் பசுமையான புல்வெளியைக் கண்டேன். மிகவும் தளிரான இளம்புற்கள். அடடா.. என்ன ருசி. நீ என்னுடன் வந்தால் காட்டுகிறேன்."

தனித்தனியாய் ஒவ்வொரு ஆட்டுக்காய் ஆசை காட்டி ஒவ்வொன்றாக அழைத்துக்கொண்டு போனது. தனியான இடத்தில் அவைகளை விருந்தாக்கிக் கொண்டது. மறுநாள் ஆட்டு மந்தையுடன் சேர்ந்துகொண்டு தானும் கவனமாக காணாமல் போன ஆட்டைத் தேடியது.

விஷயம் ஏதோ விபரீதமாவதை புரிந்துகொண்ட கிழ ஆடு மாத்திரம் மந்தையை விட்டு அம்பேல் ஆகிவிட்டது. மற்றெல்லா ஆடுகளும் ஒவ்வொன்றாக ஓநாய்க்கு இரையாகிப்போயின.

ஒவ்வொரு ஆடும் தான் கொல்லப்படும்போது தான் ஓநாய் புல் மேய்ந்ததைக் கண்டு தான் பரவசப்பட்டதற்காக வருத்தப் பட்டது.

"ஆடுகள் கொஞ்சமாவது யோசிக்க வேண்டாமா? ஓநாய் எங்கேயாவது புல்மேயுமா?

யோசிக்கணும்தான். என்ன செய்வது? கடவுளை முன்னிருத்திச் சொன்னால் நாமே யோசிக்காதபோது ஆடுகள் எப்படி சார் யோசிக்கும்?

மேலே சொல்லப்பட்டது பஞ்சதந்திரக்கதைகள் பாணியில் அமைந்த கதைகளில் ஒன்றுதான். பஞ்சதந்திரக்கதைகள் எல்லாம் எனக்கு எழுதும் பழக்கம் இல்லைதான். என்றாலும்...

ஓநாய்கள் ஏராளமாய்ப் புல்மேய ஆரம்பித்திருக்கும் இந்த கால கட்டத்தில் இந்தக் கதையை நம்மால் தவிர்க்க இயலவில்லை.

கடைசிக்கால சாத்தானின் தந்திரங்களில் ஒன்று ஆட்டுத் தோல் போர்த்திக்கொண்டு புல்மேய்வது.

வேஷம் போடும் ஓநாய்களைக் குறித்து வேதம் சொல்வதைக் கவனியுங்கள்.

*மத்தேயு 7 : 15*
*கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாருங்கள்.*

*அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள். உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்.*

கடைசிக்கால அடையாளங்களில் ஒன்றாக இயேசு சொன்னவைகளில் ஒன்றுதான் இந்தக் கள்ள வேலையாட்கள் எழும்புவது.

கள்ளத்தீர்க்கதரிசி என்று எழுதியிருப்பதால் கள்ளர்கள் தீர்க்க தரிசிகளில்தான் எழும்புவார்கள் என்று எண்ணிவிட வேண்டாம்.

கள்ளர்கள், மேய்ப்பர்களிலும் தோன்றலாம். சுவிசேஷகர்களி லும் தோன்றலாம். போதகர்களிலும் தோன்றலாம். கள்ளத்தனம் எதில்தான் இல்லை?

இவர்கள் முதலாவது ஜனங்களை மலிவான அற்புதங்கள் மற்றும் புதுமையான பிரசங்கங்கள் மூலம் வசப்படுத்திக் கொள்கின்றனர். பிறகு கடைசியில் தங்களைக் கிறிஸ்துவின் அவதாரம் என்றும் தானே கிறிஸ்து என்றும் பிரகடனப்படுத்திக் கொள்கிறார்கள்.

நமக்கு ஒரு பலவீனம் இருக்கிறது. மேடையிலிருந்து சொல்லப்பட்டால் எதுவுமே உண்மை என்று நம்பிவிடுகிறோம். நிறைய ஜனங்களின் ஆதரவு பெற்றவர்கள் சொல்வதெல்லாம் சத்தியமாகத்தான் இருக்கும் என்று எண்ணுகிறோம்.

செல்வாக்கும் பதவியும் உள்ளவர்கள் சொல்வது தவறாக இருக்க முடியாது என்று கணக்குப் போடுகிறோம்.

இதுதான் சாத்தானுக்கு சாதகமான மனநிலை. இப்படிப்பட்ட ஆடுகளும், மந்தையும்தான் அவன் பிரதான இலக்கு.

இப்படிப்பட்டவர்களுக்கு நடுவில்தான் சாத்தான் தன்னுடைய சீடர்களை ஆட்டுத்தோலைப் போர்த்தி புல்மேய விடுகிறான். ஜனங்கள் எச்சரிப்புக்களை மறந்து கண்ணால் காண்பவற்றை மட்டும் வைத்து முடிவெடுக்கும்போதுதான் இப்படிப்பட்டவர்களின் வலையில் சிக்குகிறார்கள்.

நீங்கள் செய்தித்தாள்களை வாசிக்கும் பழக்கம் உடையவரா னால் சில ஆண்டுகளுக்கு முன்னால் பரபரப்பான செய்திக்கு காரணமான கோரேஷ் என்பவனைப் பற்றி படித்திருப்பீர்கள்.

அதிர்ச்சியும் அடைந்திருப்பீர்கள்.

ஆனால் தினசரி பரபரப்பிற்கு பஞ்சமில்லாமல் செய்திகளை வாசிக்கிறதனால் அதை சீக்கிரமே மறந்திருப்பீர்கள். ஆனால் கோரேஷ் மறக்கக் கூடிய செய்தியல்ல. மறந்தவர்களுக்காக நாலுவரி சொல்கிறேன்.

அமெரிக்காவில் உள்ள வாகோ ஆஸ்ரமத்தில் வேதபோதனை செய்து வந்த கோரேஷ் என்ற போதகன் தன் வார்த்தை ஜாலங்களால் பல புதிய புதிய உபதேசங்களை ஜனங்களுக்கு போதித்தான். ஜனங்கள் ஆர்வமாய் கவனித்தார்கள். வைராக்கியமாக கழுத்து நரம்புகள் புடைக்க அவன் பேசும் செய்திகளைக் கேட்டு மயிர்க்கூச்செறிந்தார்கள். செய்தியின் நடுவில் அடிக்கடி கைதட்டினார்கள்.

கோரேஷை பின்பற்றுகிறவர்கள் தினசரி எண்ணிக்கையில் பெருகினார்கள். காரணம், கோரேஷ் கிறிஸ்துவக் கட்டுப்பாடுகள் பலவற்றிற்கு விலக்களித்ததுதான்.

அதன்படி போதைப்பொருட்கள் உபயோகிப்பது பாவமில்லை என்றும், கட்டுப்பாடற்ற பாலுணர்வு பாவமில்லை என்றும் அறிவிப்பு செய்தான். ஏன் இவைகள் பாவமில்லை என்று காரணமும் சொன்னான். ஜனங்களுக்கு ரொம்பவும் மகிழ்ச்சியாயிருந்தது.

கோரேஷின் செய்திகளில் புதுமையிருந்த அளவிற்கு அனலும் பறந்தது.

அவன் குறிப்பிட்ட விஞ்ஞான மற்றும் உடல் ரீதியான விளக்கங்களால் ஜனங்கள் இதுவரை தாங்கள் அனுசரித்து வந்த ஒழுக்கநெறிகள் எவ்வளவு முட்டாள்தனமானது என்று சிந்திக்கத் தொடங்கினார்கள். கோரேஷ் சொல்கிற ஒவ்வொன்றும் அவர்களுக்கு நியாயமாகப்பட்டது. கூட்டம் கூட்டமாக கோரேஷை நம்பினார்கள்.

கோரேஷ் ஏராளமாய் சுற்றுப்பயணங்களை செய்து நிறைய ஜனங்களை பக்தர்கள் ஆக்கினான். தன் ஆஸ்ரமத்தில் வந்து சேர்ந்தவர்களுக்கு போதைமருந்து ஆராதனை, மூளைச்சலவைப் பிரசங்கங்கள், கட்டுப்பாடற்ற உறவுமுறைகள் என்று பல

வசதிகளை செய்து கொடுத்தான். இவ்வளவு இருந்தால் போதாதா? ஜனங்கள் அவன் சொல்லும் எதையும் செய்ய தயாராயிருந்தார்கள்.

இதுவரை தன்னை ஒரு போதகனாக மாத்திரமே காட்டிக் கொண்டு வந்த கோரேஷ், ஒருநாள் தானே கிறிஸ்து என்று பிரகட னப்படுத்தினான். ஜனங்களும் பாதி மயக்கத்தில் அதை கரம் தட்டி ஆமோதித்தனர்.

அவனுடைய நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்ட சிலர் அவனைக் குறித்தும் அவனுடைய வாகோ ஆஸ்ரமம் குறித்தும் போலீசில் புகார் கொடுத்துவிட, சுதாரித்துக்கொண்ட கோரேஷ் ஜனங்களுக்கு புதிதாக ஒரு திட்டத்தை அறிமுகம் செய்தான்.

அதன்படி தன்னைப் பின்பற்றுகிறவர்களை உயிருடன் பரலோகம் கொண்டு போகப் போவதாக வாக்களித்தான்.

ஜனங்களுக்கு சந்தோஷம் தாளமுடியவில்லை. முதல்கட்ட மாக தங்கள் சொத்துக்களையெல்லாம் விற்று ஆஸ்ரமத்தில் ஒப் படைத்தார்கள். பின்பு பரலோகம் போகும் நாள் அவர்களுக்கு குறிக்கப்பட்டது. எப்படிப் போவது?

ரொம்பச் சுலபம். ஜனங்கள் தங்கள் உடலில் போதையேற்றிக் கொண்டு, உச்சகட்டத்தில் தங்களுக்குத் தாங்களே தீவைத்துக் கொள்ளவேண்டும். பிறகு நேரடியாக பரலோகம்தான்.

ஜனங்கள் இதற்கும் வழக்கபோல சந்தோஷத்துடன் சம்மதித் தார்கள். காரணம் போதை... எதையும் சிந்திக்க விடாத போதை!

கூட்டத்தில் சரிவர போதை வசப்படாத ஆட்கள் பயந்து போனார்கள். விஷயம் அவர்கள் மூலமாக போலீசுக்கு தெரிவிக்கப் பட்டது. அமெரிக்க போலீஸ் விபரீதத்தை புரிந்துகொண்டு உடனடி நடவடிக்கையில் இறங்கியது. எதுவும் நடப்பதற்கு முன் அவர்களை உயிருடன் மீட்கவேண்டும் என்று கருதி ஆஸ்ரமத்தை போலீஸ் சுற்றி வளைத்துக்கொண்டது.

இனி, தான் தப்பமுடியாது என்று தெரிந்துகொண்ட கோரேஷ் தன் ஜனங்களுடன் ஆஸ்ரமத்தின் வாசலை அடைத்துக் கொண்டான். உள்ளிருந்து கொண்டே தங்கள் மத நம்பிக்கையில் போலீஸ் தலையிட்டால் விஷயம் விபரீதமாகி விடும் என்று எச்சரிக்கை செய்தான். போலீசும் பதிலுக்கு கோரேஷை

சரணடைந்துவிடும்படி கேட்டுக் கொண்டது.

உள்ளே தீவிரமாக ஜனங்களுக்கு கோரேஷ் பிரசங்கம் செய்து கொண்டிருந்தான். தங்கள் பரலோக பயணத்திற்கு சாத்தான் முட்டுக்கட்டை போடுவதாகவும், போலீஸ் ரூபத்தில் சாத்தான் தங்களை தடுக்க முயற்சி செய்வதாகவும் வைராக்கிய மாகப் பேசினான். ஜனங்கள், "போலீஸ் சாத்தான் ஒழிக.." என்று கோஷமிட்டார்கள்.

சில விசுவாசிகள் பதறினார்கள். "போலீஸ் சாத்தானின் படை களை நாம் தாண்டிப் பரலோகம் போக என்ன வழி?"

"ரொம்பச் சுலபம். இன்னும் கொஞ்சம் போதை மருந்தை ஊசி மூலம் ஏற்றிக்கொண்டு முதலாவதாக உங்கள் பிள்ளைகளுக்கு தீவையுங்கள். பின்னர் நீங்கள் ஒருவருக்கொருவர் தீ வைத்துக் கொள்ளுங்கள். இதோ, நான் பரலோகத்தின் கதவுகளை உங்களுக்காகத் திறந்து வைக்கிறேன்."

வெளியே காத்திருந்த போலீஸ், ஆஸ்மரத்தின் உள்ளிருந்து கரும்புகை எழும்புவதைக் கண்டு பதட்டத்துடன் ஆஸ்ரமத்தின் கதவுகளை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்து, வெகு பிரயத்தனப்பட்டு நெருப்பை அணைத்துப் பார்த்தால்... பயங்கரம்!

குவியல் குவியலாய் பிணங்கள்.. தடுமாறியபடியே எரிந்து கொண்டிருந்த குழந்தைகள்.. சுற்றிலும் கரிக்குவியலாய் அவர்கள் பயன்படுத்திய பொருட்கள்.. எல்லாவற்றிற்கும் மத்தியில் கரிக்கட்டையாய் கோரேஷ்.

செய்தியறிந்து உலகத்தின் இதயத்துடிப்பே ஒருகணம் நின்று போனது.

கோரேஷ் என்றால் சூறாவளி என்று பொருள்.

சூறாவளி ஓய்ந்துவிட்டதா? இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். மறுபடியும் வரலாம். கோரேஷிற்கு முன்பாகவும் பலமுறை வந்திருக்கிறது.

இதுவரை சுமார் 22,000 பேர் தங்களை கிறிஸ்து என்று அழைத்துக்கொண்டு மற்றவர்களை ஏமாற்றியிருக்கிறார்கள் என்கிறது உலக வரலாற்று புள்ளி விபரக் குறிப்பு.

இதுபற்றி இயேசு ஏற்கனவே எச்சரித்து சொல்லியிருக்கிறார்.

*மத்தேயு 24 :5, 23-27*
*ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையா யிருங்கள். ஏனெனில் அநேகர் வந்து என் நாமத்தை தரித்துக்கொண்டு நானே கிறிஸ்து என்று அநேகரை வஞ்சிப்பார்கள்.*

கடைசிக்கால அடையாளமாக கர்த்தர் சொல்லியிருக்கும் இந்த வார்த்தைகள் இக்காலங்களில் வெகுவேகமாக நிறைவேறி வருகின்றன.

சாத்தான் தன்னுடைய வஞ்சகப்பணியை தேவனுடைய பிள்ளைகள் நடுவில் மூன்று பிரிவுகளாக செயல்படுத்துகிறான்.

முதலாவது கள்ளப்போதகம், அதாவது வசனத்தைப் புரட்டி வெகுசாதுர்யமாக உபதேசங்களைப் புகுத்துவது. நாம் பின்பற்ற வேண்டிய மூல உபதேசங்களை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக வழிவிலகச் செய்வது.

மூல உபதேசங்களிலிருந்து வழிமாறிய அல்லது வழிமாற்றும் கள்ள உபதேசங்கள் பற்றி சொல்ல வேண்டுமானால் அதற்கென்றே நிறையப்புத்தகங்கள் எழுத வேண்டிவரும். நடைமுறையில் லட்சக்கணக்கில் உலாவருகின்றன.

இயேசு கடவுளல்ல: சாதாரண தேவதூதன்தான். கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசி. பிதா மட்டும் தான் தேவன் என்கிறது ஒரு சபையின் உபதேசம். இதைச் சொல்ல லட்சக்கணக்கில் பத்திரிகை வெளியிட்டு வீடுவீடாக சுற்றி வருகிறார்கள்.

இவர்களது குறியெல்லாம் கிறிஸ்தவர்கள் மாத்திரமே. நல்ல விசுவாசிகளை விடாப்பிடியாக சந்தித்து தங்கள் சாதுரியமான பேச்சினால் விசுவாசத்தைவிட்டு அவர்களை வழிவிலகச் செய்து விடுவார்கள்.

சாத்தானின் இரண்டாவது வஞ்சகம், கள்ளத்தீர்க்கதரிசனம், தரிசனம் என்ற பெயரில் ஜனங்களை கர்த்தரை விட்டு வழிமாறச் செய்வது. பொய்யான குறிகளைச் சொல்வது.

உங்கள் வீட்டின் நடு ஹாலில் ஈசான மூலையில் தகடு பதிக்கப் பட்டிருக்கிறது என்றோ, உங்களுக்கு விரோதமாக நாலாவது

வீட்டுக்காரன் ஏவல் செய்திருக்கிறான் என்றோ சொல்லி உடுக்கை யடிப்பது. திருமண வயதை எட்டிய மகளுக்கு மாப்பிள்ளை வட கிழக்கு திசையிலிருந்து புறப்பட்டு வருவான் என்றோ, கர்த்தர் கொண்டு வரும் மாப்பிள்ளையின் பெயர் ஆ..வில் ஆரம்பிக்கும் என்றோ சொல்லி கப்ஸா விடுவது போன்றவற்றில் ஆரம்பித்து வளைகுடாப் போர்கள் வரை வாய்கூசாமல் அள்ளிவிட்டு மக்களின் மனங்களை கவர்ந்துகொள்வது.

இக்காலத்தில் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு பஞ்சமேயில்லை. ஊருக்கு நூறுபேர் பார்க்கலாம். அவ்வளவு மலிவு.

சாத்தானின் மூன்றாவது வஞ்சகம் கள்ளக்கிறிஸ்துக்கள். இவர்கள் அடையாளம், உண்மையான கிறிஸ்துவாகிய இயேசுவை மறுதலித்து தங்களைத் தாங்களே கிறிஸ்து என்று பிரகடனப் படுத்துவதே.

இதில் கள்ளக்கிறிஸ்துக்களிலிருந்து மற்றவர்கள் வித்தியாசமா னவர்கள்.

கள்ளக்கிறிஸ்துக்கள் தங்களையே கடவுள் என்பார்கள். எல்லா மதங்களும் ஒன்றுதான் என்பார்கள். நதிகள் பல, கடல் ஒன்றுதானே என்பார்கள் தெய்வீகமாக சிரித்தபடியே. வெளி நாடுகளில் தலைக்கு மேல் மேகம் வரவழைத்துக் காட்டுகிறார்கள். இந்தியாவில் வாயிலிருந்து லிங்கம்.

எல்லா மத நம்பிக்கையிலும் தன்னைப்பற்றி சொல்லியிருப்ப தாக சொல்லிக்கொள்வார்கள். நிறைய கிறுக்குத்தனமாக நடந்து கொள்வார்கள். கிளி பேசுவது கேட்கிறது.. குயில் பாட்டின் அர்த்தம் புரிகிறது என்பார்கள். வானம் பார்த்து அடிக்கடி சிரித்துக் கொள்வார்கள். ரொம்பவும் நிதானமாக வார்த்தைக்கு வார்த்தை இடம் விட்டுப்பேசுவார்கள். கொஞ்சம் விழிப்புடன் இருந்தால் இவர்களை அடையாளம் கண்டுகொள்வது சுலபம்.

ஆனால் கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளப்போதகர்களும் இயேசுவை முன்னிருத்தித்தான் பேசுவார்கள். எழுதுவார்கள். தாங்கள் தான் கிறிஸ்து என்கிற ரீதியில் பேசமாட்டார்கள். ஆனால் தாங்கள் இயற்கைக்கு மேற்பட்டவர்கள் என்று காட்டிக்கொள்ள ரொம்பவே விரும்புவார்கள். இவர்களைக் கண்டுபிடிப்பது தான் ரொம்பவும் கஷ்டம்.

ஆனால் எது எப்படியோ இவர்கள் யாவருமே உங்கள் வாழ்க்கைக்கும் விலையேறப்பெற்ற உங்கள் இரட்சிப்புக்கும் நஷ்டம் உண்டாக்குபவர்கள். நீங்கள் தான் இவர்கள் விஷயத்தில் கவனமாக நடந்துகொள்ள வேண்டும்.

நீங்கள் தேவனுடைய வேதவசன அறிவைப் பெருக்கிக் கொள்ளாதவரை இவர்களால் உண்டாகும் ஆபத்துக்களுக்கு ரொம்பவே சமீபமாக இருக்கிறீர்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

சில வருடங்களுக்கு முன்பு கொரியாவில் உள்ள ஒரு சபை ஒன்றின் போதகர் தன்னுடைய சபை விசுவாசிகளிடம் இவ்வாண்டு டிசம்பர் 31ம் தேதி இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை சம்பவிக்கும். எனவே நாம் அன்று விழிப்புடன் காத்திருக்க வேண்டும் என்றார் அதிரடியாக.

சொன்னால் நம்ப மாட்டீர்கள். ஏறத்தாழ பத்தாயிரம் ஜனங்கள் தங்கள் கைகளில் வெல்கம் ஜீசஸ் என்று அட்டைகளை வைத்துக் கொண்டு இயேசுவை வரவேற்கக் காத்திருந்தார்கள்.

சிலர் இயேசு வரும்போது தாங்களும் உடன் பரலோகம் சென்று விடுவோம் என்கிற நம்பிக்கையில் பரலோகத்தில் உபயோகப்படுத்துவதற்கென்று நாலைந்து செட் உடைகள், கொஞ்சம் பணம், ஷேவிங் செட், பாங்க் பாஸ்புக் போன்றவற்றை எடுத்துக்கொண்டு சூட்கேஸ் சகிதம் புறப்பட்டிருந்தனர்.

பெண்கள் மறக்காமல் தங்கள் மேக்கப் சாதனங்களை பெட்டியில் எடுத்துக்கொண்டார்கள். குழந்தைகள் பரலோகத்தில் விளையாட தங்களுடன் பார்பி, மற்றும் டெடிபியர் பொம்மைகளுடன் காத்திருந்தனர்.

டெலிவிஷன் நிருபர்கள் நூற்றுக்கணக்கில் ஆலயத்தில் கூடியிருந்து செய்தி சேகரித்தார்கள். செய்தி சேனல்களில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

நேரம் நெருங்க நெருங்க பரபரப்பு தொற்றிக் கொண்டது.

"நீங்கள் சொல்லும் வருகையின் நேரம் எப்போது இருக்கும்?" டி.வி. நிருபர்களின் முழங்கையளவு மைக்குகள் போதகரின் வாயை நோக்கி நீண்டன.

"சரியாக பன்னிரண்டு மணிக்கு." என்றார் போதகர் நிதானமாக.

காத்திருந்தார்கள்... காத்திருந்தார்கள்... காத்திருந்தார்கள்...

மணி பன்னிரண்டாகி, ஒன்றாகி, இரண்டாகி, காலையாகியது. இயேசு தான் வரவில்லை.

பத்தாயிரம் பேரும் தொங்கிய தலையுடனும், தங்கள் சூட்கேஸ்களுடனும் வீடு திரும்பினார்கள். இது 2000மாவது ஆண்டின் துவக்கத்தில் கொரியாவில் நடைபெற்ற சம்பவம்.

இயேசுவின் வருகை என்பது நடக்க வேண்டிய சம்பவம்தான். ஆனால் எப்போது என்பதுதான் யாருக்கும் தெரியாது. இதுபற்றி வேதம் என்ன சொல்கிறது தெரியுமா?

*மத்தேயு 24:36*
*அந்த நாளையும் நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்.*

இவ்வளவு தெளிவாக வேதம் வருகையின் நாளைக் குறித்துச் சொல்லியிருக்க, டிசம்பர் 31ம் தேதி இரவு 12.00 மணிக்கு இயேசு வருவார் என்று போதகர் பேசியதற்கும், பத்தாயிரம் பேர் அதை நம்பியதற்கும் என்ன காரணம்?

வேதத்தில் அவர்களுக்குண்டான அறியாமைதான் காரணம். இல்லையா?

உலக வரலாற்றில் இது வரை 22,000 பேர் தங்களைக் கிறிஸ்து என்று சொல்லியிருக்கிறார்கள். அதை மக்களும் 22,000 முறை நம்பி யிருக்கிறார்கள். கூட்டம் கூட்டமாக மோசம் போயிருக்கிறார்கள். என்றாலும் மறுபடியும் மறுபடியும் சளைக்காமல் ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். எப்படி?

பைனான்சில் பணம் போட்டு ஏமாந்தவர்களை தினசரி செய்தி தாள்களில் படித்தாலும், தங்கள் பகுதியில் ஒருவர் புதிதாக பைனான்ஸ் ஆரம்பித்தால் எதைப் பற்றியும் யோசிக்காமல் பணம் போட்டு விடுவதில்லையா? அதுமாதிரிதான்.

காரணம்- அறியாமை. வேதவசனத்தில் அறியாமை

இதுவே பின்னாட்களில் பெருகி, ஏராளமாக கள்ளக் கிறிஸ்துக்கள் எழும்புவதற்கும், ஜனங்கள் மோசம் போவதற்கும்

இந்த அறியாமைதான் காரணமாக அமையும் என்பதில் சந்தேக மில்லை.

சாத்தான் இன்றைக்கு அநேகரை புல்மேய விட்டிருக்கிறான்.

இவர்களில் கள்ளக்கிறிஸ்துக்களை விட, கள்ளப் போதகர் களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் தான் மிகவும் ஆபத்தானவர்கள்.

கள்ளக்கிறிஸ்துவானால் தன்னையே கிறிஸ்து என்று வர்ணித் துக்கொண்டு, வாயிலிருந்து சிலுவை எடுப்பது, விரலைச் சொடுக்கி மெழுகுவர்த்தி ஏற்றுவது போன்ற மலிவான அற்புதங்கள் செய்து ஒரு கூட்டம் பேரை ஏமாற்றுவான். கடைசிக்கட்டமாக, தான்தான் கடைசிகாலக் கல்கி, குமுதம் என்று அவிழ்த்துவிட்டு எல்லா மதத் தினரையும் கவர முற்படுவான்.

ஆனால் இந்தியக் கிறிஸ்தவர்கள் இந்த விஷயத்தில் ரொம்பவும் கெட்டி. ஒருவன் தன்னை கிறிஸ்து என்று பிரகடனப் படுத்தினாலே சுதாரித்துக் கொள்வார்கள். நம்ப மாட்டார்கள்.

"நாங்க உண்மையான கிறிஸ்துவையே முழுசுமாக நம்புவ தில்லை.. இவனை நம்புவோமாக்கும்?" என்பார்கள் பல்லிடுக்கில் சிரித்தபடியே.

ஆனால் கள்ளப்போதகர்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் அப்படியல்ல.

அவர்கள் தங்களைக் கிறிஸ்து என்று சொல்லாததாலும், இயேசுவின் பெயரையே உச்சரிப்பதாலும், அவர்கள் பேசுகிற உபதேசங்களில் மட்டும் கலப்படம் செய்வதை கிறிஸ்தவர்கள் கண்டுகொள்ள மாட்டார்கள். எனவே, கிறிஸ்தவர்களை ஏமாற்ற கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளப்போதர்களும்தான் ஏற்றவர்கள். வேஷப்பொருத்தம் இவர்களுக்குத்தான் ரொம்பவும் சரியாகப் பொருந்தும்.

ரொம்பவும் கூர்ந்து பார்த்தால் மாத்திரமே இவர்கள் போர்த்தி யிருக்கும் ஆட்டுத்தோல் கண்ணுக்குத் தெரியும். மற்றபடி மேலோட்டமாகப் பார்த்தால் சாதுவான ஆடுகள்தான். பால்குடிக் காத பூனை ரகம்.

நீங்கள் கொஞ்சம் தங்களை சந்தேகப்படுவது மாதிரித்

தெரிந்தால் போதும், உடனே சுதாரித்துக் கொள்வார்கள். உடனேயே நடிப்பில் இன்னும் கொஞ்சம் திறமை காட்டி, உங்களை சிந்திக்க அவகாசமில்லாமல் பண்ணிவிடுவார்கள். நாட்டி!

கிறிஸ்தவத்தின் அடிப்படை போதகங்களை மறுதலித்து நவீன போதகங்களை புகுத்தி ஜனங்களை மயக்குவதில் இந்தக் கள்ளப் போதகர்கள் மிகவும் சமர்த்தர்கள்.

கிறிஸ்து உனக்குள் இருப்பதால் நீதான் கிறிஸ்து என்று ஒரு நூதன உபதேசம் பரவிவருகிறது. இதைப் பலமாக நம்பும் பலபேர் தங்களை கிறிஸ்துவாகவே பாவித்துக்கொள்கிறார்கள். இது நடப்பது அமெரிக்காவில். இன்னும் கொஞ்சநாட்களில் இந்தியாவில்.!

1969-ல் பல்வேறு சபைகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கு ஒரு வாக்கெடுப்பு நடந்தது. 10,000 ஊழியர்கள் கலந்து கொண்டார்கள். அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர்கள் அளித்த பதிலிலிருந்து தயாரிக்கப்பட்ட புள்ளி விபரம் இப்படிச் சொல்கிறது.

இயேசு பரிசுத்த ஆவியினால் பிறக்கவில்லை. கன்னியின் வயிற்றிலும் தோன்றவில்லை என்று நம்புவதாக எபிகோப் பிலியன்ஸ் பிரிவினரில் 44 சதவீதம் பேரும், பாப்டிஸ்ட் பிரிவில் 46 சதவீதம் பேரும் வாக்களித்துள்ளனர். இதே கருத்திற்காக பிரஸ்பிட்டிரியன் பிரிவிலிருந்து 49 சதவீதம் பேரும், மெத்தடிஸ்ட் பிரிவிலிருந்து 60 சதவீதம் பேரும் வாக்களித்துள்ளனர்.

இதே புள்ளிவிபரம் 1989-ல் எடுக்கப்பட்டபோது எபிகோப் பிலியன்ஸ் பிரிவினர் 63.3 சதவீதமாகவும், பாப்டிஸ்ட் பிரிவினர் 70 சதவீதமாகவும், பிரஸ்பிட்டீரியன் பிரிவினரிலிருந்து 60 சதவீதமாக வும் மெத்தடிஸ்ட் பிரிவினர் 80 சதவீதமாகவும் வாக்களித் துள்ளனர்.

விசுவாச மறுதலிப்பு எவ்வளவு அதிகமாய் பெருகியிருக்கிறது என்று பாருங்கள்.

இன்றைக்கு அங்கிங்கெனாதபடி சாத்தான் எழுப்பியிருக்கிற கள்ளப்போதர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காது.

பாவங்களை சீட்டில் எழுதி தலைமைப் போதகரிடம்

கொடுத்துவிட்டால் அவர் அதைப் படித்துவிட்டு அந்தப் பாவங்களை மன்னித்து, "இந்தப் பாவங்கள் மன்னிக்கப்பட்டன." என்று ஒரு சீல் அடித்து நமக்கு திருப்பியனுப்பிவிடுவார். உடனே உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று நீங்கள் சந்தோஷப் பட்டு களிகூர வேண்டியது. இப்படி ஒரு உபதேசம் இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட சபையில் இன்னும் இருக்கிறது.

வெளியூர் அன்பர்கள் தபால் மூலம் பாவமன்னிப்புப் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. வருங்காலத்தில் அதில் இன்னும் கொஞ்சம் நவீனம் கூட்டி இன்டெர்நெட்டில் அல்லது ஈ-மெயில் மூலமோ கூடப் பாவமன்னிப்பு வழங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சபைகளை விட்டு விடுங்கள். தனிநபர் செய்திகளிலும் வசனம் ஏற்காத போதனைகளை செய்து, குறுக்கே பாய்ந்து முன்னேறி விடும் ஊழியர்களும் உண்டு.

நாக்குத்தான் நமக்கு நன்மை தீமைகளை உருவாக்குகிறது என் பார் ஒருவர். நம் நாக்குதான் நமக்கு நன்மை தீமைகளை தருமென் றால் கடவுளுக்கு நம்மிடத்தில் என்னவேலை? என்று யாருக்கும் கேட்கத் தோன்றாது. நண்பர் புத்தகம் வெளியிட்டால் விற்பனை வானம் தாண்டும்.

பாவம் மனிதனின் அடிவயிற்றில்தான் உறைந்திருக்கிறது. வாந்தி பண்ணிவிட்டால் சரியாகிவிடும். பாவம் வாந்தியில் வெளிவந்து விடும் என்பார் இன்னொருவர். அப்படியானால் நேற்றைக்கு குடல்வால் ஆபரேஷன் செய்து கொண்ட என் நண்பர் விடிய விடிய வாந்தி பண்ண வைக்கப்பட்டாரே, அவர் பரிசுத்த மாகிவிட்டாரா என்று கேட்கத் தோன்றாது. ஒரு கூட்டம் கைதட்டி கேட்டுக் கொண்டிருந்து விட்டு கருத்தாக வாந்தியெடுத்துக் கொண்டிருக்கும்.

வார்த்தைகளையும், வசனங்களையும் தெளிவாகப் புரிந்து கொள்ளாதவரை கள்ளப் போதகங்களைக் கண்டுகொள்வது அவ்வளவு சுலபமில்லை.

"தேவ வார்த்தைகளையும் வசனங்களையும் மாத்திரம் நிறையப் படித்தால் போதுமா? இவர்களிடமிருந்து தப்பிக் கொள்ள முடியுமா?"

ரொம்ப நல்ல கேள்வி.

கள்ளப்போதகர்கள் எழும்பாமலிருப்பதற்கும், நாம் அவர்கள் வலையில் சிக்கிக்கொள்ளாமல் இருப்பதற்கும் இது தவிர, இன்னும் ஒன்றிரண்டு காரியங்களும் இருக்கிறது. உட்காருங்க ளேன், நாம் இது பற்றி இன்னும் கொஞ்சம் விரிவாகப் பேசலாம்.

# புல்மேயும் ஓநாய்கள் - II

## கள்ளப்போதகமும், அதற்குத்தப்பும் வழியும்

இரண்டாவது அத்தியாயத்திற்குள் போவதற்கு முன்பாக தீர்மானமாக சில காரியங்களை உங்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

முதலாவது இக்கட்டுரை யாரையும், அல்லது எந்தவொரு சபையையும் மனதில் வைத்துக்கொண்டு எழுதப்பட்டதல்ல.

எங்கள் ஊர் கிழக்குத் தெருவிலுள்ள சபையின் பாஸ்டர் எப்படி? ஓநாய் வகையைச் சார்ந்தவரா? என்பது போன்ற கேள்வி களுக்கு என்னிடத்தில் பதில் இல்லை.

இக்கட்டுரை பொதுப்படையாக கள்ள உபதேசம் மற்றும் கள்ள உபதேசிகள் பற்றிய எச்சரிக்கை கொடுப்பதற்காக எழுதப் பட்டுள்ளதேயல்லாமல் யாரையும் குறிவைத்து எழுதப்பட்டதல்ல. தவிரவும் எனக்கு எல்லா சபைகளையும், அல்லது ஊழியர்களை யும் பற்றி தெரியாது.

எனவே, தனித்தனியாக சபைகள் மற்றும் பாஸ்டர்களின்

பெயர்கள் மற்றும் உபதேசங்களைச் சொல்லி அவர்கள் பற்றி என்னிடம் அபிப்ராயம் கேட்பதை தவிர்க்கவும்.

சரி. நாம் விஷயத்துக்கு வருவோம்.

கள்ள வேலையாட்கள் தோன்றுவதற்கு காரணம் என்ன என்பதை கண்டறிவதற்காகத்தான் இந்த இரண்டாம் அத்தியாயத் தையே ஆரம்பித்தோம். இல்லையா?

கள்ள வேலையாட்கள் தோன்றுவதற்கு சாத்தான் தான் காரணம் என்று ஒற்றைவரியில் சொல்லிவிடுவீர்கள்.

அது சரிதான். என்றாலும் பலசமயங்களில் நம்மைப் போன்ற விசுவாசிகளும் கள்ள வேலையாட்கள் தோன்றுவதற்கு காரணமாக அமைந்துவிடுகிறோம். ஏற்றுக் கொள்ளக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். என்றாலும் உண்மை அதுதான்.

முதலாவது, ஊழியர்களை விக்கிரகமாகக் கொள்ளும் விசுவாசிகளின் மனோபாவம்தான் இதற்கு பிரதான காரணம்.

ஊழியர்கள் மீது அன்பும், மரியாதையும் இருக்க வேண்டியது தான். ஆனால் அது எல்லை தாண்டியதாக இருந்துவிடக் கூடாது. அவர்களை இயற்கைக்கு மேற்பட்டவர்களாகவும், சர்வ வல்லமை பொருந்தியவர்களாகவும் நினைத்து விடக்கூடாது.

அவர்களும் நம்மைப்போல பாடுள்ள மனிதர்கள்தான் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஊழியர்கள் தேவனுடைய வேலையாட்கள்தான். தேவனல்ல.

தேவனுக்கு கொடுக்கும் கனத்தையும், மகிமையையும் ஊழியர் களுக்கு கொடுக்கும்போதுதான் ஊழியர்கள் விக்கிரகங்களாகி விடுகிறார்கள்.

"இது என்ன தெரியுமா?"

"தெரியுமே.. கர்ச்சீப்."

"ஆனால் இது சாதாரணக் கர்ச்சீப் அல்ல, இது (பிரபல ஊழிய ரின் பெயர்) ஐயாவுடைய கர்ச்சீப். எங்கள் ஊர் கன்வென்ஷனுக்கு வந்திருந்தபோது தவறவிட்டுப் போய்விட்டார். என் கையில் கிடைத்து விட்டது. உண்மையிலேயே ரொம்ப பவர்புல் சார். ஒரு

காய்ச்சல் தலைவலி என்றால் இந்தக் கர்ச்சீப்பை முகத்தில் போட்டுக் கொண்டால் நொடியில் நிவாரணம் கிடைத்துவிடுகிறது. வேண்டுமானால் ஒரு ஓரத்தில் கொஞ்சமாய் வெட்டி உங்களுக்கும் தரட்டா? பயன்படுத்திப் பாருங்கள். பலன் உறுதி.."

ஊழியர்கள் மீது இது மாதிரி அபரிமிதமான பற்று வைத்தி ருக்கிற விசுவாசிகளை வெகு சாதாரணமாக நிறையவே பார்த்திருப் பீர்கள். மேலே சொல்லப்பட்ட சம்பவம் கூட என் கற்பனையல்ல. நடந்தது. நானே நேரடியாக கேட்டது.

ஊழியர்கள் மீது அதீதப் பற்றுக்கொண்ட இது மாதிரியான விசுவாசிகள்தான் கள்ள ஊழியர்கள் எழும்புவதற்குக் காரணமாக இருப்பார்கள்.

அப்பாவிகளாக "தேமே" என்றிருக்கும் ஊழியர்களையும் இவர்கள் தங்கள் செயல்களால் எண்ண வேண்டியதற்கும் மிஞ்சி எண்ண வைத்துவிடுவார்கள்.

இவர்கள் ஊழியர்களைப் பற்றி முகத்திற்கெதிராகவே புகழ்ந்து பேசி, கால்களில் விழுந்து நமஸ்கரித்து, அபரிமிதமான பக்தி காட்டுவதால் நாளாவட்டத்தில் ஊழியரின் மனம் தன்னை ஒரு விசேஷமானவராக எண்ணிக்கொள்ள ஆரம்பித்து விடுகிறது. தான் சொன்னால் எதுவும் சரியாகத்தான் இருக்கும் என்று அவரை நம்ப வைத்துவிடுகிறது.

பிறகுதான் அவர் வேதத்தை மையப்படுத்தாமல், தன் அறிவை அல்லது அனுபவத்தை மையப்படுத்தி உபதேசங்களை உருவாக்க ஆரம்பிக்கிறார். கொஞ்சநாளில் தன்மை மாற ஆரம்பித்து விடுகிறார்.

ஊழியர்களை நேசியுங்கள். மதியுங்கள். அவர்களை கனம் பண்ணுங்கள். அன்புகூருங்கள்.

ஆனால் அவை எல்லாவற்றையும் வேதத்திற்கு உட்பட்டும், கிறிஸ்துவுக்கு அடுத்ததாகவும் வைத்துக்கொள்ளுங்கள். ஊழியர் கள் சொல்வது சரியாக இருக்குமானால் அதை அப்படியே ஏற்றுக்கொள்ளும் நீங்கள், அதேசமயம் அது தவறாயிருக்குமா னால் மறுக்கவும் பழகிக்கொள்ளுங்கள். சமநிலையாக வசனம் சார்ந்து இருங்கள்.

ஊழியர்களை விக்கிரகங்களாக்கி உலாவ விடாதீர்கள். ஏனெனில் தேவன் விக்கிரகங்களை அருவெறுக்கிறார்.

ஊழியர்களை சரியானவர்களாகவும், வேதத்தை மையமாக வைத்து ஊழியம் செய்கிறவர்களாகவும் வைத்துக் கொள்வதில் விசுவாசிகளான நம்முடைய பங்கு அதிகமானது.

வேதத்திற்கு அப்பாற்பட்டுச் சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள் என்ற நிலை வந்தால் ஊழியர்கள் வழிமாற மாட்டார்கள். கவனமாயிருப்பார்கள்.

போலியான ஊழியர்கள் உருவாவதற்கு நாமே காரணமாக இருந்து விட்டு பின்னர் கவலைப்படுவதில் நியாயமில்லை. 1சாமுவேல் 13ம் அதிகாரத்தில் ஒரு சம்பவம் இருக்கிறது பாருங்கள்.

சவுல் தன் படைகளுடன் கில்காலில் இருந்தபோது தேவனுக்கு பலி செலுத்தும்படி சாமுவேல் தீர்க்கதரிசியை அழைத்திருந்தார்.

அவர் வர சற்று தாமதமானபோது, தானே முந்திக்கொண்டு தேவனுக்கு சர்வாங்க தகனபலியை செலுத்தினான்.

பலி செலுத்துவது என்பது அந்நாட்களில் தேவனுடைய ஊழியர்கள், அதாவது ஆசாரியர்கள் மாத்திரமே செய்யக்கூடிய பணி என்று தேவனால் அறிவிக்கப்பட்டிருந்தது. மற்றவர்கள் செய்வதற்கு வேதம் அவர்களை அனுமதிக்கவில்லை. அது அரசனாயிருந்தாலும் சரி. பிரபுவாயிருந்தாலும் சரி.

அப்படியிருக்க சவுல் துணிந்து ஊழியர்கள் செய்ய வேண்டிய பணியை தாமே செய்ததால் தேவனுடைய கோபத்திற்குள்ளானார்.

அது முதலாக சவுலின் ஆவிக்குரிய வாழ்வில் சறுக்கல்கள் உண்டாக ஆரம்பித்தது. கர்த்தர் சவுலைத் தள்ளினார். வேறொரு மனிதனை ராஜாவாக்க திட்டம் செய்தார்.

சர்வாங்க தகனபலி செலுத்துவது என்பது ராஜாக்களுக்குரியதல்ல, அது ஆசாரியர்கள் மாத்திரமே செய்யக்கூடியது என்பது சவுலுக்குத் தெரியாதா என்ன?

தெரியும்.

பின்னர் ஏன் இந்தத் துணிகரமான காரியத்தில் இறங்கினார்?

சவுலின் மனதில் தன்னை எண்ண வேண்டியதற்கும் மிஞ்சி எண்ணியிருந்ததே இந்த துணிகரத்திற்குக் காரணம். தன்னை சாமுவேலுக்கு சமமாக ஒரு தீர்க்கதரிசியாகவே சவுல் எண்ணிக் கொண்டார். ஆகவேதான் தானும் தேவனுக்கு பலி செலுத்த முடியும் என்று எண்ணித் துணிவாக செயல்பட்டார்.

இந்த துணிவிற்கும் ஒரு பின்னணிக் காரணம் இருந்தது. அது ஜனங்களின் புகழ்ச்சி.

ஆம். 1சாமுவேல் 10 ம் ஆதிகாரத்திற்கு வந்து பாருங்கள் நான் சொல்வதின் காரணம் புரியும்.

*1 சாமுவேல் 10: 9-11*

*9. அவன் (சவுல்) சாமுவேலை விட்டுப்போகும்படி திரும்பின போது தேவன் அவனுக்கு வேறே இருதயத்தைக் கொடுத்தார். அந்த அடையாளங்கள் எல்லாம் அன்றைய தினமே நேரிட்டது.*

*10. அவர்கள் அந்த மலைக்கு வந்தபோது, இதோ தீர்க்க தரிசிகளின் கூட்டம் அவனுக்கு எதிராக வந்தது. அப்பொழுது தேவனுடைய ஆவியானவர் அவன் மேல் இறங்கினதினால், அவனும் அவர்களுக்குள்ளே தீர்க்கதரிசனம் சொன்னான்.*

*11. அதற்கு முன்னே அவனை அறிந்தவர்கள் எல்லோரும் அவன் தீர்க்கதரிசிகளோடேயிருந்து தீர்க்கதரிசனம் சொல்லுகிறதைக் கண்டபோது, கீசின் குமாரனுக்கு வந்தது என்ன? சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ என்று அந்த ஜனங்கள் ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள்.*

சவுல் கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்டு இராஜாவாகத் திரும்பிப் போகையில் கர்த்தருடைய ஆவியானவர் அவர் மேல் இறங்கினார். உடனே அவருக்கு எதிரே வந்த தீர்க்கதரிசிகளின் கூட்டத்தோடு சவுலும் நின்று தீர்க்கதரிசனம் சொல்ல ஆரம்பித்தார். இதை கவனித்த ஜனங்கள் “சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ” என்று ஒருவரொடொருவர் பேசிக் கொண்டனர்.

அதை ஒரு பழமொழியாகவும் ஆக்கிவிட்டனர். இந்த வார்த்தை களை அடிக்கடி ஜனங்களின் வாயிலிருந்து கேட்ட சவுல் தன்னை ஒரு தீர்க்கதரிசியாகவே கற்பனை பண்ணிக் கொண்டார் (1 சாமு 10: 10-12)

சவுலுக்கு ஒரு பெரிய பலவீனம் உண்டு. தன்னை சுற்றியிருக்கிறவர்களின் பேச்சுக்கு அவர் அதிக முக்கியத்துவம் கொடுத்து அதை கண் மூடித்தனமாக நம்புவார். இதனால் தான் சவுல் கொன்றது ஆயிரம்; தாவீது கொன்றது பதினாயிரம் என்று ஜனங்கள் ஆர்ப்பரித்த போது அவர்கள் வார்த்தைக்கு முக்கியத் துவம் கொடுத்து, ஜனங்கள் எனக்கு ஆயிரம் கொடுத்தார்கள். தாவீதுக்கோ பதினாயிரம் கொடுத்தார்கள் என்று சொல்லி அது முதல் தாவீதைப் பகைக்க ஆரம்பித்தார் (1 சாமுவேல் 18:7-9)

தேவனுக்குக் கீழ்ப்படியாமல் பாவம் செய்தபோது கூடப் பாருங்கள். ஜனங்களின் சொல்லை, தான் கேட்டதுதான் அதற்கு காரணம் என்றார்.

*1 சாமுவேல் 15 : 24*
*... உம்முடைய வார்த்தையை மீறினதினால் பாவம் செய்தேன். நான் ஜனங்களுக்கு பயந்து அவர்கள் சொல்லைக் கேட்டேன்.*

சவுல் விழுந்துபோனதற்கு சுற்றியிருந்த ஜனங்கள் ஒரு காரணமாக இருந்தார்கள்.

இன்றைக்குப் பிரச்சனை என்ன தெரியுமா?

சவுல் காலத்திய ஜனங்கள் இன்றைக்கும் நம் நடுவில் இருப்பதுதான். ஊழியர்கள் கவனமாக இராவிட்டால் அவர் களைப் புகழ்ந்தே ஓநாயாக மாற்றி விடுவார்கள்.

பிரபல தேவமனிதர் டி.எல்.மூடி ஒரு முறை வல்லமையாக பிரசங்கித்துவிட்டு மேடையிலிருந்து இறங்கினார். உடனே கூட்டத்திலிருந்து ஒரு மனிதர் வேகமாக ஓடிவந்து, அவர் கையை பலமாக பிடித்துக் குலுக்கியபடியே, “மிஸ்டர். மூடி இன்றைக்கு அற்புதமாக பிரசங்கித்தீர்கள்'' என்றாராம். அதற்கு மூடி, “இதை நீர் எனக்கு சொல்லும் முன்பே சாத்தான் என்னிடம் சொல்லி

விட்டான்" என்றாராம். அத்தோடு ஆசாமி கப்சிப்.

இப்படி அதீத பக்தியாளர்களின் வாயை அடைக்க கூடிய ஞானம் இல்லாவிட்டால் ஊழியர்களுக்கு ஆபத்துதான்.

தமிழ்நாட்டில் தேவ ஊழியர்களை உச்சத்தில் வைத்து தவறச் செய்ய நிறைய கண்ணிகள் உண்டு.

காலில் விழுவது.. மலர் மாலைகளை அணிவிப்பது.. ஊழியர்களின் கர்ச்சீப் மற்றும் பொருட்களை புனிதப் பொருட்களாகக் கருதுவது.. கிறிஸ்துவின் பெருமைகளைப் பேசுவதை விட்டு ஊழியர்களை தடாலடியாகப் புகழ்வது.. என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

1985ம் ஆண்டில் ஒரு வீட்டின் ஜெப அறையில் கிறிஸ்துவின் படமும் பக்கத்திலேயே ஒரு பிரபல ஊழியரின் படமும் மாட்டப் பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தேன். காரணம் கேட்ட போது அதிர்ச்சியடைந்தேன்.

"ஐயாவின் கூட்டத்தில் கலந்து கொண்டுதான் நாங்கள் பல நன்மைகளை பெற்றுக் கொண்டோம். எந்த ஒரு வேலையைச் செய்வதாயிருந்தாலும் ஐயாவின் படத்தின் முன்பாக ஒரு இரண்டு நிமிடம் நின்று பிரார்த்தனை செய்துவிட்டுப் போனால் காரியம் ஜெயமாகி விடுகிறது."

அடக் கொடுமையே...!

இது மாதிரி ஆட்கள் தான் ஆபத்தானவர்கள். இவர்களுக்கு நீங்கள் உண்மையைப் புரியவைத்து இயேசுவின் மேல் மட்டுமே நம்பிக்கை கொள்ளும்படி செய்யாவிட்டால் நிறைய ஊழியர்களைக் கவிழ்த்துவிடுவார்கள்.

வழிகாட்டி மரங்களை வழிகளாக்கிவிடக் கூடாது.

ஊழியர்களும் இது விஷயத்தில் மிகவும் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். ஜனங்கள் உணர்ச்சிப் பெருக்கில் உங்களைக் கடவுளைப்போல் பார்த்தாலும் நீங்கள் உண்மையான கடவுள் யார் என்று நேர்மையாகக் காட்ட வேண்டும்.

பவுலிடம் அந்த நேர்மையிருந்தது. அதனால்தான் ஜனங்கள்

தன்னைக் கடவுளாக நினைத்து பூமாலைகளைக் கொண்டு வந்து போட முயற்சித்த போது, தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, "மனுஷரே.. ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப் போன்ற மனுஷர்தானே? நீங்கள் மெய்யான தேவனிடத்தில் திரும்புங்கள்," என்று சொல்ல முடிந்தது. (அப் 14: 13-15)

இரண்டாவதாக கள்ளப்போதகர்கள் தோன்றுவதற்கு காரணம் ஜனங்களின் அறியாமையே. அறியாமையைப் பயன் படுத்தித்தான் அநேகம் கள்ளப்போதகர்கள் துணிகரமான கள்ள உபதேசங்களை உருவாக்கிவிடுகிறார்கள்.

நம்மில் பலர் கூட்டங்களிலும் ஆராதனைகளிலும் வேதாகமத் தை திறப்பதை தவிர மற்ற எந்த சமயத்திலும் அதைப் படிப்பதும் இல்லை. பயன்படுத்துவதும் இல்லை.

இன்னும் சிலர் கூட்டங்களிலும் ஆராதனைகளிலும் வேதத்தை கொண்டு வந்தாலும் அதைப் பிரித்துப் படிப்பதில் நாட்டம் காட்டுவதில்லை.

வேத அறிவைப் பெருக்கிக் கொள்வதில் விசுவாசிகளுக்கு சோம்பல் கூடவே கூடாது.

சபை ஆராதனை மற்றும் கூட்டங்களுக்கு அப்பாலும் உங்கள் வேதத்திற்கு உங்களிடத்தில் நிறைய வேலையிருக்கிறது. கிரமமாக வேதத்தை வாசித்து அதை அறிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு கூட, வேதத்தை அறிந்து கொள்ள அவர் தந்துள்ள ஏனைய வசதிகளையும் முறையாக பயன்படுத்திக் கொள்ளுங்கள். அப்போதுதான் உங்கள் வேத அறிவு விருத்தியாகும்.

வேத அறிவு விருத்தியாகாத பட்சத்தில் கிறிஸ்தவ ஜீவியத்தில் நிலைப்பது என்பது யாருக்குமே சாத்தியமில்லாத விஷயம்.

எல்லாம் சரிதான். வேத அறிவில் வளர்வது எப்படி என்றும் இரண்டு வரி சொல்லிவிட்டால் நலமாயிருக்குமே.

கண்டிப்பாய் சொல்கிறேன். முதலாவது வேதத்தை கர்த்தர் யாருக்குப் போதிப்பார் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

ஏசாயா 28:9 இதற்கு விடை சொல்கிறது. பால்மறந்த குழந்தைகளைப் போல தேவனுடைய வார்த்தையை அறிந்து கொள்ள விரும்புபவர்க்கே அவர் தம்முடைய வசனங்களை உபதேசிப்பாராம்.

எல்லாம் தெரிந்த மேதைகளைப் போன்ற மனோபாவத்துடன் தேவனுடைய வேதத்தை வாசிக்க முற்படுவோரை தேவன் அதிகமாக கண்டு கொள்வதில்லை. வேதத்தின் முன்பாக நீங்கள் நிற்கும்போது எந்த அளவிற்கு உங்களது வெறுமையையும் அறியாமையையும், குறைவையும் உணர்கிறீர்களோ அந்த அளவிற்குத்தான் நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும். வேதத்தை கற்றுக் கொள்ளவும் முடியும்.

இரண்டாவதாக வேதத்தை வாசிக்கும் உங்கள் நோக்கம் சரியானதாக இருக்க வேண்டும். எதற்காக வேதத்தை நான் படிக்க விரும்புகிறேன் என்று நமக்கு நாமே கேள்வி எழுப்பிக்கொண்டு பதில் கண்டுபிடிப்பது நல்ல பலனைத் தரும். நீங்கள் எதற்காக வேதத்தை படிக்க விரும்புகிறீர்கள்?

- *மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுவதற்காக.*
- *என் வேத அறிவைப் பெருக்கிக் கொள்ள*
- *மற்றவர்களுடன் தர்க்கிக்க*
- *நடக்க வேண்டிய வழியைத் தெரிந்து கொண்டு அதன்படி நடக்க.*

மேற்கண்ட நான்கு நோக்கங்களில் நான்காவதுதான் சரியான நோக்கம்.

வேதத்தை நாம் தெரிந்துகொள்ள விரும்புவது அதன்படி நடப்பதற்காகவே இருக்க வேண்டும். அதை அனுபவமாக்கிய பின்பு மற்றவர்களுக்கு போதிக்கலாம்.

திறந்த, தாகமுள்ள, தீர்மானம் செய்யத் துணிவுள்ள மனதோடு நீங்கள் வேதத்தை வாசிக்கப் பழக வேண்டும்.

வேதத்தை வாசிப்பதில் உங்கள் நோக்கம் சரியானதாக

இருக்குமானால் நீங்கள் வேதத்தை அறிந்து கொள்வதற்கு தடையொன்றும் இல்லை.

உலக சம்மந்தமான படிப்பு இல்லாவிட்டாலும் வேதாகமக் கல்விச் சாலையில் படிக்காதவராக இருந்தாலும் கூட நீங்கள் உங்கள் நோக்கம் சரியாக இருக்கும்பட்சத்தில் சுலபமாக தேவனுடைய வார்த்தைகளை விளங்கிக் கொள்ள முடியும்.

வசனத்தில் சரியான புரிந்துகொள்ளுதலும் அறிவும் இல்லாதவர்களே எளிதில் வஞ்சிக்கப்படுகிறார்கள். வஞ்சகனாகிய சாத்தானை இயேசு மேற்கொண்டது வேத வசனத்தினாலேயே என்பது மத்தேயு நான்காம் அதிகாரம் காட்டும் உண்மை.

எனவே, வேதவசனத்தை வாசியுங்கள். ஆவியானவர் உதவியுடன் தியானியுங்கள். வசனம் சொல்லாத யாதொன்றையும் ஒரு மனிதனோ, அல்லது ஒரு தேவதூதனோகூட சொல்லக் கேட்டால் அதை முகத்தாட்சண்யமின்றிப் புறக்கணியுங்கள். வசனத்தை வளைப்பவர்களை துவக்கத்திலேயே அடையாளம் கண்டு கொள்ளுங்கள்.

ஒரு சார்புடைய உபதேசம் ஆரோக்கியமற்றது, வேதம் ஒரு சார்புடையதல்ல. அது இருபுறமும் கருக்கானது. ஒரு சார்புடைய உபதேசம் நாளடைவில் உங்களைப் பலவீனமாக்கிவிடும்.

வேதப் புரட்டர்களைக் கண்டு கொள்ளுங்கள். கூடுமானால் அவர்களைக் கண்டித்துணர்த்துங்கள். கேளாதபட்சத்தில் அவர்களை விட்டு விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில்...

.. உங்கள் ஆத்துமா உங்களுக்கு முக்கியம்.

ஊழியனை வழிகாட்டியாக வைத்துக் கொள்ளுங்கள். அதே சமயம் அந்தக் கைகாட்டி ஒரே வழியான இயேசுவையே எப்போதும் கைகாட்டுகிறதா என்று கவனமாய் நிதானியுங்கள்.

எல்லாவற்றிலும் இயேசுவைச் சார்ந்து வாழுங்கள். பிறகு...

ஓநாயாவது? புலியாவது? யாரும் உங்களை அசைத்துக் கொள்ள முடியாது.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

2

## எச்சரிக்கைச் செய்தி

### வெளிப்படுத்துதல் 13:17–18

அந்த மிருகத்தின் முத்திரையையாவது. அதின் நாமத்தையாவது. அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும், விற்கவும் கூடாதபடிக்குச் செய்தது.

இதிலே ஞானம் விளங்கும். அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுள்ளவன் கணக்கு பார்க்கக்கடவன். அது மனுஷருடைய இலக்கமாயிருக்கிறது. அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு.

### வெளிப்படுத்துதல் 19:20

அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது. மிருகத்தின் முன் பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும். அதின் சொருபத்தை வணங்கியவர்களையும் மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங் கூடப்-பிடிக்கப்பட்டான். இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக் கடலிலே உயிருடன் தள்ளப்பட்டார்கள்.

எல்லாம் எண்கள் மயம்!

# எல்லாம் எண்கள் மயம்

எண்களே இல்லாத உலகத்தை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா?

எண்கள் இல்லாவிட்டால் கணக்கு இல்லை. தினசரி கறாராக வந்து பயமுறுத்தும் கணக்கு வாத்தியார் இருக்கமாட்டார். வாங்கிய கடனுக்கு வட்டி போட்டு வசூலிக்க கடன்காரன் வரமாட்டான் என்பது போன்ற சில அற்ப சந்தோஷங்கள் தவிர, எண்கள் இல்லா விட்டால் கஷ்டம் தான்.

உலக வாழ்க்கையில் எண்களின் பயன்பாடு மிகவும் அவசியம்.

ஒருவனுடைய சொத்துக்களை கணக்கிட, வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக வழக்குப்போட, பெண்கள் தங்கள் நகைகளின் கனத்தை கணக்கிட, பிள்ளைகள் தங்கள் அறிவின் அளவைக் கண்டறிய, உங்கள் மகனைவிட என் பையன் நாலு மார்க் அதிகம் சார் என்று தன் பையனைப் பற்றிப் பெருமைப் பட்டுக்கொள்ள. பொருட்களை வாங்க, விற்க.. மற்றும் உங்கள்

பணத்துக்கு நாங்கள் இவ்வளவு வட்டி தருகிறோம் என்று பைனான்ஸ்காரர்கள் விளம்பரம் செய்து புள்ளி விபரமாக ஏமாற்ற, ஆடித்தள்ளுபடி இத்தனை சதவீதம் என்று குஜராத் துணிக் கடைகள் நம்மைச் சுண்டி இழுக்க என்று பல்வேறு பயன் பாடுகளுக்கு நமக்கு எண்கள் தேவைப்படுகிறது.

இது தவிர எண்களுக்கு இன்னும் ஏராளம் பயன்பாடுகள் இருக்கின்றன. எனவேதான், எண்கள் செய்யும் ஜாலங்களை கற்றுக் கொள்ள தனியாக பாடமே வைத்திருக்கிறார்கள். பல வருடங்கள் எண்கள் பற்றி படிக்கிறார்கள்.

லாட்டரி சீட்டில் நமக்கு ஏதாவது பரிசு விழுந்திருக்கிறதா என்று பார்ப்பதிலிருந்து வானத்தில் ராக்கெட் செலுத்துவது வரை எல்லா விதத்திலும் நம்பர்கள் இல்லாவிட்டால் நமக்கு ஒன்றும் செய்ய முடியாது.

மொத்தத்தில் எண்கள் இல்லாவிட்டால் இந்த உலகத்தில் குப்பை கொட்ட முடியாது என்பதுதான் நிதர்சனம்.

உலகத்தை விடுங்கள் சார், வேதத்தைப் படித்துப் பார்த்தால் பரலோகத்திலும் நம்பர்கள் இருக்கிறதாகத்தான் படுகிறது. பன்னிரண்டு வாசல்கள், ஏழு பொன் குத்துவிளக்குகள், ஒரு லட்சத்து நாற்பத்தி நாலாயிரம் பேர் என்று வெளிப்படுத்தல் விசேஷத்தில் காட்டப்படும் பரலோகத்திலும் எண்கள் நிறைந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. எண்கள் நம்மை எங்கே போனாலும் விடாது போலிருக்கிறது.

முதன்முதலாக எண்கள் மனிதனுக்கு எப்படி அறிமுகமாயின என்று நமக்கு உறுதியாய்த் தெரியவில்லை.

ஆனால் ஆதிகாலத்தில் மனிதனுக்குத் தன்னுடைய கால்நடை களைப் பராமரிக்கவும், மேய்ச்சலுக்குச் சென்றுவிட்டு எல்லாம் திரும்பி விட்டதா என்று தெரிந்து கொள்ளவும் தன்னுடையது எத்தனை என்று கணக்கு வைத்துக் கொள்ளவும் எண்கள் தேவைப்பட்டிருக்கிறது.

என்ன செய்தான்?

தன்னிடமிருந்த கால்நடைகளின் எண்ணிக்கைக்குச் சமமாக

கற்களை அடுக்கிவைத்துக்கொண்டு கணக்கிட்டான். ஒவ்வொரு முறை கால்நடைகள் வெளியே போகும்போதும் ஒவ்வொரு மிருகத்திற்கும் ஒவ்வொரு கல் என்று கற்களை வலதுபுறமாக எடுத்து அடுக்கினான். மேய்ச்சல் முடிந்து அவைகள் திரும்பி வரும்போது ஒவ்வொன்றாய் உள்ளே நுழையவிட்டு ஒவ் வொன்றுக்கும் கற்களை எடுத்து இடதுபுறமாக அடுக்கினான். கற்கள் மீதமிருந்தால் மிருகங்கள் காணாமல் போயிருக்கின்றன என்று அறிந்து கொண்டு தேடிப்போனான்.

எல்லாம் கொஞ்ச நாட்கள் சரியாகத்தான் நடந்தது. பிறகு பக் கத்துக் குகைக் குப்பன் இவனுடைய கற்களை இடம் மாற்றி வைத்து விட்டு கால்நடைகளை ஓட்டிக் கொண்டு போய்விட பிரச் சனைகள் வந்தது.

இதற்கு முடிவுகட்ட மனிதர்கள் தங்கள் உடல் உறுப்புகளின் அளவைக் கொண்டு கணக்கிட்டார்கள். தன் பங்கிலிருக்கும் ஆடு மாடுகளை தன் கைவிரல்களைக் கொண்டும், விரல்களில் உள்ள வரிகளைக் கொண்டும் கணக்கிட்டார்கள். இன்றைக்கும் இந்தக் கணக்கீட்டின் பயன்பாடு மனித குலத்தில் எச்ச சொச்சமாக இருப்பதை கிராமப்புறங்களில் சென்றால் காணலாம்.

" நேத்திக்கு ஆத்தில தண்ணி மட்டம் எவ்ளோ?"

" நேத்திக்கு முழங்கால் மட்டம். போனவாரம் அதே ஆத்தில இரண்டாள் மட்டம் இருந்தது."

யாருடைய கால் அளவில் முழங்கால் மட்டம்? எத்தனை அடி உயரமுள்ள மனிதனில் இரண்டாள் மட்டம் என்று தெரியாது, எல்லாம் உத்தேச மதிப்பீடுகள் தான். என்றாலும் இவர் சொல்வது அவருக்கு புரிகிறது.

இன்றைக்கும் ரோட்டோரத்துப் பூக்கடைகளில் பூக்களை கை முழம் கொண்டுதான் கணக்கிடுகிறார்கள் தவிர, யாரும் இதற்காக ஸ்கேல் பயன்படுத்துவதில்லை.

டி.வி.யில் சமையல் குறிப்பு சொல்கிறவர்கள் கூட உப்பு நாலு சிட்டிகை என்று சொல்கிறார்களேயொழிய இத்தனை கிராம் என்று சொல்வதில்லை.

இன்றைக்கு எச்ச சொச்சமாய் காணப்படும் இவ்வகைக்

கணக்குகள், அக்காலத்தில் பெருவாரியாகப் பரவியிருந்தது. ஆடு களும், மாடுகளும் கைவிரல்களின் எண்ணிக்கையையும், கைவிரல் வரிகளின் எண்ணிக்கையையும் தாண்டிப் பெருகினபோது கணக்கு வைக்க மனிதன் கஷ்டப்பட்டான். எனவே, அவனுக்கு பிற்காலங்களில் துல்லியமாக கணக்கிடும் முறை தேவைப்பட்டது. தன் மூளையை ஏகமாய்க் கசக்கி எண்களைக் கொண்டு வந்தான்.

உலகத்திற்கு எண்கள் அறிமுகமாகி எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்று சரிவரத் தெரியாது. ஆனால் எகிப்திலும் மெசபடோ மியாவிலும் ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எண்களை பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று அகழ்வாராய்ச்சிக் குறிப்புகள் சொல்கின்றன.

என்னுடைய கணக்கு ஆசிரியர் "உலகத்திற்கு பூஜ்ஜியத்தை அறிமுகப்படுத்தியது நம்முடைய இந்தியாதான் என்பதில் நாம் எல்லோரும் பெருமைப்பட வேண்டும்" என்பார் அடிக்கடி (ஆனால் நான் கணிதப்பாடத்தில் அதையே மதிப்பெண்ணாக எடுக்கும்போது ஏனோ பெருமைப்படமாட்டார்)

ஆனால் உண்மை என்ன தெரியுமா? பூஜ்ஜியம் மாத்திரமல்ல, இன்று நாம் பயன்படுத்தும் எண்களின் வடிவங்களான 1, 2, 3, போன்ற பல வடிவங்கள் இந்தியாவிலிருந்து தான் போயிருக் கின்றன. இந்தியாவில் புழக்கத்திலிருந்த இவை, இங்கு வாணிபம் செய்ய வந்த அராபியர்கள் மூலம் பரவியது. ஆகையால்தான் இதை இந்து அராபிய எண்கள் (Indo-Arabic Numerals) என்கிறார்கள்.

அதெல்லாம் சரிதான். இந்த எண்கள் பற்றி இப்போது பேச என்ன அவசியம் என்று கேட்பீர்கள்.

அவசியம் இருப்பதால்தானே இந்தக் கட்டுரையே. நம்முடைய வசதிக்காக கண்டுபிடிக்கப்பட்ட இந்த எண்கள் கொஞ்சக் காலமாக நம்மை முழுவதுமாக ஆக்கிரமத்துக் கொண்டே வருவதை உங்களால் கவனிக்க முடிகிறதா? கொஞ்சம் நுணுக் கமாய் யோசித்தால் ஆம் என்பீர்கள்.

ஏன் முன்னெப்போதையும் விட இப்போது எண்கள் நம்மை அதிகம் ஆக்கிரமிக்க வேண்டும்?

காரணம் இருக்கிறது. வேதம் சொல்லும் கடைசிக்காலம் இது

என்பதற்கு அடையாளம் தான் இந்த எண்களின் ஆக்கிரமிப்பு. கடைசிக் காலங்களில் சாத்தான் எண்களைக் கொண்டு செய்யப் போகும் ஒரு பிரம்மாண்டமான பணிக்கு அஸ்திபாரம்தான் இந்த ஆக்கிரமிப்பு.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள், சமீப காலமாக எண்கள் நம்மை எவ்வளவு தூரம் ஆழமாய் ஆக்கிரமித்திருக்கிறது.

ஆஸ்பத்திரியில் குழந்தை பிறந்தவுடனேயே அதன் கைகளில் நம்பர் எழுதிக்கட்டிவிடுவதில் ஆரம்பிக்கிறது எண்களுடனான சம்மந்தம்.

" ஏழாம் நம்பர் குழந்தைக்கு டிராப்ஸ் போட்டாச்சா?"

" பத்தாம் நம்பர் ஏன் ஓயாமல் அழுதுகொண்டே இருக்கிறது. ஈரமாயிருக்கிறது பார்.. மாற்று"

" ஐந்தாம் நம்பர் அடிக்கடி கக்குகிறது டாக்டர்.."

ஆஸ்பத்திரி முழுவதும் பிள்ளைகளுக்கு நம்பர் வைத்துத் தான் கூப்பிடுகிறார்கள். பிள்ளைகளுக்கு அப்போது பெயர் வைக்கவில்லை. எனவே நம்பர் வைத்துக் கூப்பிடுகிறார்கள். நியாயம் தான்.

ஆனால் இந்தப் பள்ளிக்கூடத்துக்காரார்களுக்கு என்ன வந்தது? நாம் பெயர் வைத்து சேர்த்துவிட்ட பிள்ளைகளுக்கு நம்பர் தந்து அடையாளப் படுத்திவிடுகிறார்கள்.

பள்ளியில் சேர்த்தவுடன் ரோல் நம்பர். பரீட்சைப் பேப்பரில் உங்கள் பெயருக்கு பதிலாக நம்பர். பள்ளியோடு விட்டதா? இல்லை காலமெல்லாம் பின் தொடர்கிறது. எப்படி?

ரேஷன் அட்டை நம்பர், பாஸ்போர்ட் நம்பர், எலெக்டிரிக் பில் கட்ட நம்பர், வாகனத்துக்கு நம்பர், வாகனம் ஓட்ட லைசென்ஸ்க்கு நம்பர், வங்கிக் கணக்குக்கு நம்பர், வங்கியில் போட்ட பணத்தை எடுக்கப் போனால் அங்கேயும் டோக்கன் நம்பர், அல்லது ஏ.டி. என். கார்டு நம்பர்.. என்று நம்பர்களுக்கு நடுவில் நாம் சிக்கிக் கொள்ள வேண்டிய கட்டாயக் காலத்தில் வந்திருக்கிறோம்.

கொஞ்சம் ஓய்வாயிருந்தால் நீங்கள் எத்தனை எண்களால்

எங்கெங்கெல்லாம் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறீர்கள் என்று எண்ணிப்பாருங்கள். ஆச்சரியமாயிருக்கும்.

முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு எண்களின் ஆதிக்கம் மனித குலத்தை மிகவும் ஆக்கிரமித்துள்ளது கண்கூடாகத் தெரிகிறது.

ஒரு மனிதனைப் பெயர் சொல்லி அடையாளப்படுத்துவதை விட அவனை நம்பர்களாகக் கொண்டு அடையாளப்படுத்துவது தான் சுலபமாக்கப்பட்டுள்ளது. ஒரே மனிதனுக்கு பல்வேறு இடங்களில் பல்வேறு எண்கள் பயன்படுத்தப்பட்டாலும் அது அவனுக்கு கஷ்டமாக தோன்றுவதில்லை.

எங்களுடைய பத்திரிகை விலாசப்பட்டியலில் கூட நீங்கள் உங்கள் பெயரைச் சொல்லி சரிபார்க்கச் சொல்வதை விட, உங்களுக்கு நாங்கள் தந்திருக்கும் பதிவு எண்ணை பயன் படுத்துவது தான் சுலபம் என்று சொல்கிறோம்.

காரணம் என்ன? உலகில் வரி வடிவங்கள் எல்லாம் தற்காலத்தில் எண் வடிவங்களுக்கு மாற்றப்பட்டுக் கொண்டி ருக்கிறது. இனிக் கொஞ்சக்காலத்தில் பிறக்கிற பிள்ளைகளுக்கு ஜான் என்றோ ஜாக்கப் என்றோ வைப்பதைப் காட்டிலும் TN-RS-1267 என்று பெயர் வைப்பதே சாலச் சிறந்ததாகக் கூட கருதப்படலாம். யாருக்குத் தெரியும்?

இதே எண்கள் ஒரு காலத்தில் ஏதோ சூட்சுமங்கள் நிறைந்த மர்மமாக மனிதனுக்கு காட்சியளித்து வந்தது. ரொம்பப் பழைய காலத்தில் கணித மேதைகள் சிலரைக் கூட ஏதோ பில்லி சூனியக் காரர்கள் என்று நினைத்து தீ வைத்துக் கொளுத்தியிருக்கிறார்கள்.

இன்று நிலை அப்படியல்ல, அதே எண்களை டியூஷன் வைத்து படிக்கிறார்கள். பிள்ளைகள் அதில் நிறைய மதிப்பெண் வாங்க வேண்டும் என்று பிரார்த்தனைக் கடிதங்கள் அனுப்புகிறார் கள். பிள்ளைகளுக்கு கணக்கு சரியாக வராவிட்டால் கவலைப் படுகிறார்கள். எதிர்காலத்தில் இந்த மக்குப்பையன் என்ன செய்யப் போகிறானோ என்று பயப்படுகிறார்கள்.

இன்று எண்கள் மனிதனின் மனதை வெகுவாக ஆக்கிரமிக்க ஆரம்பித்துள்ளன. மனிதனின் மனமும் எண்களை சுலபமாக

புரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறது.

ஒரு காலத்தில் ஒரு பதினாறு இலக்க எண்ணை மனதில் வைப்பதைப் பார்க்கிலும், பதிற்றுப்பத்தில் நாலு பாடல்களை பாராயணம் செய்துவிடுவது சுலபமாக இருந்தது. இன்றைக்கு நிலைமை மாறியிருக்கிறது. ஒரு நாலடியார் மனப்பாடம் பண்ணுகிற நேரத்தில் நானூறு எண்களை மனதில் கொண்டு வந்துவிட முடிகிறது. (உங்களுக்கு எத்தனை பேருடைய டெலிபோன் நம்பர்கள் பார்க்காமல் ஞாபகத்தில் சொல்ல முடிகிறது என்று யோசித்துப் பாருங்கள். உங்கள் பத்துவயதுப் பையனுக்கு கூட பத்திருபது பேருடைய நம்பர் மனப்பாடமாக தெரிந்திருக்கும்)

ஏன் இப்படி?

எண்களின் ஆதிக்கம் முன்னெப்போதையும் விட மனித குலத்தை அதிகப்பட்சம் ஆக்கிரமித்திருப்பது கடைசிக் காலத்தின் அடையாளம்.

எண்களின் ஆதிக்கம் மனித சமுதாயத்தில் அதிகரித்திருப்பது உண்மைதான். ஆனால் அதற்கும் கடைசிக் காலத்திற்கும் என்ன சம்மந்தம்?

பொறுங்கள். கடைசிக் காலத்தில் அந்திக்கிறிஸ்து இந்த உலகத்தை ஏழு ஆண்டுகள் ஆட்சி செய்வான் என்று வேதத்தில் குறிப்பிட்டிருக்கிறதல்லவா? அந்தச் சமயத்தில் அந்திக்கிறிஸ்து மனிதகுலம் முழுவதும் பின்பற்றும்படிக்கான ஒரு கட்டளையை அறிவிப்பான். அதில் தான் இந்த எண்கள் சமாச்சாரமும் வருகிறது.

எப்படி?

வாசித்துப் பாருங்கள், வெளிப்படுத்துதல் 13: 17-18

*17. அந்த மிருகத்தின் முத்திரையையாவது, அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்கிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும், விற்கவும் கூடாதபடிக்கு செய்தது.*

*18. இதிலே ஞானம் விளங்கும். அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுள்ளவன் கணக்குப் பார்க்கக்*

*கடவன். அது மனுஷருடைய இலக்கமாயிருக்கிறது. அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு.*

அந்திக்கிறிஸ்து தன்னுடைய ஆட்சியில் மனிதர்கள் யாவருடைய கைகளிலோ அல்லது நெற்றியிலோ தன்னுடைய பெயரையோ, அல்லது தன்னுடைய முத்திரையையோ அல்லது தன்னுடைய இலக்கத்தையோ பொறித்துக் கொள்ளக் கட்டளையிடுவான். அந்த நம்பரை வாங்கிக் கொள்ளாத யாரும் மார்க்கெட்டில் எதையும் விற்கவும் முடியாது, வாங்கவும் முடியாது.

அதனாலென்ன? நம்பரை வாங்கிக்கொண்டால் போச்சு. ஒன்றென்ன, யாராவது கைநீட்டும் அதிகாரிகள் கிடைத்துவிட்டால் ஒன்றுக்கு இரண்டாய்க் கூட வாங்கிக்கொள்ளலாம். நல்லது தானே? என்று விட்டேற்றியாக ஒரு விசுவாசி நினைத்துவிட முடியாது. காரணம் அந்த முத்திரையை தரித்துக் கொள்கிற எவரும் பரலோக ராஜ்ஜியத்திற்குள் நுழைய முடியாது என்றும் அவர்கள் அக்கினியாலும் கந்தகத்தாலும் இரவும் பகலும் வாதிக்கப் படுவார்கள் என்றும் வேதம் திட்டமும் தெளிவுமாகத் தெரிவிக்கிறது. வாசித்துப்பாருங்கள்.

*வெளிப்படுத்துதல் 14: 9-11*

*9. அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு மிருகத்தையும் அதன் சொருபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையை தரித்தவனெவனோ.*

*10. அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக்குடித்து பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கும் முன்பாகவும் அக்கினியினாலும், கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்.*

*11. அவர்களுடைய வாதையின் புகை சதாகாலமும் எழும்பும். மிருகத்தையும் அதின் சொருபத்தையும் வணங்குகிறவர்களுக்கும் அதினுடைய நாமத்தை தரித்துக்கொள்கிற எவனுக்கும் இரவும் பகலும்*

*இளைப்பாறுதலிராது.*

இது மாத்திரமல்ல, இதைத் தொடர்ந்து வெளிப்படுத்துதல் 15:2 மற்றும் 19:20,21 ஆகிய வசனங்களையும் வாசித்துப்பாருங்கள்.

உலகமக்கள் யாவரையும் எண்ணித் தொகையிடும் திட்டம் இப்போதே உலகப் பொருளாதார அரசியல் ஸ்தாபனங்களின் திட்டத்தில் உள்ளது. உலகக் குடிமக்கள் யாவரையும் எண்ணி, அவர்கள் யாவருக்கும் இலக்கங்கள் கொடுத்து, யாவருடைய பொருளாதாரத் திட்டங்களையும் கண்காணித்து ஒழுங்குபடுத்த ஒரு திட்டம் உலக நாணய நிதியில் (IMF) பரீட்சார்த்தமாக வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, உலகமக்கள் எல்லாருடைய வரவு செலவுகளையும் ஒழுங்கு செய்து மையப்படுத்த தீர்மானித்துள்ளார்கள்.

உலகமக்கள் எல்லாருடைய கணக்கையும் மையப்படுத்த எல்லாருக்கும் ஒரு தனி அடையாளம் தேவைப்படும் அல்லவா? அதை அவர்களுக்கு ஒரு இலக்கமாக கொடுத்துவிடலாம் என்று தீர்மானித்துள்ளார்கள்.

உலகம் முழுவதிலும் உள்ள மனிதர்களுக்கு தனித்தனி இலக்கங்கள் கொடுத்தால் 18 ஸ்தானம் உள்ள எண்கள் வரை கொடுக்க வேண்டும். ஆனால் 18 ஸ்தானம் உள்ள எண்ணை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள மிகவும் கடினம். எனவே அதை இன்னும் சுலபம் பண்ணியிருக்கிறார்கள். எப்படி? ஆறுஸ்தானம் - ஆறுஸ்தானம் - ஆறுஸ்தானம் என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து பயன்படுத்தப் போகிறார்கள்.

ஆறுஸ்தானமா...? 6-6-6 அட, 666?

ஆறுஸ்தான எண்கள் மாத்திரம் சுலபமா என்ன? அதுவும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளக் கடினம் என்பீர்கள். கடினம் தான். ஆனால் அதற்கு உங்களைப் பழக்கப்படுத்தத்தானே பல ஸ்தான எண்களை நடைமுறையில் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். உங்கள் ஊரின் பின்கோடு நம்பர் என்னவென்று சட்டென்று சொல்லுங்கள் பார்க்கலாம். சரி, அது எத்தனை ஸ்தானம்? ஆறுதானே. எப்படி ஞாபகத்தில் வைத்திருந்தீர்கள்?

நம்பர்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது ஒருகாலத்தில் கஷ்டமாக இருந்தது உண்மைதான். ஆனால் இன்றைக்கு நிலைமை அப்படியில்லை. அதைச் சுலபமாக்கப் பல திட்டங்களைக் கொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு மனிதனும் பல இலக்கங்களை வலுக்கட்டாயமாக ஞாபகத்தில் வைத்துக்கொள்கிற மாதிரி சமுதாய அமைப்பையே மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஊருக்கு ஊர் இப்போதெல்லாம் தொலைபேசிகள் வந்து விட்டதால் ஒவ்வொருவரும் தன் உறவினர்கள், நண்பர்கள் என்று குறைந்தபட்சம் ஒரு பத்துப்பேருடைய நம்பர்களையாவது மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் இப்போது வந்திருக்கிறது. ஒவ்வொன்றும் கிட்டதட்ட ஐந்திலிருந்து எட்டு ஸ்தானங்கள். சாதாரணமாக இந்தக் கச்சடாக்கள் எல்லாம் இல்லாமல் கிராமங்களில் ஒதுங்கியிருப்பவர்கள் கூட நாலைந்து நம்பர்களை ஞாபத்தில் வைத்திருக்கிறார்கள்.

இதுதவிர நீங்கள் எத்தனை விதமான நம்பர்களை மனதில் வைத்திருக்கிறீர்கள் என்று கொஞ்சம் பட்டியல் போட்டுப் பாருங்கள் ஆச்சரியமாக இருக்கும். தி.நகரிலிருக்கும் உங்கள் ஆபீசுக்கு போகும் பஸ்நம்பர்கள், பரீட்சை நம்பர், எம்ப்ளாயின் மெண்ட் எக்ஸ்சேஞ் நம்பர், நண்பர்களின் போன் நம்பர்கள், அவசர உதவி, ஆம்புலன்ஸ், சிலிண்டர் கடை போன் நம்பர்கள்.. உங்கள் பிறந்தநாள்... சில அதிர்ஷ்ட நம்பிகளுக்கு லாட்டரிச்சீட்டு நம்பர், எலெக்ட்ரிக் பில் கட்டும் கடைசித் தேதி, வங்கிக்கணக்கு எண், இதெல்லாம் தவிர, ஜோசியக்காரர்கள் சொல்லிவிட்டார்கள் என்று சில ஆட்களுக்கு அதிர்ஷ்ட நம்பர்கள் வேறு, இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம்.

மொத்தம் எத்தனை டிஜிட் உங்கள் தலையில் இருக்கிறது என்று கூட்டிப்பாருங்கள்.. ஏயப்பா.. நம் தலைக்கு இவ்வளவு பவரா? பரவாயில்லையே என்று சபாஷ் சொல்லிக்கொள்வீர்கள்.

இப்படி மனிதர்களை எண் முறைக்குப் பழக்கிக் கொண்டே வருவதால் வரப்போகும் தன்னுடைய ஆட்சியில் அவர்களை எண்களை அணிந்துகொள்ளச் சம்மதிக்கப்பண்ணுவதில் அந்திக் கிறிஸ்துவுக்கு கஷ்டமிருக்காது.

சரி. எண்கள் நமக்குப் பழகிவிட்டன. என்றாலும், 18 ஸ்தானம்

எண்களை சட்டெனச் சொல்ல நமக்குக் கஷ்டம்தானே?

கஷ்டம் தான். அதைச் சுலபம் பண்ணத்தான் கைகளிலோ, நெற்றியிலோ அந்த நம்பரைப் பொறித்துவிடுகிறார்கள்.

“ஐயய்யோ.. இதென்ன அநாகரீகம். நெற்றியில் நம்பரைப் பச்சை குத்திக்கொண்டால் அழகு என்னாவது?” என்று பியூட்டி பார்லர் அம்மணிகள் வருத்தம் தெரிவிப்பார்கள் என்பதும் அந்திக்கிறிஸ்துவுக்கு தெரியும்.

எனவே, அவன் இது விஷயத்தில் பச்சை குத்துபவர்களின் உதவியை நாடப்போவதில்லை. பின்னே...?

அதற்கும் வழி கண்டுபிடித்து விட்டார்கள்.

லேசர் என்ற ஒளிக்கற்றையைக் கொண்டு மனிதனின் தோலுக் கடியில் ஒரு இலக்கத்தையோ ஒரு முத்திரையையோ பதிக்க முடியும். வெளியே கண்களுக்குத் தெரியாது.

நீங்கள் வழக்கம்போல பவுடர் அடித்துக்கொள்ளலாம். பேசியல் பண்ணிக்கொள்ளலாம். மஞ்சள் பூசிக்கொள்ளலாம். மாவு பூசிக்கொள்ளலாம். முத்திரை அழிந்துபோகாது. தேவைப் படும் நேரத்தில் மட்டும் உங்கள் எண்களைத் தெரிந்துகொள்ள ஸ்கேனர் என்ற கருவிக்கு முன்னால் உங்கள் கைகளை அல்லது நெற்றியைக் காட்டினால் போதும் அதில் பதிக்கப்பட்டுள்ள எண்கள் அல்லது தகவல்கள் ஸ்கேனர் திரையில் தெரியும்.

இந்த முறை இப்போதே வெளிநாடுகள் பலவற்றில் காய்கறி களுக்கு அதின் விலை மற்றும் விபரங்களைப் பொறிக்க பயன்படுத்தப் படுகிறது. நாளைக்கு மனிதனுக்கு பயன்படுத்த இது முன்னோட்டம்.

அந்திக்கிறிஸ்துவின் நாட்களில் யாவரும் நம்பர் அணிந்து கொள்ள வேண்டும் என்ற சட்டம் அமலுக்கு வரும்போது இந்த 6-6-6 இலக்கம் லேசர் கருவியின் மூலம் மனிதர்களின் சரீரத்தில் பொறிக்கப்படும். அவன் அதைப் பொறித்துள்ளானா, என்ன நம்பர் என்பதைக் கண்டறிய ஸ்கேனர் கருவி ஒவ்வொரு கடைகளிலும், வங்கிகளிலும் வைக்கப்பட்டிருக்கும். எண் பதித்துக்கொள்ளாமல் அடம்பிடிக்கும் பட்சத்தில் யாரும் கடைக்குள் நுழைந்து எதையும் வாங்கிவிட முடியாது.

Internal Revenue Service என்ற அமெரிக்க பொருளாதாரம் சார்ந்த ஸ்தாபனம் இத்திட்டத்தை விரைவில் தன்னளவில் பயன் படுத்த திட்டமிட்டுள்ளது. அதே ஸ்தாபனம் தங்கள் குறியீட்டை மனிதர்கள் சரீரத்தில் பதிக்க நெற்றி, அல்லது மணிக்கட்டுக்கள் தான் சரியான இடம் என்றும் கண்டறிந்துள்ளது.

மக்களைத் தொகையிட்டு நம்பர் தரும் முறை எல்லா நாடு களிலும் பரவ ஆரம்பித்துள்ளது. தாய்லாந்தில் 13 ஸ்தானம் உள்ள எண் ஒவ்வொரு பிரஜைகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. ஸ்வீட னிலும் இந்த எண் தரும் முறை நடைமுறைக்கு வந்துவிட்டது. அங்கே ஆண்களுக்கு ஒற்றைப்படை எண்களும், பெண்களுக்கு இரட்டைப் படை எண்களும் கொடுக்கிறார்கள். மேற்கு ஜெர்மனியில் 12 ஸ்தான எண்கள் தருகிறார்கள்.

இந்தியாவிலும் இப்போது தீவிரமாக வாக்காளர் அட்டைகள் கொடுக்கப்படுவது மனிதர்களை அடையாளமிடும் முயற்சியின் துவக்கம்தான். விரைவிலேயே நீங்கள் உங்கள் பிரஜா உரிமை எண்ணை எதிர்பார்க்கலாம். என்ன, இதற்கு வேண்டுமானால் இந்தியத்தனமாக ஏதாவது பிரஜாக்கிரமா திட்டம் என்று பெயர் வைப்பார்கள். விஷயம் என்னவோ ஒன்றுதான்.

உலகில் மனிதர்களைக் கணக்கிட்டு எண் கொடுக்கப்படுவது வெளிப்பார்வைக்கு மிகவும் நல்ல காரியமாக காணப்பட்டாலும் இவையெல்லாம் வரப்போகும் அந்திகிறிஸ்துவின் ஆட்சிக்கான அஸ்திபாரமிடுதல்கள் தான் என்பது வேதத்தை நுணுக்கமாக படிப்பவர்களுக்குத் தெரியும்.

எப்படி சார்? அந்திக்கிறிஸ்துவின் முத்திரையை வாங்கினால் பரலோகம் போகமுடியாது. இரட்சிப்பையும் இழக்கவேண்டிய தாகும். அதேசமயம் முத்திரையை வாங்காவிட்டால் இங்கே எந்தப் பொருளும் வாங்க முடியாது. சாப்பிட முடியாது. உடுத்த முடியாது. சம்பளம் வாங்கமுடியாது. இதற்கு என்னதான் வழி?

உங்கள் சந்தேகம் நியாயமானதுதான். இதற்கும் வழியில்லா மல் இல்லை. உங்கள் இரட்சிப்பைக் காத்துக்கொண்டு, தீவிரமாகக் கர்த்தரைச் சந்திக்க ஆயத்தமாகுங்கள். சீக்கிரமே இயேசு இரகசிய வருகையாக உலகிற்கு வரப்போகிறார். அந்த சமயத்தில் ஆயத்தமாக காத்திருக்கும் உங்களைத் தன்னுடன் பரலோகத்திற்கு

அழைத்து கொண்டு செல்வார். இதற்குப் பிறகுதான் அந்திக் கிறிஸ்து பூமியில் ஆட்சியைப் பிடிப்பான்.

தப்பித்துக்கொள்ளும் வழியை நீங்கள் தெரிந்துகொண்டு இரகசிய வருகையிலேயே இயேசுவோடு நீங்கள் பரலோகம் போய் விட்டால் அதன் பிறகு அந்திக்கிறிஸ்து நம்பர் போட்டால் உங்களுக்கென்ன முத்திரை போட்டால் உங்களுக்கென்ன?

கவலையே இல்லை.

# 3

## *எச்சரிக்கைச் செய்தி*

### வெளிப்படுத்துதல் 13:14-16

மிருகத்தின் முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடி களை மோசம்போக்கி பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிரு கத்திற்கு ஒரு சொருபம் பண்ணவேண்டு மென்று பூமியின் குடிகளுக்கு அது சொல்லிற்று.

மேலும் அம்மிருகத்தின் சொருபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொருபத்தை வணங்காத யாவரையும் கொலை செய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொருபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்கு சத்துவம் கொடுக்கப் பட்டது.

அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள் இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகையிலாவது, நெற்றியிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கு செய்தது.

சிலைக்குள் ஜீவன்

# சிலைக்குள் ஜீவன்

சிலைகளைப் பற்றி உங்களுக்கு முன்னுரை எழுதத் தேவையில்லை என்று கருதுகிறேன். காரணம், தமிழ்நாட்டில் உயிருள்ள மனிதர்களை விட சிலைகளின் எண்ணிக்கைதான் அதிகம்.

நம் நாட்டில் வெறும் நாற்பது தொண்டர்களைக் கொண்டிருக் கிற கட்சித்தலைவர்கூட அமரரானால் சிலையாகிவிடுகிறார்.

இன்னும் ஜாதிச் சங்கங்களை ஏற்படுத்தி கலவரங்களுக்கு வித்திட்ட பெரியவர்கள், நூறுநாள் ஓடிய படத்தில் நடித்து, இளைஞர்களுக்கு சிகரெட் முதல் கொலை வரை சொல்லிக் கொடுத்த கதாநாயகர்கள், கண்ணகி மாதிரி காவியக் கதாபாத் திரங்கள், பிரிட்டிஷ் ஆட்சியின் போது கவர்னர்களாயிருந்த வர்கள், தமிழ் வளர்த்தவர்கள், காந்தி, நேரு போல சுதந்திர வீரர்கள்... என்று சிலைகள் பற்றிப் பட்டியல் போட்டால் மைல் அளவுக்கு நீளும்.

அட, மரித்தவர்களுக்குத்தான் சிலை என்றிருந்த காலம் மாறி உயிரோடிருக்கும்போதே பலருக்கு சிலை வைத்த பெருமையும் தமிழ் மண்ணிற்கு உண்டு.

இப்படி மனிதர்களாயிருந்து சிலைகளாக மாறியவர்கள் தவிர தெய்வங்களுக்கான சிலைகள் என்று ஒரு பெரிய சிலைக்கூட்டமே உண்டு.

பஸ்ஸ்டாண்டுகளில், பார்க்குகளில், நாலுரோடு சந்திக்கிற இடங்களில், கோவில்களில், குளக்கரைகளில், தோப்புகளில் என்று சிலைகள் அங்கிங்கெனாதபடி வியாபித்திருக்கிறதும் நம் மண்ணில் தான்.

ஆகவே, சிலைகள் உங்களுக்குப் புதிதல்ல. சிலைகளைப் பற்றி உங்களுக்கு நன்றாகவே தெரியும்.

சிலைகள் வெயிலிலும், மழையிலும் கவலையில்லாமல் தேமே என்று நிற்கும். அதிலிருப்பவரின் பிறந்தநாளில் மாத்திரம் நிறைய மாலைகள் அணிந்துகொண்டிருக்கும்.

மேடையமைக்கப்பட்ட சிலைகள் என்றால் கண்டிப்பாக அதன் அடியில் இரவுநேர உணவகங்கள் இருக்கும். பின்னிரவில் ரோட்டோரவாசிகள் சுற்றிலும் படுத்து உறங்குவார்கள். மாலை வேளைகளில் நாலைந்துபேர் சீட்டாடிக்கொண்டிருப்பார்கள்.

இவையெல்லாம் சாதுவான சிலைகள். சிலைகளில் வில்லங்க மான சிலைகளும் இருக்கின்றன. இவற்றால் வருடந்தோறும் பிரச் சனை வரும். பொதுவாக யாராவது செருப்புமாலை போட்டார்கள் என்று சொல்லித்தான் பிரச்சனைகள் ஆரம்பிக்கும். தொடர்ந்து பல கிராமங்கள் பற்றிக்கொள்ளும். பஸ்கள் சாலையில் கொளுத்தப்படும். கடைகள் அடைக்கப்படும். நிறைய மனித உயிர்கள் பறிக்கப்படும். அரசாங்கத்தில் பிரச்சனை கவனத்திற்குக் கொண்டுவரப்பட, சிலைகளுக்கு போலீஸ் பந்தோபஸ்து கிடைக்கும். அப்புறம்தான் பிரச்சனை ஓயும். அப்புறம் அடுத்த வருடம்தான்.

உங்கள் அன்றாட வாழ்க்கையில் நீங்கள் சிலைகளைப் பார்க்காமல் தவிர்க்கவே முடியாது.

இந்த சிலைகள் பேசினால் எப்படியிருக்கும்? நடந்தால் எப்படியிருக்கும்.

அப்பப்பா... இவை வாய்மூடியிருக்கும்போதே இவ்வளவு உயிர்களைக் காவு வாங்குமானால் பேச ஆரம்பித்தால் என்னாகும் ரணகளம்தான்.

அப்படி என்னதான் நடக்கும்?

வருடத்தில் 364 நாட்களும் சும்மாயிருந்துவிட்டு, பிறந்தநாளில் மாத்திரம் மாலையணிவிக்க வந்தால், காதைத் திருகி, கழுத்து உள்ளே போகிறமாதிரி தலையில் குட்டு வைத்துவிடும்.

கலவரங்களில் நீங்கள் பத்துப்பேரை அடித்தால் சிலை பத்துப் பேரை அடிக்கும்.

யாராவது செருப்பு மாலை போட முயற்சித்தால் கழுத்தைக் கடித்துத் துப்பிவிடும்.

தன் மேடையின் கீழ் இருக்கும் இரவுநேரக் கடைகளில் மாமூல் வசூலிக்கும்.

சிலைகள் பேசாமலிருப்பதுதான் நல்லது. நாம் அரசியல் பண்ணவும், கலவரங்களுக்கு காரணம் கற்பிக்கவும், சிலைத் தலைவரை முன்னிருத்தி ஓட்டு வாங்கவும் வேண்டுமானால் சிலைகள் பேசாமலிருக்கத்தான் வேண்டும்.

ஆனால் கடைசிக்காலத்தில் அந்திக்கிறிஸ்து உருவாக்கப் போகும் சிலை பேசவும், நடக்கவும், ஜனங்களைக் கொலை செய்ய வும், ஆற்றலுள்ளதாகவும் இருக்கும் என்று வேதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. வேடிக்கையாக இல்லை..? வாசித்துப் பாருங்கள். வெளி 13:15

*வெளிப்படுத்தல் 13:14-16*

*மிருகத்தின் முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும் படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி பட்டயத்தினாலே காயப்பட்டுப் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொருபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்கு அது சொல்லிற்று. மேலும் அம்மிருகத்தின் சொருபம் பேசத் தக்கதாகவும், மிருகத்தின் சொருபத்தை*

*வணங்காத யாவரையும் கொலை செய்யத்தக்கதாக வும், மிருகத்தின் சொருபத்திற்கு ஆவியைக் கொடுக் கும்படி அதற்கு சத்துவம் கொடுக்கப்பட்டது.*

*அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள் இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகையிலாவது, நெற்றியிலா வது ஒரு முத்திரையை பெறும்படிக்கு செய்தது.*

என்னது..? சிலைகளாவது பேசுவதாவது..? அதுவும் தன்னை யார் வணங்குகிறார்கள் யார் வணங்கவில்லை என்று பார்த்து வணங்காதவர்களை அடையாளம் கண்டுபிடித்துக் கொலை செய்வதாவது? இதெல்லாம் சாத்தியமானதுதானா என்ற கேள்விகள் உங்களுக்கு எழுந்தால் அது நியாயம்தான்.

ஏனெனில் இதுவரை சிலைகள் பேசியதில்லை.

ஆனால் இது பற்றிக் கொஞ்சம் விளக்கமாக உங்களுக்கு சொன்னால்தானே புரியும்?

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக அந்திக் கிறிஸ்து உலகில் தோன்றும் காலத்தில் அந்திகிறிஸ்துவுக்காக ஒரு சிலை செய்யப்படும். (அந்திக்கிறிஸ்துவையும் சிலை மோகம் விட்டு வைக்காதது பரிதாபமே) அந்திகிறிஸ்துவுக்காக செய்யப்படும் அந்தச் சிலை நாம் இதுவரை பார்த்து வரும் சிலைகளைப் போலல்லாமல் வித்தியாசமானதாக இருக்கும் என்று வேதம் சொல்கிறது.

என்ன வித்தியாசம் என்பீர்கள்.

தொடர்ந்து கட்டுரையைப் படிக்கும் முன்பாக வெளிப் படுத்தல் விசேஷத்தில் 13 : 14-17 வரையுள்ள வசனங்களை மறுபடியும் படித்துவிடுவது உத்தமம்.

அதில் என்ன சொல்லியிருக்கிறது?

கடைசிக்காலத்தில் உருவாக்கப்படும் இந்தச் சொருபம் (சிலை) பேசும் தன்மையுள்ளதாக இருக்கும். இரண்டாவது தன்னை வணங்காதவர்களை கண்டுகொள்ளும் ஆற்றலுள்ளதாக

இருக்கும். மூன்றாவதாக தன்னை மதிக்காதவர்களை அல்லது வணங்காதவர்களை கொல்லக்கூடிய ஆற்றலுள்ளதாக இருக்கும். பயங்கரமாக இல்லை?

இந்த சிலையின் வேலை இத்துடன் முடிந்துவிடவில்லை. இன்னும் பாருங்கள். அது சிறியோர் பெரியோர் என்று யாவருடைய கைகளிலும் ஒரு முத்திரையை பதிக்கும்படி செய்யும். அதாவது உலகமெங்குமுள்ள யாவருக்கும் என்றால் அது எவ்வளவு கடினமான பணியை செய்யும்படிக்கான சொருபம் என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

இரண்டாவது அந்த முத்திரையை பெறாதவர்களை கண் காணித்து அவர்களை எந்த ஒரு பொருளையும் விற்கவும், வாங்கவும் கூடாதபடிக்கு தடை செய்ய வேண்டும். இவ்வளவு பணிகள் இருக்கிறது இந்த சொருபத்திற்கு.

அதெல்லாம் சரிதான். ஆனால் ஒரு சொருபமானது பேசவும், நடக்கவும், மனிதர்களை அடையாளம் கண்டுபிடிக்கவும் செய்யும் என்பது நடைமுறையில் சாத்தியமானதுதானா?

இன்று நம்மை சுற்றி நடைபெற்று வரும் சம்பவங்களை கூர்ந்து கவனித்துப் பார்த்தால் இது சாத்தியம்தான் என்பது தெளிவாக விளங்குகிறது.

நவீன விஞ்ஞானம் இன்று மனிதன் செய்வதைப் போலவே பல வேலைகளை செய்யும்படிக்கு இயந்திர மனிதர்களை உருவாக்கத் துவங்கியிருப்பது, இனி அந்திக்கிறிஸ்துவின் காலத்தில் உண்டாக்கப்படப் போகும் சொருபத்திற்கு முன்னோடியாகத் தான் தோன்றுகிறது.

இன்றைய விஞ்ஞானம் படைத்திருக்கும் இந்த இயந்திர மனிதர்களுக்கு ரோபோ என்று பெயர்.

ரோபோக்களை உருவாக்கத் துவங்கியதிலிருந்து இன்று மனித னுக்கு போட்டியாக அவை எல்லாத்துறைகளிலும் தலை யிடுகின்றன. இந்த ரோபோக்களின் தயாரிப்பில் ஜப்பான் தான் முன்னிலை வகிக்கிறது.

எல்லாத் துறைகளிலும் பணியாற்ற இன்று ஜப்பானியர்கள் ரோபோக்களை உருவாக்கத் துவங்கியுள்ளனர். ரோபோக்கள்

அப்படி என்னதான் செய்கின்றன? காபி போடுகின்றன. கணவனுக்கு ஒத்தாசையாக (சில வீடுகளில் மனைவிக்கு) துணி துவைக்கின்றன. சில காய்கறி நறுக்குகின்றன. சில வீட்டைத் துடைக்கின்றன. சில பள்ளிக்குப் பிள்ளைகளை தப்பவிடாமல் அழைத்துச் செல்கின்றன. பாத்ரூமில் அளவாய் பிரஷில் பேஸ்டை எடுத்து தருகின்றன.

ஒன்று வாங்கிப்போட்டால் நல்லது. ஆனால் இப்போதைக்கு கொஞ்சம் விலை அதிகம். கொஞ்சம் பொறுங்கள். இன்னும் கொஞ்ச நாளில் கல்யாண நாளுக்கு மனைவிக்கு பிரசண்ட் பண்ணுகிற அளவுக்கு சகாயமான விலைக்கு வந்துவிடும்.

மேலே நாம் சொன்ன வேலையெல்லாம் செய்யும் ரோபோக் கள் சாதாரண ரகம். இதிலேயே இன்னும் புத்திசாலியான ரகங்கள் இருக்கின்றன.

அவை சமையலெல்லாம் செய்யாது. விஞ்ஞானிகளுக்கு ஒத்தாசையாக கணக்கு போட்டுக் கொடுக்கின்றன. ரசாயனங்களை பயமில்லாமல் கலந்து கொடுக்கின்றன. நட்டு, போல்ட் போன்றவை களை முடுக்கிக் கொடுக்கின்றன.

ஏவுகணைகள் செய்வதிலும், குண்டுகள் தயாரிப்பதிலும் ரோபோக்களின் பணிசாலச் சிறந்தது என்கின்றனர் விஞ்ஞானிகள்.

மனிதனின் கண்டுபிடிப்பான இந்த பணிசெய்யும் சொருபங் கள் இன்று மிகவும் புகழடைந்து கொண்டு வருகின்றன.

ஜப்பானிய கார் தயாரிப்பில் 40 சதவீதப் பணியாளர்கள் ரோ போக்கள் தான். இது 1980ஆம் வருடத்திய கணக்கு இன்று 65 சதவீதம் என்கிறார்கள். அதாவது ஒரு நிறுவனத்தில் 100 பேர் பணியாற்றினால் அதில் 65 பேர்கள் இயந்திர மனிதர்கள். பல நிறுவனங்கள் இன்றைக்கு இயந்திர மனிதர்களை நாடத் துவங்கி யுள்ளன.

காரணம், மனிதர்களை விட இயந்திர மனிதர்களுக்கு செயல் திறன் ஜாஸ்தி. ஜப்பானிய எலெக்ட்ரானிய பொருள் ஒன்றின் ஸ்குரூவை கழற்றிவிட்டு திரும்ப மாட்டிப் பாருங்கள் இயந்திர மனிதனின் செயல்திறன் தெரியும்.

செயல்திறன் மட்டுமல்ல, இயந்திர மனிதர்களுக்கு உத்தமத்

தனமும் அதிகம் தான். ஸ்டிரைக் கிடையாது. பொங்கலுக்கு போனஸ் கேட்காது. அலுப்பில்லாமல் உழைக்கும். மனித தொழிலாளிகள் மாதிரி இடையே வெளியே போய் சிகரெட் பிடிக்காது. மாமனார் செத்துவிட்டதாக பொய் சொல்லி வருடத்திற்கு ஆறுமுறை லீவு எடுக்காது. யூனியன் அமைத்து நிர்வாகத்திற்கு எதிராக கோஷம் போடாது.

இந்த மாதிரி நிறைவான அனுகூலங்களால் ரோபோக் களையே முதலாளிவர்க்கம் விரும்புகிறது.

ரோபோக்களின் வருகையால் மனித உரிமை பாதிக்கப்படு கிறது. மனிதர்களின் வேலை வாய்ப்பு பாதிக்கப் படுகிறது. எனவே ரோபோ தயாரிப்பை கட்டுப்படுத்து என்று H.R.W.A. போன்ற உலக அமைப்புகள் ஆவேசமாய் குரல் கொடுக்கின்றன.

இவர்கள் இப்படி எதிர்ப்புக் காட்டுவதனால் தான் இயந்திர மனிதர்களை வேலைக்கு அமர்த்துவது கொஞ்சம் கட்டுப்பாட்டி லிருக்கிறது. இல்லையென்றால் தொழிலகங்களில் 100 சதவீதமுமே இயந்திர மனிதர்கள் தான் பணியிலிருப்பார்கள்.

இது ஒருபுறம் இப்படியிருந்தாலும் ரோபோக்களின் தயாரிப்பு உச்சநிலையை எட்டியுள்ளது என்னவோ உண்மைதான்.

ஜப்பானிலுள்ள இமைச்சி என்ற இடத்திலுள்ள Western Village க்குப் போய் பாருங்கள். நல்லதாய் ஒரு ரோபோவை பிளாட்பாரத்திலேயே வாங்கலாம். இங்குள்ள கடைகளி லெல்லாம் ரோபோக்களின் விற்பனை கொடிகட்டிப் பறக்கிறது. சமீபத்தில் இங்கு நடந்த விஞ்ஞானக் கண்காட்சியில் இயந்திர மனிதர்களால் நடத்தப்பட்ட இன்னிசைக் கச்சேரி ரொம்பவும் பாப்புலர்.

ஜனங்கள் இன்று ரோபோவை அதிகமாக விரும்பத் துவங்கி விட்டனர். பின்னே, வீட்டை எத்தனை தடவைதான் அழுக்காக் கினாலும் ரோபோ எவ்வளவு பொறுமையாய் துடைத்து விடுகிறது. வேலைக்காரியானால் செய்வாளா என்ன? மரமண்டை மகனுக்கு எவ்வளவு நேர்த்தியாய் டியூஷன் சொல்லித் தருகிறது. ஆசிரியரா னால் இவ்வளவு பொறுமை காப்பாரா என்ன?

இன்று இயந்திர மனிதர்களின் ஆக்கிரமிப்பு ஜனங்களிடையே

யேயும் இரண்டறக்கலக்கத் துவங்கியுள்ளது.

ஜப்பானில் மட்டுமல்ல: எல்லா நாடுகளிலுமே. இந்தியாவில் இதன் தாக்கம் அவ்வளவு அதிகமாக இன்று தெரியாவிட்டாலும் இன்னும் கொஞ்ச நாட்களிலெல்லாம் இங்கும் ரோபோக்கள் பரவி விடும். டி.வி. மாதிரி, பிரிட்ஜ் மாதிரி, வாஷிங் மெஷின் மாதிரி இதுவும் அத்தியாவசியப் பொருளாகிவிடும். வருங்கால மாப் பிள்ளைகள் தங்கள் வரதட்சணைப் பட்டியலில் நாலு ரோபோ வையும் சேர்த்துக் கொள்வார்கள்.

இந்தியாவில் தான் தற்சமயம் ரோபோக்களின் நடமாட்டம் அதிகம் இல்லையே ஒழிய, மற்றபடி எல்லா தேசங்களிலும் அவற்றின் பயன்பாடுகள் அதிகரித்துக் கொண்டே தான் போகின்றன.

அமெரிக்காவில் ரோபோக்கள் சினிமாவில் நடிக்கின்றன. ரஷ்யாவில் சித்ரவதை செய்கின்றன. ஜப்பானில் கார் தயாரிக் கின்றன. இஸ்ரேலில் துப்பாக்கியுடன் காவல் காக்கின்றன. வளைகுடா நாடுகளில் ரோபோக்கள் பெட்ரோல் அடிக்கின்றன. ஷேக்குகளுக்கு கை, கால் பிடித்து விடுகின்றன.

ரோபோ தயாரிப்பில் இன்று "காகாமூரி ரோபாட்ஸ்" முன்னணி வகிக்கிறது. ரோபாட்ஸ் தயாரிப்பில் இந்த நிறுவனம் பல சாதனைகளை செய்துள்ளது.

இந்த நிறுவனத்தின் லேட்டஸ்ட் தயாரிப்பு மனிதன் போலவே உள்ள ரோபோக்கள் இவற்றிற்கு அண்டிராய்டுகள் என்று பெயர்.

இதில் என்ன - விசேஷம் தெரியுமா?

இதற்கு முன்னால் செய்யப்பட்ட ரோபோக்கள் எல்லாம் குச்சி, குச்சியாய் காலும், மொழுக் என்று ஹெல்மெட் வைத்தமாதிரி தலையும், ஹெட்போன் வைத்த மாலுமி மாதிரி காதுகளையும் கொண்டிருந்தன. இராத்திரி திடுக் என்று விழித்து ரோபோ இருக்கிற இடத்தை பார்த்தால் கூட பயமாக இருந்தது.

இப்போது அப்படியல்ல. கண்ணியமான தோற்றத்துடன் மனிதன் போலவே சதையாலான உடல் போலவே ரோபோக்கள் வந்து விட்டன.

நாம் கையில் வைத்துள்ள கண்ட்ரோல் போர்டில் அல்லது ரிமோட் கண்ட்ரோலில் பட்டன்களை அழுத்த, அழுத்த வித்தியாச மான மனநிலையை நாம் அதற்கு உண்டாக்கலாம். அதற்கு ஏற்றபடி அதன் முகபாவங்கள் மாறும். அன்பாய் பார்க்கும். எரிச்சலுடன் முறைக்கும், பல்லை நறநறவென்று கடித்து புருவத்தை நெரிக்கும். பட்டன்களை அழுத்தி செட்செய்வதின் மூலம் உங்கள் மாமியார் மேல் ரோபோவுக்கு எரிச்சலை உண்டு பண்ணலாம். இரண்டு நாள் அது பார்க்கிற பார்வையிலேயே அம்மையார் சொல்லாமல் கொள்ளாமல் வீட்டைக் காலி பண்ணிவிடுவார்.

இந்த அண்டிராய்டுகளை சினிமாவில் நடிக்கவைக்கவும், மற்றும் சில அசிங்கமான சமாச்சாரங்களுக்கு பயன்படுத்தவுமே தயாரித்திருப்பதாக அதன் தயாரிப்பாளர் மசூகி ஓஹாரா (Mashuki Okhara) தெரிவித்துள்ளார். நல்ல ஆளுய்யா.

இன்றைக்கு பேசுகிறதும், நடக்கிறதும், கிரியை செய்கிறதுமான சொருபங்களை செய்வது எளிது. ஜப்பானில் குடிசைத் தொழில்.

விஞ்ஞானத்திற்கு அப்படிப்பட்ட சத்துவம் சமீபகாலமாக கொடுக்கப்பட்டுள்ளது.

அந்திக்கிறிஸ்துவுக்காக செய்யப்படும் சொருபம் ஒருவன் தன்னை வணங்குகிறானா இல்லையா என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டுமானால் அது பார்க்கக் கூடிய ஆற்றலுள்ளதாகத்தான் இருக்க வேண்டும். இப்படி பார்க்கக்கூடிய கம்ப்யூட்டர்களை 1982லேயே கண்டு பிடித்து விட்டதாக விஞ்ஞானக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. இந்த பார்க்க கூடிய கம்ப்யூட்டர்களுக்கு WIZZARD என்று பெயர்.

மேலும் யோவான் அந்திக்கிறிஸ்துவுக்காக செய்யப்படும் சொருபம் தன்னை வணங்காதவர்களை கொலை செய்யும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கண்டுபிடிப்பு மனிதனை கொல்லுமா என்ன என்று கேள்வி எழலாம். ருமேனியா சிறைகளில் இன்று நடைமுறையில் கைதிகளை சித்திரவதைக் குள்ளாக்கவும், ரோபோக்கள் பயன்படுத்தப்படுவதாக செய்திகள் வந்துள்ளன.

ருமேனிய சிறையில் கிறிஸ்துவின் மேல், தான் கொண்டிருந்த விசுவாசத்திற்காக சித்திரவதை அனுபவித்த திரு. ரிச்சர்ட் உம்பிராண்ட் என்ற தேவ மனிதர் தன்னுடைய பத்திரிகையான Tortured for Christ என்ற பத்திரிகையின் 1980ம் வருடத்திய பதிப்பில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"ருமேனிய சிறையில் கடந்த காலங்களில் பிடிபட்ட கிறிஸ்தவ விசுவாசிகளை துன்புறுத்துவதற்கென்று தங்கள் விசுவாசத்தை விட்டு கிறிஸ்துவை மறுதலித்த முன்னாள் கிறிஸ்தவர்களையே பயன்படுத்துவது வழக்கம்.

இப்படி கிறிஸ்துவ விசுவாசத்தை மறுத்தவர்கள் கிறிஸ்துவ விசுவாசிகளை துன்புறுத்தும்போது, உபத்திரம் அனுபவிக்கும் கிறிஸ்தவர்களின் மன உறுதியைக்கண்டு மறுபடியும் கிறிஸ்துவ விசுவாசத்திற்கு திரும்பிவிடுகிறார்கள் என்பதால் அந்த நாட்டு அரசாங்கம் ரோபாட் என்ற இயந்திர மனிதனைக் கொண்டு விசுவாசிகளை சித்ரவதைக்குள்ளாக்குகிறது. ருமேனியாவில் பைபிள்களை விநியோகித்ததால் சிறைபிடிக்கப்பட்ட என்னுடைய நண்பரான இயான் கிளிப்பா என்பவர் இவ்வாறு ரோபோக்களை கொண்டு சித்ரவதை செய்யப்பட்டதால் மரித்துப் போனார்."

மனிதனால் செய்யப்பட்ட சொருபங்கள் வெறும் அழகுப் பொருட்களாகவும், காட்சிப் பொருட்களாகவும் இருந்த காலம் போய் இன்றைக்கு சொருபங்கள் பேச, வேலை செய்ய, சித்ரவதை செய்ய என்று ஆரம்பித்திருப்பது இது கடைசி காலத்திற்கான அறிகுறி என்று தெளிவாக அறிவுறுத்துகிறது.

சொருபங்கள் பேசத்துவங்கியிருக்கும் இந்த காலம் நிச்சயமாக பயங்கரமான காலத்திற்கு அறிகுறிதான் என்பது வேதத்தை நுணுக்கமாக படிப்பவர்களுக்கு விளங்கும்.

தற்காலத்தில் சாதாரணமாக செய்யப்பட்டுள்ள ரோபோக்களே இவ்வளவு வேலைகளை நேர்த்தியாக செய்யுமானால், அந்திக்கிறிஸ்துவின் காலத்தில் பல நாடுகளின் உதவியுடன், மிகுந்த பொருட் செலவில் தயாரிக்கப்போகும் சொருபம் எவ்வளவு விசேஷமாக செயல்படும்?

அது ஜனங்களை என்னென்ன பாடுபடுத்தும்? தனிமனித உரிமையில் எதிலெல்லாம் மூக்கை நுழைக்கும்??

கடைசிக் காலத்தில் படைக்கப்படும் சொருபம் பற்றி வேதம் சொல்லும் இந்த விஷயம் கொஞ்சக்காலம் முன்பு வரை வேதப் பண்டிதர்களுக்கு திகட்டலான விஷயமாகவே இருந்து வந்தது. சொருபம் என்றவுடன் நம்மூரில் இருக்கிற கற்சிலைகள் மாதிரி நினைத்துக் கொண்டு "அதெப்படி சிலையானது நடக்கும்? சிலை எப்படிப் பேசும்? என்று சிந்தித்தார்கள். சிலர் வேதத்தில் எல்லா வற்றையுமே அப்படியே நம்பிவிடக் கூடாது என்றார்கள்.

ஆனால் இப்போது வந்திருக்கிற ரோபோக்களின் காலம் தேவனுடைய வசனம் நிறைவேற உள்ள சாத்தியக்கூறுகளை நமக்கு முன்வைக்கின்றன. அன்டிராய்டுகள் நம் சந்தேகங்களுக்கு தெளிவான விடையாக அமைந்துள்ளன.

கடைசிக் காலத்தில் உருவாக்கப்படும் சிலை அல்லது சொரு பம் பிரம்மாண்டமானது என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் அதை நேபுகாத்நேச்சார் நிறுவிய வானளாவிய சிலை மாதிரி நினைத்துக் கொள்ளக்கூடாது.

பிரம்மாண்டம் என்பது உயரத்தையும், பருமனையும் தான் குறிக்க வேண்டுமென்பதில்லை. அசாத்தியமான செயல்திறன். சிந்தனை இவற்றையும் கூட பிரம்மாண்டம் என்கிற வார்த்தையால் குறிக்கலாம்.

எனவே காலம் சமீபமாயிற்று என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல ஒவ்வொரு சம்பவங்கள் மூலமும் தெளிவாக அறிவுறுத்தப்படு கிறது.

நடைபெறுகிற சம்பவங்கள், விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் எல்லாவற்றிலும் இயேசுவின் இரண்டாம் வருகைக்கான சான்று களும், ஆயத்தங்களும் தெரிகின்றன.

இனியும் நாம் பேசாமலிருந்தால் எப்படி?

ஆயத்தப்படுங்கள் ! ஆயத்தப்படுத்துங்கள்!!

# 4

## எச்சரிக்கைச் செய்தி

### மத்தேயு 24: 29 –30

அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே சூரியன் அந்தகாரப்படும். சந்திரன் தன் ஒளியைக் கொடாதிருக்கும். நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்.

அப்பொழுது மனுஷகுமாரனின் அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வருகிறதைப் பூமியின் சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.

### வெளிப்படுத்துதல் 6: 12 –13

அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக் கண்டேன். இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது. சூரியன் கறுப்புக் கம்பளியைப் போலக் கறுத்தது. சந்திரன் இரத்தம் போலாயிற்று.

அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது.

# தலைக்குமேல் ஆபத்து

தலைக்குமேல் நிறையக் கத்திகளை நூலில் தொங்கவிட்டு இருந்தால் உங்களால் அதற்கு கீழே நிம்மதியாக தூங்கமுடியுமா?

முடியாது என்று நீங்கள் சிலிர்ப்புடன் சொன்னாலும், உண்மையில் அதற்கு கீழே நாம் தூங்குகிறோம். மட்டுமல்ல, அலுவலகங்களுக்குப் போகிறோம். ஜாதிச் சங்கங்கள் அமைக் கிறோம். சண்டை போடுகிறோம். அரசியல் பண்ணுகிறோம். சபை நடத்துகிறோம். கல்யாணம் பண்ணுகிறோம். சொத்து சேர்க்கி றோம். இந்தப் புத்தகத்தைப் படிக்கிறோம். இன்னும் என்னவெல் லாமோ செய்கிறோம்.

இதெல்லாம் எப்படி சாத்தியமாகிறது?

தலைக்கு மேலே கத்தி தொங்குவதை அறியாமல் இருப்பதே காரணம். அதனால் தான் நம்மால் சாவகாசமாக எல்லாம் செய்ய முடிகிறது. எதிர்காலத்தை நினைக்கவும், பெண் பிள்ளைகளுக்கு வரன் தேடவும், வீடுகட்ட லோன் ஏற்பாடு செய்யவும் சாவதா னமாக முடிகிறது.

தலைக்குமேலே கத்தியா எங்கே என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

தலைக்கு மேலே தொங்கும் கத்தி என்று நான் குறிப்பிட்டது நட்சத்திரங்களைப் பற்றி, உவமைக்காகத்தான் அவற்றை கத்தி என்று குறிப்பிட்டேனேயொழிய உண்மையில் அவை கத்தியை விட பயங்கரமானவை; பலமானவை.

நட்சத்திரங்களின் பயங்கரம் தெரியாமல்தான் நாம் அவை பற்றி கவிதை பாடுகிறோம். நூறுநாள் கதாநாயகனுக்கு பெயர் சூட்டுகிறோம். கட்டங்களுக்குள் அவற்றை அடக்கி ஜோசியம் கணிக்கிறோம். கிறிஸ்மஸிற்கு அட்டையில் நட்சத்திரம் செய்து பல்ப் போட்டு வாசலில் தொங்க விடுகிறோம். பிள்ளைகளுக்கு நர்சரி ரைம்ஸில் நட்சத்திரம் பற்றி பாட்டு சொல்லிக் கொடுக்கி றோம்- ட்விங்கிள் ட்விங்கிள் லிட்டில் ஸ்டார்..

ஆனால் உண்மை நட்சத்திரங்கள் வித்தியாசமானவை. சில பூமியைவிட பன்மடங்கு பெரியவை. வெல்கம் என்றோ, ஹேப்பி கிறிஸ்மஸ் என்றோ எழுத முடியாதபடி மிகவும் சூடானவை.

நட்சத்திரங்கள் பாட்டிற்கு “தேமே” என்று தானே வானத்தில் மின்னிக் கொண்டிருக்கின்றன. அதில் நமக்கு என்ன ஆபத்து? என்பீர்கள் இந்த பிரசங்கியார்களே இப்படித்தான் எதையும் மிகைப்படுத்தி பயப்படுத்திவிடுவீர்கள்.

அட இருங்க சார். விஷயம் அப்படியல்ல, இரவு நேரத்தில் வானத்தைப் பார்த்தால் மனோரம்மியமாகக் காணப்படும், கவிதை பாடத் தூண்டும் இந்த நட்சத்திரங்கள் கடைசி நாட்களில் ஒரு நாள் அத்திக்காய்கள் மரத்திலிருந்து உதிர்வது போல் பூமியின் மேல் உதிரும் என்கிறது வேதம்.

*மத்: 24:29*

*சூரியன் அந்தக்காரப்படும். சந்திரன் ஒளியைக் கொடா திருக்கும் நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்.*

அவை என்ன ஜிகினாவில் ஒட்ட வைத்த நட்சத்திரங்களா உதிர்வதற்கு? நட்சத்திரங்கள் பற்றியும் வானவியல் பற்றியும் அறியாமலிருந்த காலத்தில் வேண்டுமானால் நீங்கள் சொல்வதை நம்பலாம்.

இப்போது நாஸாவில் பெரிய பெரிய டெலஸ்கோப்களை வைத்து ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள் இரவு பகலாக கான் பரன்ஸ் நடத்தி வானவியல் பற்றி விலாவாரியாக ஆராய்ச்சிக் குறிப்புகள் வெளியிட்டுக் கொண்டிருக்கும் காலத்தில் நட்சத் திரங்கள் உதிரும் என்று சொல்வது வேடிக்கையாகத்தான் இருக்கிறது.

இவை வேதத்தை மறுப்பவர்களும், சில தலை கனத்த வேத நிபுணர்களும் எழுப்பியுள்ள சந்தேகம்.

இவர்களது புத்தகங்களை படிக்கும் சாதாரண விசுவாசிகளும் அதுதானே அது எப்படி சாத்தியம்? என்று குழம்புவது வாடிக்கை.

ஆனால் வானத்தின் நட்சத்திரங்களையும், வான மண் டலத்தின் சில அடிப்படை நிலைகளையும் பற்றி கொஞ்சம் தெளிவாக நீங்கள் புரிந்து கொண்டால் வேதத்தை நம்ப கடினமாக இருக்காது. அது எவ்வளவு உண்மையென்றும் தெளிவாகும்.

நட்சத்திரம் என்று மாத்திரமல்ல. வேதம் சொல்லும் ஒவ்வொன்றையுமே நீங்கள் கொஞ்சம் ஆழமாய் சென்று பார்ப்பீர்களேயானால் தான் வேதம் எவ்வளவு பிரம்மாண்டமான புத்தகம் என்பதும், வேதம் சொல்லும் ஒவ்வொன்றும் சமூலமும் சத்தியம் என்றும் தெரியவரும்.

அத்திக்காய்கள் உதிர்வது போல நட்சத்திரங்கள் பொல பொல வென உதிரும் என்று வேதம் சொல்வதை நம்புவது தற்கால கிறிஸ்தவர்களுக்கு கஷ்டமான விஷயம் தான். ஆனால் நட்சத்திரங் களைப் பற்றி கொஞ்சம் தெளிவாக தெரிந்து கொண்டால் நம்புவது கடினமல்ல.

எனவே, தலைக்கு மேல் தொங்கும் இந்த அபாய மினுமினுப்பு களைப் பற்றி சற்று விரிவாக எழுதலாம் என்று எண்ணுகிறேன்.

இரவு நேரத்தில் நட்சத்திரங்களை கொஞ்சம் கூர்ந்து பார்க்க வேண்டுமானால் வானத்தில் மேகமில்லாமலும், மனசில் கவலை யில்லாமலும் இருக்க வேண்டியது அவசியம். மனசில் கவலையிருந் தால் யானை கூட கண்ணுக்கு தெரியாது.

நட்சத்திரங்களை தெளிவாக பார்க்க மொட்டைமாடி ரொம்ப வும் உத்தமம். அடுக்குமாடி நகரங்களில் கஷ்டம்.

சாதாரணப் பார்வைக்கு ஒளியை ஊசி முனையில் தொட்டுத் தொட்டு வானத்தில் புள்ளி வைத்த மாதிரி தோன்றினாலும், நட்சத்திரங்களில் பலவகைகள் இருக்கிறதாம்.

பொதுவாக நாம் எல்லாவற்றையுமே நட்சத்திரம் என்று குறிப் பிட்டாலும் எல்லாமே நட்சத்திரங்கள் அல்ல.

சில எரிபந்தங்கள். விண்வெளித் தூசியும், வாயுவும் (Intersteller Gas & Dust) இணைந்து சுருங்கி குறிப்பிட்ட அளவு வெப்பம் அடை கையில் அணுப்பிணைப்பு (Neuclear Fusion) உண்டாகி ஹீலியம் என்ற வாயுவை உண்டு பண்ணி எரிபந்தமாகி, நட்சத்திரமாக நமக்கு காட்சியளிப்பவை.

இன்னும் சில பூமி மாதிரியான கோள்கள் (Planets) தன்னில் தான் ஒளியற்றவை. ஆயினும் சூரியன் மற்றும் பிரம்மாண்டமான நட்சத்திரங்களின் ஒளியை பிரதிபலிப்பதால் மின்னுகின்றன. இதையும் நாம் நட்சத்திரங்கள் என்றுதான் குறிப்பிடுகிறோம்.

மூன்றாவது எரிகற்கள் வகையை சார்ந்தவை. கல் என்றவுடன் நீங்கள் ஏதோ கார்ப்பரேஷனில் இருந்து ரோடு போடுவதற்காக பல காலமாக ரோட்டோரங்களில் குவித்து வைத்திருப்பார்களே அது மாதிரி நினைத்துக் கொள்ளக்கூடாது. இவற்றின் பெயர்தான் கல்லேயொழிய ஒவ்வொன்றும் மலையளவிலானவை.

இவை சூரியன் மற்றும் நட்சத்திர ஒளிப்பாதைக்குள் நுழையும் போது ஒளிபட்டு மின்னுகின்றன. நம்மைப் பொறுத்தவரை இதுவும் நட்சத்திரம் தான். அப்படித்தான் அழைக்கிறோம்.

நான்காவது வகை, விண்வெளி தூசுகள். தூசி என்றால் காற்றில் பறக்கும் புழுதி மாதிரியானதல்ல. குற்றால அருவியில் குளித்துக் கொண்டிருக்கும் போது சொல்லாமல் கொள்ளாமல் உருண்டு வந்து தலையில் விழும் பெரும்பாறை போன்றவை. விண்வெளி பாஷையில் தூசு. இவை சாதாரணமாக கண்ணுக்கு தெரியாது. கூட்டம் கூட்டமாக கூட்டணியமைத்துக் கொண்டு ஜம் என்று வானத்தில் மிதக்கும்.

ஒரு கூட்டணியில் சுமார் பத்துக் கோடி கல்லிருக்கும். இவை பூமியின் ஆகர்ஷணக் கோட்டில் வந்தால் மட்டுமே கண்ணுக்கு புலனாகும், "ஹை, நட்சத்திரம்!" என்று கைகொட்டி குதூகலிக்கும்

முன்பாகவே தலையில் விழுந்துவிடும். ஜாக்கிரதை.

ஐந்தாவதாக மனித தயாரிப்புகள். வான ஆராய்ச்சிக்காக, டெலிபோனை சீர்ப்படுத்த, டி.வி.யில் சினிமா ஒளிபரப்பித் தூக்கம் கெடுக்க, இன்டெர்நெட் கனெக்ஷனுக்காக என்று பல்வேறு நோக்கங்களுக்காக அனுப்பப்பட்ட விண்கூடுகள். இவை பறக்கும் உயரம், நேரம் இவற்றைப் பொறுத்து நம் கண்ணுக்குத் தெரியும். ஒளி மேலே படுவதாலேயே நம் கண்களுக்குப் புலனாகும். இதையும் நாம் நட்சத்திரமாகத்தான் நினைக்கிறோம்.

ஆறாவது வகை, மினி கிரகங்கள் (Asteroids). இவை ஏராளமாக வான வீதியில் மிதக்கின்றன. சில வருடம் முன்பு பூமியின் தலையில் விழுந்தே தீருவேன் என்று பிடிவாதம் பிடித்து பின்பு மனம்மாறி விலகிச் சென்ற இகாரஸ் (Icarus) இந்த வகை குட்டிக் கிரகம்தான். பூமியைச் சுற்றிலும் உலாவரும் இது மாதிரி யான குட்டிக் கிரகங்களின் எண்ணிக்கை மாத்திரம் 45,000 என்று அமெரிக்காவின் மாஸசூஸெட்ஸ் ஆய்வகமும். இல்லை.. இரண்டு லட்சம் நாங்கள் பார்த்தோம் என்று ரஷ்ய விண்வெளி ஆய்வகமும் சொல்லுகின்றன. அவர்கள் ஒரு முடிவுக்கு வரட்டும். அதுவரை மொத்தத்தில் பூமியை சுற்றிலும் ஆயிரக்கணக்கான குட்டி கிரகங் கள் உலா வருகின்றன என்பதை மாத்திரம் தெரிந்து கொள்ளலாம்.

மேலே நான் உங்களுக்கு விளக்கியிருக்கும் இந்த ஆறுவகை மினுமினுப்புக்களையும் சேர்த்துத்தான் நாம் நட்சத்திரங்கள் என்று சொல்கிறோம்.

இவைகளில் சிலதைக் கொண்டு தான் ஜாதகம் கணித்து மேட்ரிமோனியல் தகவலுக்காக பயன்படுத்துகிறோம். ரிஷிகள் கோபித்துக் கொண்டு வானத்தில் திரிவதாக புராணம் பண்ணு கிறோம்.

பொதுவாக நட்சத்திரங்களை உற்றுப் பார்த்தால் அவை பல்வேறு வண்ணங்களில் ஒளிவிடுவதைப் பார்க்க முடியும்.

ஒளியை வைத்து நட்சத்திரங்களை சிவப்பு, மஞ்சள், நீலம் என்று வகைப்படுத்துகிறார்கள். இவை வெளியிடும் வெப்பத்தின் அளவைப் பொறுத்து நட்சத்திரங்களுக்கு நிறம் அமைகிறதாம்.

சூரியனும் நட்சத்திர வகையை சேர்ந்ததுதான். இதை மஞ்சள்

நட்சத்திரம் என்கிறார்கள். இதன் மேற்பரப்பு வெப்பம் 6000 டிகிரி செல்சியஸ். நீல நட்சத்திரங்களுக்கு இதைவிடக் கூடுதல் வெப்பம் உண்டு 35,000 டிகிரி செல்சியஸ்.

அப்படியானால் சிவப்பு இன்னும் கூடுதலாகத் தானே இருக்கும் என்று எண்ணுகிறீர்கள். அதுதான் இல்லை. சிவப்பின் வெப்பம் சூரியனைவிடக் குறைவு. அதாவது 3,500 டிகிரி செல்சியஸ். பூமியில் 35 டிகிரிக்குமேல் போனாலே தாங்குவது கடினம். 40க்கு மேல் போனால் பிளாட்பார மரணங்கள் சகஜம். 3,500 டிகிரி என்றால் கணக்குப் பார்த்துக் கொள்ளுங்கள்.

நாம் நட்சத்திரம் என்று சொல்லும் இந்த ஆறுவகைகளுக்குள் பூமியின் தலையில் விழ சாத்தியமுள்ளவை எரிகற்களும் சில கோள்களும்தான். (மனித தயாரிப்புகள் தனி) இதை Minor Planets அல்லது Asteroids என்பார்கள்.

பூமியின் தலையில் விண்கற்கள் விழுவது ஒன்றும் புதியதல்ல. தினசரி ஆயிரக்கணக்கான கற்கள் விழுந்து கொண்டுதானிருக்கின்றன. இவை 45,000 கி.மீ. வேகத்தில் பூமி மண்டலத்திற்குள் நுழைவதால் காற்றில் உராய்ந்து கரிந்து போய் சாம்பலாகி கரைந்துவிடும். சில சமயங்களில் சிறு விளாங்காயளவு மாத்திரம் மிஞ்சும்.

கொஞ்சம் பெரிய சைஸ் கற்கள் விழுந்தால் எரிந்தது போக ஒரு கணிசமான அளவு மிஞ்சும்.

ஆப்பிரிக்காவில் ஹோபாவெஸ்ட் (Hoba West) என்ற இடத்தில் 60 டன் எடையுள்ள விண்கல் இருக்கிறது. அமெரிக்காவிலுள்ள அரிசோனா மாநிலத்தில் ஒரு விண்கல் மோதி ஒரு மைல் குறுக்களவுள்ள பள்ளம் உண்டாகியுள்ளது. இது 22,000 ஆண்டுகளுக்கு முன்னால் உண்டாகியிருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள்.

நியூயார்க் நகரில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள ஒரு விண்கல்லின் எடை 31,000 கிலோ.

எரிகற்கள் தவிர குட்டிக் கிரகங்களும் (Asteroids) பூமி யில் விழ வாய்ப்புள்ளவையே. குட்டிக் கிரகம் என்றால் ஏதோ ரப்பர் பந்து மாதிரி நினைத்துவிடக் கூடாது. இதில் இகாரஸ் என்ற கிரகம் சுமார் 1 மைல் சுற்றளவுள்ளது. ஒரு குன்று அளவிற்கு இருக்கும்.

இது மாதிரியான கிரகங்கள் லட்சக்கணக்கில் உலாவி வருகின்றன. இவற்றில் பல ஒழுங்கற்ற பாதையில் ஓடுகின்றன.

சமயா சமயங்களில் இவற்றில் பல பூமிக்கருகில் அடிக்கடி வந்து செல்லுகின்றன. 1982ல் வானவியலார் ஆராய்ச்சி செய்கையில் புதிதாகக் காணப்பட்ட சிவப்பு ஒளியை விண்ணில் கண்டார்கள். அதை Infra Red புகைப்படங்களில் பதிவு செய்த போது அவை சுமார் 40,000 கற்கள் கொண்ட கூட்டம் என்றும், அவை வழி தவறி பயணிக்கின்றன என்றும் கண்டார்கள்.

இது மாதிரியான கூட்டம் பூமியின் பாதையை தொடுமானால் பூமியின் ஈர்ப்பு விசையால் உள்ளுக்குள் இழுக்கப்பட்டு சரமாரி யாக பூமியின் மேல் மோதும். பார்ப்பதற்கு மழை பொழிவது மாதிரி, அல்லது அத்திக்காய்கள் உதிர்வது மாதிரியிருக்கும்.

இகாரஸ் கிரகம் 1968ம் ஆண்டு பூமியை நெருங்கிச் சென்றது. அப்போது பூமியால் இழுக்கப்பட்டு மோதிவிடுமோ என்று அஞ்சப் பட்டது. 1973ம் ஆண்டில் ஹெர்மிஸ் (Hermis) என்ற கிரகமும் பூமியை நெருங்கிச் சென்றது. அமோர் (Amor) என்னும் சிறிய கோள் 8 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூமியின் பாதையை வெட்டிச் செல்கிறது. எனவே எந்த விநாடியிலும் சிறு கிரகங்களில் ஏதாவதொன்று பூமியின்மேல் மோதிவிட வாய்ப்புண்டு. இது மாதிரி கிரகங்கள் பூமியில் மோதினால் நடப்பதென்ன?

1908ம் ஆண்டு சைபீரியாவிலுள்ள டுங்குஸ்கா (Tunguska) என்ற காட்டுப்பகுதியில் மிகச்சிறிய கிரகம் ஒன்று மோதியதால் உண்டான சப்தம் 500 மைல் தூரத்திற்குக் கேட்டதாம். அது விழுந்த இடத்தை மையமாக வைத்து பல சதுரமைல் பரப்பிற்கு மரங்கள் வட்டமாக விழுந்து கருகிக் கிடந்தனவாம். இதுபோல உலகில் 100க்கும் மேற்பட்ட இடங்களில் பல நூற்றாண்டுகளுக்கு முன் விண்கோள்கள் விழுந்த இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் மிகப் பெரிய விண்கல் பள்ளம் மகாராஷ்டிரா விலுள்ள விதர்பா வட்டத்திலுள்ளது. தண்ணீர் நிரம்பி ஏரியாக காட்சியளிக்கும் இப்பள்ளத்தின் ஆழம் 660 அடி. குறுக்களவு 5900 அடி.

மிகப்பெரிய கோள்களில் ஒன்று தற்காலத்தில் விழுந்தால் என்னென்ன நடக்கும் தெரியுமா? கிரகம் பூமியை நெருங்க நெருங்க

பயங்கரமான வெப்பம் உண்டாகும். மரங்கள் சடசடவென முறியும். நம் வீட்டு டி.வி. கரகரவென ஒலியெழுப்பி.. டமார்.. புழுதி மண்டலம் திடீரென எழும்பும். அது மோதியவுடன் ரோட்டில் நடந்து கொண்டு இருப்பவர்கள் பல மைல் தூரம் உயரே வீசியெறியப்பட்டு இதென்ன? என்று புரியாமலேயே கீழே விழுந்து சிதறுவார்கள். வாகனங்களும் அப்படியே.

வானத்தில் வீசியெறியப்படும் கல், மண் இவற்றால் சுமார் இருபது நாட்கள் சூரிய ஒளி இல்லாமல் போகும்.

கடலில் இவை விழுந்தால் பேரலைகள் எழும்பி கடற்கரைப் பட்டணங்களை கபளீகரம் செய்யும். சில கப்பல் முதலாளிகளின் தலையில் துண்டைப் போடும். பல தீவுகள் மேப்பில் காணாமல் போகும்.

இப்படிப்பட்ட விபத்துக்களை உண்டுபண்ணும் சாத்திய முள்ள விண்கோள்கள் என்று சுமார் 3,900 குட்டி கிரகங்களைப் பெயரிட்டு எண் கொடுத்து கண்காணித்து வருகிறார்கள். ஒவ்வொன்றும் ஆபத்தான கிரகக் குட்டிகள்.

நம்மை அடிக்கடி பயமுறுத்தும் கிரகங்கள் ஈராஸ் (Eros) மற்றது செரிஸ் (Ceres), இவற்றுள் செரிஸ் தான் மிகப்பெரியது. சுமார் 600 மைல் குறுக்களவுள்ளது. மூன்றாவது வெஸ்டா (Vesta) இது மிகப் பிரகாசமானது. சாதாரண கண்களால் பார்க்க முடியும். ஒரு வேளை சிறு பிள்ளைகளாக இருக்கும் போது நீங்கள் கூட இதைப் பார்த்து டுவிங்கிள்.. டுவிங்கிள். பாடியிருக்கலாம். சாத்திய மிருக்கிறது.

பலமான ஏதாகிலும் கல் மோதுமானால் பூமி சற்று அச்சுமாற சாத்தியம் உண்டு. அப்போது அதுதன் ஈர்ப்பு விசையால் நிறைய எரிகற்களை தன்னகத்தே ஈர்த்துக் கொள்ளவும் சாத்தியமுண்டு. அப்போது அத்திக்காய் உதிர்வது போல இவை பொல பொலவென உதிரும். ஆனால் ரசிக்கத்தான் முடியாது.

இப்படி நடைபெற நிறைய சாத்தியமுண்டு என்று வானியல் இன்று ஒத்துக் கொண்டாலும் லென்ஸ் கூடக் கண்டுபிடிக்கும் முன்பு வேதம் இதை சொல்லிவிட்டது ஆச்சரியம் தான் இல்லையா?

“... சூரியன் அந்தகாரப்படும். சந்திரன் தன் ஒளியை கொடா திருக்கும். நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்பபடும்” (மத் 24:29)

இன்று வானத்தில் மின்னும் நட்சத்திரங்களில் பல கர்த்தரின் கட்டளைப்படி கடைசி நாளில் பூமியின் மேல் உதிர்வதற்காக வைக்கப்பட்டுள்ளன. இது தேவனுடைய வானத்தின் ஆயுதசாலை. வேதம் இதுபற்றி சொல்வதைக் கவனியுங்கள்.

*யோபு 38: 22, 23*

***“கல்மழையிருக்கிற பண்டசாலைகளைப் பார்த் தாயோ? ஆபத்து வரும் காலத்திலும், கலகமும், யுத்தமும் வருங்காலத்திலும் பிரயோகிக்கும்படி நான் அவைகளை வைத்து வைத்திருக்கிறேன்.”***

ஆபத்து வரும் காலமும், யுத்தமும் கலகமும் வரும் காலமும் என்பது இயேசுவின் இரண்டாம் வருகைக்கு முன்பான கடைசிக் காலத்தைத்தான் குறிப்பிடுகிறது இல்லையா?

ஆம். இந்த கடைசி காலத்தில் பூமியின் மேல் பிரயோகிப்ப தற்காகத் தான் கர்த்தர் கல்மழையை வானத்தில் சேர்த்து வைத்திருக்கிறார் என்கிறது வேதம். கர்த்தருடைய இந்த கல்பண்டசாலையில் சிவப்பு நட்சத்திரக் கூட்டம் ஒருபுறம். எரிகற்கள் திரள் ஒருபுறம். சிறு கோள்கள், 3900மும்.. என்று ஒரு பெரிய ஆயுத சாலையே அவர் கை அசைவிற்காக காத்திருக்கிறது. நம் தலைக்கு மேலே.

இவற்றையெல்லாம் உணராமல் ஹ.... நட்சத்திரமாவது.. உதிர்வ தாவது, என்று கோணல் சிரிப்புடன் ஏளனம் செய்வது அறியாமை யைத்தான் காட்டுகிறது.

பாவம் நட்சத்திரம் என்றால் இவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் மேக்கப் போட்ட செல்லுலாயிட் (சினிமா) நட்சத்திரங்கள் தான் போலும்.

# 5

## ஏச்சரிக்கைச் செய்தி

### ஏசாயா: 2:2

கடைசி நாட்களில் கர்த்தருடைய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியிலே ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாக உயர்த்தப்படும். எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடி வருவார்கள்.

### 2 தெசலோனிக்கேயர்: 2:4

அவன் எதிர்த்து நிற்கிறவனாயும் தேவனெனப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாக தன்னை உயர்த்துகிறவனாயும் தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்.

# ஆலயம் காட்டும் அடையாளம்

## ஆலயம் காட்டும் அடையாளம்

கோயிலாயிருந்தாலும் சரி, அது தேவாலயமாயிருந்தாலும் சரி அல்லது மசூதியாயிருந்தாலும் சரி, அவற்றைக் கட்டுவதென்பது தற் காலத்தில் ஒன்றும் கடினமான காரியமில்லை.

அயோத்தி கோயில் போன்ற ஒரு சில மாத்திரம் விதிவிலக் குகள். இவை போன்ற அரசியல் கலந்த கோயில்கள் தவிர ஏனைய கோயில்களை கட்டுவதில் அப்படியொன்றும் சிரமமிருப்பதாக தெரியவில்லை.

ஒரு நாலுபேர் சேர்ந்து "டிரஸ்ட்" அமைத்துக் கொள்ள வேண்டியது. ஆளுக்கு கொஞ்சம் பணம் போட்டு ரசீது புத்தகங்களை அச்சடித்துக் கொண்டு கோயில் கட்டுவதற்காகப் பணம் சேகரிக்க வேண்டியது. உத்திரவாதமாக ஒரு வருடத்திற் குள்ளெல்லாம் கோயில் கட்டிவிடலாம்.

யாராவது ஒரு அருள்வாக்கு சாமியார் அரசமரத்தடியில் எழுந் தருளி பக்தர்களுக்கு அருள்வாக்கு சொல்ல ஆரம்பித்தால்

இன்னும் சீக்கிரமாக ஆறே வாரத்தில் தன்னை சுற்றிலும் கோயில் கட்டி விடலாம். இந்தியாவில் மாத்திரமல்ல. உலகமெங்குமே கோயில்களை எழுப்புவது அப்படி ஒன்றும் கடினமான காரிய மில்லை.

ஆனால் எருசலேம் தேவாலயம் மட்டும் இதற்கு விதிவிலக்கு.

எருசலேமில் இருந்த தேவாலயத்தை மறுபடியும் எழுப்பிக் கட்ட வேண்டுமென்று யூதர்களும் சரி, இஸ்ரவேல் அரசாங்கமும் சரி எவ்வளவோ பிரயாசப்பட்டும் இன்று வரை அதைக் கட்ட முடியவில்லை.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டு காலமாக மறந்து போயிருந்த தேவாலயத்தை இன்று மறுபடியும் கட்டியெழுப்ப யூதர்கள் முயற்சிகள் மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். அவர் களது முயற்சிகளில் விரைவில் தேவாலயத்தை கட்டிவிடும் சாத்தி யங்கள் தெரிகின்றன.

இதுதான் இன்றைக்கு நமக்கு பயத்தையும், பதட்டத்தையும் தருகிறது.

ஏன்? நல்ல காரியம் தானே, நடக்கட்டுமே. ஏதோ ஒரு தேசத்தில் தேவாலயம் கட்டப்பட்டால் இதில் நாம் பயப்படுவதற் கும், பதட்டப்படுவதற்கும் என்ன இருக்கிறது?

இருக்கிறது சார். கொஞ்சம் பொறுமையாகப் படியுங்கள். புரியும். உங்களுக்கும் பதட்டம் வரும்.

எருசலேமில் கட்டப்படவிருக்கும் தேவாலயம் ஒன்றும் புதிதல்ல. அங்கே ஏற்கனவே ஆலயம் இருந்தது தான். ஆனால் ரோமர்களின் காலத்தில் நடந்த கலவரத்தில் தீக்கிரையாக்கப்பட்டு, பின்னர் இடிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டது.

ஆலயத்திற்குச் சொந்தக்காரர்களான யூதர்களும் கலவரத் தினால் சிதறி ஓடி, பல தேசங்களில் அகதிகளாகப் பரவி கொஞ்சக் காலத்தில் காணாமல் போய்விட்டார்கள். அவர்கள் என்ன வானார்கள் எங்கிருக்கிறார்கள் என்று கவலைப்படவும் யாருமில்லை. இந்த கால கட்டத்தில் இடிக்கப்பட்டுப் போன தேவாலயத்தை யாரும் ஏறிட்டுக் கூடப் பார்க்கவில்லை.

கி.பி. 30ல் தேவாலயம் இடிக்கப்பட்டு ஏறத்தாழ ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகள் வரை யாரும் இதைப்பற்றிக் கண்டு கொள்ளவில்லை. நினைத்துப் பார்க்கவும் இல்லை.

உலக நாடுகளிடையே சிதறிப்போயிருந்த யூதர்கள் ஒன்று கூடி மறுபடியுமாக பெரும் போராட்டத்திற்குப் பிறகு தங்கள் சொந்த தேசத்திற்குத் திரும்பி வந்து இஸ்ரவேல் என்ற நாட்டை ஏற்படுத்திக் கொண்டது தனிக்கதை. தங்கள் சொந்த நாட்டை சுதந்திரமாக பெற்றுக்கொண்ட யூதர்களின் அடுத்த கட்ட நடவடிக்கை தங்கள் நாட்டையும் தாங்கள் இதுவரை ஆராதித்து வந்த தங்கள் தேவாலயத்தையும் அதே இடத்தில் திரும்பவும் கட்டிவிட வேண்டும் என்பதாகத் தான் இருந்தது.

ஆனால் இடைப்பட்ட காலத்தில் தேவாலயம் இருந்த இடம் கைமாறி இன்று அதே இடம் இஸ்லாமியர்களின் வசம் இருக்கிறது. அதில் அவர்கள் ஒரு அழகிய மசூதியைக் கட்டி தொழுகை நடத்தி வருகிறார்கள்.

எனவே, உடனடியாக தங்கள் ஆலயத்தை கட்ட முடியாத யூதர்கள் அதற்கான பல்வேறு விதமான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதெல்லாம் சரிதான். அவர்கள் தேவாலயம் கட்ட முயற்சிப்பதில் நாம் பயப்படுவதற்கு என்ன இருக்கிறது?

நியாயமான கேள்விதான். இந்த தேவாலயம் எப்போது மீண்டும் கட்டப்படும் என்று வேதம் சொல்கிறது தெரியுமா? கடைசி காலத்தில்.

ஆம். எருசலேம் தேவாலயம் கட்டத் துவங்கப்பட்டாலோ, அல்லது அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலோ அது கடைசி காலத்தின் துவக்கம் என்பதை மறந்துவிடக் கூடாது.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாக நினைக்கப்படாமல் போயிருந்த தேவாலயம் இன்று இவ்வளவு தீவிரமாக கட்டப்பட ஆயத்தங்கள் செய்யப்படுவது நாம் நிற்பது கடைசி காலத்தில் என்பதை தெளிவாக எடுத்துரைக்கிறது.

வேதம் இது பற்றி சொல்வதை கவனியுங்கள்.

*ஏசாயா 2: 2*

*கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியிலே ஸ்தாபிக்கப் பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும். எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள்.*

எருசலேம் தேவாலயம் கடைசிக்கால அடையாளங்களுடன் சம்மந்தப்பட்ட ஒன்று என்பதால் நாம் இன்னும் கொஞ்சம் கூட இதைப் பற்றித் தெரிந்து கொள்வது நல்லது. இல்லையா?

யூதர்களுக்கு முதலாவது தேவாலயத்தை சாலமோன் ராஜா தான் கட்டினார். கி.மு. 1004ல் இது கட்டப்பட்டது. இதை கட்டி முடிக்க நம்முடைய இன்றைய மதிப்புப்படி எட்டு லட்சம் கோடி ரூபாய் செலவிடப்பட்டது. இந்த ஆலயத்தை கி.மு. 606ம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் 4ம் தேதியன்று பாபிலோன் தேசத்து இராஜாவான நேபுகாத்நேச்சர் எருசலேமைப் பிடிக்கும் போது அழித்துத் தரை மட்டமாக்கினார்.

அதன்பிறகு சுமார் 90 ஆண்டுகள் எருசலேமில் ஆலயம் இல்லாமலிருந்து. பிறகு கி.மு. 515ல் செருபாபேல் என்பவர் மறுபடி யுமாக எருசலேம் தேவாலயத்தைக் கட்டினார். இதை மையமாக வைத்துத் தான் கி.மு. 20ல் ஏரோது மறுபடியுமாக ஆலயத்தைப் புதுப்பித்து அலங்காரமாகக் கட்டினார். இதைக் கட்ட ஏறத்தாழ நாற்பது வருடங்கள் ஆயிற்று.

ஏரோதினால் புதுப்பித்துக் கட்டப்பட்ட இந்த ஆலயத்தில் தான் இயேசு நின்று பேசினார். காசுக்காரர்களை சவுக்கைக் கொண்டு அடித்துத் துரத்தினார். இந்த ஆலயத்தை இடிக்கச் சொல்லி பேசியதாகத் தான் அவர் மேல் தேவதூஷண வழக்கு சொல்லப்பட்டது.

இந்த தேவாலயம் ஒருகல்லின்மேல் ஒருகல் இராதபடி இடிக்கப்பட்டுபோம் என்ற தீர்க்கதரிசனத்திற்கேற்ப கி.பி. 70ல் ரோமச் சக்கரவர்த்தியான வெஸ்பேசியன் என்பவரது மகனான தீத்து என்ற ரோமத் தளபதி இதை அழித்துப் போட்டான். கி.பி. 70 ஆகஸ்ட் 4ம் தேதியன்று இடிக்கப்பட்ட இந்த தேவாலயம் 1982ம் ஆண்டு வரை - அதாவது சுமார் 1912 வருடங்கள் வரை- நினைக்கப்படாமலேயே இருந்தது.

கி.பி. 70ல் நடந்த கலவரத்தில் யூதர்கள் யாவரும் தேசத்தை விட்டுத் துரத்தப்பட்டு விட்டதால், இஸ்ரவேல் தேசத்தில் இந்த இடைப்பட்ட கால கட்டத்தில் யூதர்களுக்கு ஜெப ஆலயமோ, பலி செலுத்தத்தக்க தேவாலயமோ இல்லாமலிருந்தது.

ஆனால் 1982ம் ஆண்டுமுதல் எருசலேம் தேவாலயத்தை மீண்டுமாய் எடுத்துக் கட்டப்போவதற்கான செய்திகள் இஸ்ரவேலிலிருந்து வந்து கொண்டேயிருக்கின்றன. அதற்கேற்ற காரியங்களில் யூதர்கள் முனைப்பாக செயல்படுகிறார்கள் என்பதும் அவர்களது நடவடிக்கைகளிலிருந்து தெரியவருகிறது.

எருசலேமின் புதிய பாகத்தில் யூதர்களுக்கான ஒரு பிரம்மாண்டமான ஜெப ஆலயம் கட்டப்பட்டு 1982ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 4ம் தேதியன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆகஸ்ட் 4ம் தேதியை ஏன் தேர்ந்தெடுத்தார்கள் தெரியுமா? அதே ஆகஸ்ட் நாலாம் தேதி தான் எருசலேம் தேவாலயம் ரோமர்களால் இடிக்கப்பட்டது.

இந்த தேவாலயத்தை ஆட்டுக்கடாக்களின் கொம்புகளை ஊதி ஆராதனை செய்து பிரதிஷ்டை செய்தார்கள். அப்போதைய இஸ்ரேலிய பிரதமர் மெனாகிம்பிகின் (Menachem Begin) அவர்களும் அன்றைய இஸ்ரேலிய ஜனாதிபதி இட்ச்காக் (Yitzhak) அவர்களும் உட்பட சுமார் 1800 முக்கியஸ்தர்களும் லட்சக்கணக்கான மக்களும், கலந்துகொண்டார்கள். இந்த ஜெப ஆலயத்தைக் கட்டி முடிக்க ஒரு கோடியே 45 லட்சம் அமெரிக்க டாலர்கள் செலவானது.

இந்த ஜெப ஆலயத்தைக் குறித்து யூதரபி ஒருவர் குறிப்பிடுகையில், இதை நமது பிரதான தேவாலயத்திற்குப் பதிலாகக் கட்டப்பட்ட ஆலயம் என்று நம்பிவிடக் கூடாது. இது தற்காலிகமாக நாம் தேவனைக் கூடித் தொழுது கொள்வதற்காக உண்டாக்கப்பட்ட ஜெப ஆலயம் மாத்திரமே, சீக்கிரமே நாம் இழந்துபோன, விரோதிகளால் இடிக்கப்பட்ட பழைய தேவாலயத்தையும் கட்டியெழுப்ப வேண்டும். அதற்கான ஆயத்த வேலைகளில் ஈடுபட்டிருக்கும் நாம் இன்னும் முழுமூச்சாய் அதை நிறைவேற்றப் பாடுபட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்பாக யூதர்கள் மீண்டுமாக 1987ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ம் தேதியன்று பழைய இடிக்கப்பட்ட தேவாலயத்தின் எஞ்சியிருக்கும் பகுதியின் மேற்கு சுவரருகே ஒரு

பொதுப் பிரார்த்தனையை நடத்தியிருக்கிறார்கள். இந்தப் பிரார்த்தனை யூதர்களின் பாரம்பரியத்தின்படி அக்கேல் என்றழைக்கப்படுகிறது. கி.பி. 70ல் எருசலேம் தேவாலயம் இடிக்கப்பட்ட பின்பு இதுவரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இப்பண்டிகை இப்போது திடீரென்று நடத்தப்பட்டிருப்பது எருசலேம் தேவாலயம் கட்டப்படுவதற்கு யூதர்கள் எடுக்கும் முயற்சியில் முக்கியமான நடவடிக்கையாக கருதப்படுகிறது.

இஸ்ரவேலின் அப்போதைய ஜனாதிபதியான செய்ம் ஹெர்சாக் உட்பட பல பிரபலமான யூத ரபிகள் கலந்து கொள்ள இப் பிரார்த்தனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

எருசலேம் தேவாலயத்தின் எஞ்சி நிற்கிற சுவரான மேற்கு சுவரருகே பழைய எருசலேம் தேவாலயம் இருந்த இடத்தில் Dome of the Rock என்ற இஸ்லாமியர்களின் தொழுகை ஸ்தலம் அமைந்துள்ளது. எனவே எருசலேம் நகரம் யூதர்கள் வசம் இருந்த போதிலும் எருசலேம் தேவாலயம் இருந்த இடத்தில் பிரார்த்தனை செய்வதும், எருசலேம் தேவாலயத்தை இருந்த இடத்தில் கட்ட முயற்சிப்பதும் இயலாத ஒன்றாக இருந்து வருகிறது.

பழைய எருசலேம் தேவாலயம் இருந்த இடத்திற்கு Temple Mount என்று பெயர். 1967ம் ஆண்டு மூன்றாவது இஸ்ரேலிய அராபிய யுத்தம் நடைபெற்ற போது இந்தப் படையெடுப்பை நடத்தின இஸ்ரேலிய தளபதியான ஜெனரல் கர் என்பவர் அவ்விடத்தைக் கைப்பற்றிய உடனேயே இஸ்ரேலிய தேசியக் கொடியை Dome of the Rock தொழுகை ஸ்தலத்தின் மேல் பறக்கவிட வேண்டுமென்று கட்டளையிட்டார். ஆனால் அப்போதையை இஸ்ரேலின் இராணுவ அமைச்சராக இருந்த மோஸே டயான் என்பவர் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட அராபியருக்கு நல்லெண்ணம் காட்டும் முயற்சியாக இஸ்ரேலியக் கொடியைத் தொழுகை ஸ்தலத்திலிருந்து இறக்கிவிடக் கட்டளையிட்டார்.

எருசலேம் யூதர்களின் வசத்திலிருந்தாலும், கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர்களின் தொழுகை ஸ்தலங்கள் இருக்கும் இடங்களெல்லாம் அந்தந்த மதத்தினருடைய அதிகாரங்களுக்குக் கீழேயே இருப்பதால் யூதர்கள் அந்த இடங்களையெல்லாம் சொந்தம் கொண்டாட முடியவில்லை.

குறிப்பாக எருசலேம் தேவாயம் இருந்த இடம் இஸ்லாமியர் களின் அதிகாரத்தின் கீழ் இருக்கிறது. ஆகவே யூத ரபிமார்கள் அவ் விடத்திற்குள் செல்வது இயலாததாயிருக்கிறது. அதே போல Temple mount பகுதியும் புறஜாதியரின் கையிலிருப்பதால் யூத ரபிகள் தாங்கள் அவ்விடத்திற்குள் பிரவேசிக்கக் கூடாது என்று எண்ணிவருகின்றனர்.

ஆனால் இப்போது சமீப காலமாக அந்த எண்ணம் ரபிகளிடையே மாறி வருகிறது. தாங்கள் அந்த பகுதிகளுக்குள் பிரவேசிக்கலாமா என்று யோசித்து வருகிறார்கள். அப்படி தாங்கள் அந்த பகுதிகளுக்குள் நுழைந்தால் ஏற்படும் பிரச்சனை களில் தங்களுக்கு துணை நிற்குமாறு உலகமெங்குள்ள யூத அமைப்புகளுக்கு இந்த ரபிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெரும்பான்மையான யூத அமைப்புகளும் இவர்களுக்கு, “நீங்கள் தைரியமாகச் செய்யுங்கள், நாங்கள் இருக்கிறோம். எங்கள் கையில் ஏராளம் ஆயுதங்களும், ஐசுவரியமும் இருக்கிறது.” என்று பச்சைக் கொடி காட்டிவிட்டனர்.

இதை ஏற்று யூதரபிகள் மற்றவர்களுடைய பகுதிகளுக்குள் சென்று கையகப்படுத்தினால் விரைவிலேயே Dome of the Rock பகுதியையும் கைப்பற்றிவிடக்கூடும். அப்படி நடந்துவிட்டால் உடனே அவர்கள் எருசலேம் தேவாலயத்தைத் தாமதமின்றி கட்டி விடுவார்கள்.

இஸ்லாமியர்களின் தொழுகை ஸ்தலம் இருக்கும் இடத்தின் அருகே 11ம் நூற்றாண்டில் ஒரு யூத ஜெப ஆலயம் இருந்தாக சரித்திரக் குறிப்புகளில் காணப்படுகிறது. இப்போது அந்த ஆலயம் அங்கில்லை. ஆனால் பிரதான யூதரபியான மொர்தேகார்ப் எலியாக் என்பவர் இதே இடத்தில் நான்கு பெரிய தூண்களின் மேல் இந்த ஜெப ஆலயத்தை இதே மலையின் மேல் அமைப்ப தால் இஸ்லாமியர்களின் தொழுகை ஸ்தலத்தை விட உயரமான இடத்தில் தங்கள் ஆலயத்தை அமைத்து விடலாம் என்றும், அதனால் யூதர்கள் யாவரும் தடையின்றி அதே மலையின்மேல் தேவனை தொழுதுகொள்ள முடியும் என்றும் கருத்து தெரிவித் துள்ளாார். இஸ்லாமிய தொழுகை ஸ்தலத்திலிருந்து இதற்கு கடுமையான எதிர்ப்பு கிளம்பியுள்ளபோதிலும், இஸ்ரேலிய அரசாங்கமே இதற்கு சம்மதம் தெரிவியாத போதிலும் யூதர்களில்

பெரும்பான்மையானவர்கள் இதை ஆமோதித்து அதற்கான ஆலோசனையும் செய்துவருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

யூத தீவிரவாதிகளில் பல பிரிவினர் எருசலேம் தேவாலயத்தை அது இருந்த பழைய இடத்திலேயே கட்ட வேண்டுமென்றும், அதற்கு முன்பாக இஸ்லாமியர்களுடன் போராடி அந்த இடத்தைத் தங்களுக்கு கைப்பற்ற வேண்டுமென்றும் பல கோணங்களில் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இஸ்ரேலிய அரசாங்கமோ இப்படி அதிரடியாய் அந்த இடத்தைக் கைப்பற்றி அங்கே தேவாலயத்தை கட்டினால் இனக் கலவரம் தோன்றுமென்றும், உலக அரங்கில் இஸ்ரவேலின் மேல் உள்ள நல்லெண்ணம் போய்விடும் என்றும் கருதி தீவிரவாதிகளின் செயல்களுக்கு தடைவிதித்து வருகிறது.

வழக்கம் போலவே மதவாதிகளோ இந்தப் பிரச்சனையில் இன்னும் தீவிரம் காட்டி வருகிறார்கள். தீவிரவாதிகளைத் தூண்டி விடுவதிலிருந்து, அவர்களுக்கு பொருளுதவி செய்வது வரையில் மதவாதிகள் மறைமுகமாக செயல்பட்டு வருகிறார்கள்.

அமெரிக்காவிலுள்ள ஒரு குறிப்பிட்ட கிறிஸ்தவ நிறுவனம் டென்வர் நகரத்தை தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. எருசலேம் தேவாலயம் கட்டப்பட்டால் தான் மேசியாவின் வருகை சம்பவிக்கும் என்பதால் இந்த ஸ்தாபனத்தினர் எருசலேம் தேவாலயத்தை கட்ட யூதர்களுக்கு ஊக்கமும் பண உதவியும் செய்து வருவதாக இஸ்ரேலிய அரசாங்கமே குறிப்பு வெளியிட்டுள்ளது.

டென்வர் நகரத்தில் இதற்காகவே இந்தப் பிரிவினர் எருசலேம் தேவாலய ஸ்தாபனம் (Jerusalem Temple Foundation) என்ற ஒரு இயக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். ஆலயம் கட்ட விழையும் தீவிரவாதிகளின் அமைப்புகளுக்கு இங்கிருந்து தான் நிறைய பணம் அனுப்பப்படுகிறது.

எருசலேம் தேவாலயம் இருந்த இடத்திலிருக்கும் இஸ்லாமிய தொழுகை ஸ்தலங்களை பலாத்காரமாகக் கைப்பற்றி அங்கே தங்கள் ஆலயத்தைக் கட்டுவதற்காக 1968ம் ஆண்டிற்குப் பிறகு இதுவரை 9 முறைகள் யூதர்களால் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

Faithful of the Temple Mount என்ற இயக்கத்தின் தலைவரான கெர்சோம் சாலமன் என்பவர் எருசலேம் தேவாலயத்தைக் கட்டியே தீரவேண்டுமென்ற எண்ணம் எல்லா இஸ்ரவேலர்களின் இருதயத்திலும் ஆழமாய்ப் பதிந்துவிட்டது. எனவே எருசலேம் தேவாலயம் இருந்த இந்த மலை யூதருக்குச் சொந்தமாகும் வரை, அங்கே அதே தேவாலயத்தைக் கட்டும்வரை யூதர்கள் ஓயமாட்டார் கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

நடைபெற்று வரும் தீவிரமான காரியங்களைப் பார்க்கும் போது யூதர்கள் விளைவுகள் எதையும் பற்றிக் கவலைப்படாமல் தங்கள் தேவாலயத்தை மீண்டும் அதே இடத்தில் கட்ட ஆரம்பித்து விடுவார்கள் என்றுதான் தோன்றுகிறது.

விரைவிலேயே அது நடைபெற்றுவிடும் என்பதற்கான பல ஆதாரங்கள் இஸ்ரவேலிலிருந்து கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. ஆனால் இவையெல்லாம் கடைசிக் காலத்தில் தான் நடைபெறும் என்று வேதம் சொல்வதால் நிச்சயமாக நாம் நிற்பது கடைசிக் காலம் தான் என்பது தெளிவாகிறது.

அப்படியானால் இயேசுவின் ரகசிய வருகையும் சமீபம் என்பதும் தெளிவாகிறது. அப்படியானால் நாம் இன்னும் தீவிரமாக ஆயத்தப்படுவது அவசியம் என்றல்லவா ஆகிறது?

ஆனால் நாமோ கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல் டி.வி. பார்ப்பதிலும் வீணான காரியங்களிலும் கவனம் செலுத்தி ஆவியில் அனல் குறைந்து போயிருப்பது தெரியாமலேயே ஒரு குளிர்கால உறக்கத்திலிருக்கிறோம்.

சங்கங்கள் அமைப்பதிலும், சபைகளில் சண்டை போட்டுக் கொள்வதிலும் காலம் கடத்தி வருகிறோம். சோர்வாகப் பாட்டுப் பாடி, ஏனோதானோவென்று ஆராதனை செய்து, கவலையற்றி ருக்கிறோம். நம்மைச் சுற்றிலும் வருகைக்கான ஆயத்தங்கள் நடைபெறுவதை உணராமலிருக்கிறோம்.

என்ன நியாயம் இது?

தூசியை உதறிவிட்டு எழுந்திருங்கள். மேசியா வருகிறார். அவர் கால்கள் வாசலண்டையில் நிற்கிறது. இனியும் காலம் செல்லாது. கவனம்!!

6

## *எச்சரிக்கைச் செய்தி*

### எபேசியர் 4 :27

பிசாசுக்கு இடம்கொடாமலும் இருங்கள்.

### 1 பேதுரு 5: 8-9

தெளித்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். விழித்திருங்கள். ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகிறான்.

விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனை எதிர்த்து நில்லுங்கள். உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்தில் அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறதென்று அறிந் திருக்கிறீர்களே.

### 1 யோவான் 10: 10

திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயல்லாமல் வேறொன்றுக்கும் வரான்.

## வா என் இனிய எதிரியே!

நடு இரவு.

மணி 12.00 இருள். எங்கும் இருள்...

மையை கவிழ்த்துக் கொட்டியமாதிரி அப்படியொரு இருள். அந்த இருளை கிழித்துக் கொண்டு ஒரு மெல்லிய சலங்கை ஒலி.

ஜல்... ஜல்...

எங்கோ ஒரு நாய் அலறியது. திடீரென்று கேட்டும் கேட்காத மாதிரி அமானுஷ்யமாய் ஒரு சிரிப்பு.

இப்படியெல்லாம் ஆரம்பித்து கதை சொன்னால் அந்தக் காலத்தில் பிள்ளைகள் "பேய்க்கதை வேண்டாம் ப்ளீஸ்" என்று அலறுவார்கள்.

இப்போது அப்படியில்லை. நட்ட நடுராத்திரியில் கூட கையில் கோக்கை வைத்து உறிஞ்சியபடியே டி.வி.யில் பேய்ப் படம் பார்க்கிறார்கள். " மயிர்க்கூச்செரியவே மாட்டேங்குதே மம்மி. என்ன படம் எடுத்திருக்கிறான்.. டம்மி." என்று சலித்தும் கொள்கிறார்கள்.

சாப்பிட மறுக்கும் குழந்தையை "பூச்சாண்டியிடம் பிடித்துக் கொடுத்து விடுவேன்" என்று பயமுறுத்திய காலம் போய், பூச்சாண்டியை பிடித்துக் கொடுத்தால்தான் சாப்பிடுவேன் என்று குழந்தைகள் அடம்பிடிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

மொத்தத்தில் சாத்தானை நினைத்து பயந்த காலம் போய் சாத்தானை ஜனங்கள் கொஞ்சம் கொஞ்சமாக விரும்ப ஆரம்பித்து இருக்கிறார்கள்.

காரணம் என்ன தெரியுமா?

சாத்தான் தன்னை நன்மை செய்கிறவனாக காட்டிக் கொள்ள ஆரம்பித்திருக்கிறான்.

சாத்தான் என்றால் வெறும் பொல்லாதவன் என்று ஜனங்கள் நினைக்கும் எண்ணத்தை மாற்ற, தானும் ஜனங்களுக்கு நன்மை செய்பவன்தான் என்று தன்னை விளம்பரப்படுத்தி வருகிறான்.

காஸ்பர் என்கிற ஒரு ஆங்கில கார்ட்டூன் தொடர், உலகளவில் குழந்தைகளைப் பெருவாரியாக கவர்ந்த ஒன்று. இதில் ஒரு ஆவி குழந்தைகளுக்கு நன்மை செய்வதாகக் காட்டப்படுகிறது.

இதைப் பார்க்கும் குழந்தைகளின் உள்ளத்தில் பேய்கள் நன்மையும் செய்யும் என்கிற எண்ணம் விதைக்கப்படுகிறது. இது போன்ற இன்னும் நாலு தொடர்கள் வந்தால் எதிர்கால சந்ததியினர் தங்கள் தேவைகளுக்கு ஆவிகளையும் நாடலாம் என்கிற மனோபாவத்திற்கு வந்து விடுவார்கள்.

வியாதிகளை சுகமாக்கவும், பிரச்சனைகளை தீர்க்க ஆலோசனை தரவும், சுமுகமாக திருமணத்தை நடத்தி வைக்கவும் சாத்தான் உதவி செய்வதாக பத்திரிகைகளில் விளம்பரம் வருகிறது.

கொஞ்சகாலம் முன்பு ஒரு தனியார் தொலைக்காட்சியின் தமிழ் அலைவரிசையில் ஆவிகளுடன் பேசும் மீடியம்கள் மற்றவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு ஆவிகளுடன் பேசி அங்கேயே சுடச்சுட பதில் வாங்கித் தந்து ஆவியுலக நம்பிக்கையை வளரச் செய்தார்கள்.

ஏவல், பில்லி சூனியம் இவற்றிலிருந்து விடுதலை பெறவும், அற்புத சுகம் பெறவும் குட்டிச்சாத்தானின் கோயிலுக்கு வாருங்கள்

என்கிறது ஒரு தமிழ் பத்திரிகை விளம்பரம்.

விஞ்ஞானம் வளர்ந்தால் மூடநம்பிக்கை ஒழிந்து போய்விடும் என்று ஒரு காலத்தில் சொன்னார்கள்.

ஆனால் இன்று நிலை என்ன?

பாவம். கம்ப்யூட்டரே ஜாதகம் கணிக்கிறது.

ஆவிகளுடன் தொடர்பு கொண்டு பேச பயிற்சியளிப்பதாக இண்டர்நெட்டில் தோராயமாக நூற்றிப் பதினேழு சொச்சம் வெப் சைட்டுகள் உள்ளன.

பேய்களுடன் பேச, மற்றும் தொடர்பு கொள்ளத் தேவையான ஒய்ஜா போர்டு முதலான உபகரணங்கள் அடங்கிய சாப்ட்வேர்கள் கடைகளில் கிடைக்கின்றன.

விஞ்ஞானம் வளர வளர அரூபமான காரியங்களில் மனிதனின் தாகமும் கூடிக் கொண்டேதான் போகிறது. விஞ்ஞான உபகரணங்களும் அதற்கு துணை போவதுதான் பரிதாபம்.

இதெல்லாம் விடுங்கள்.

குறிசொல்லுதலும், ஜாதகங்கள் கணிப்பதும், ஏவல் எடுப்பதும் கூட விஞ்ஞானம்தான் என்று சொல்லி பல்கலைக் கழகங்களில் பாடத்திட்டங்கள் கூட கொண்டு வந்திருக்கிறார்கள்.

இன்னும் கொஞ்ச நாட்களில் B.A., பில்லி சூனியம், M.A., மந்திர வாதம் என்றெல்லாம் பட்டங்கள் வந்துவிடும். மரத்தடி ஜோசியர்கள் பட்டமிருந்தால்தான் ஜாதகம் கணிக்க முடியும் என்று சட்டம் போட்டு விடுவார்கள். பட்டமில்லாத ஆட்களை போலி என்று முத்திரை குத்தி மாமுல் வாங்க பயன்படுத்திக் கொள்வார்கள்.

மொத்தத்தில் மனிதர்களின் மனதிலும் வாழ்விலும் சமீப கால மாக சாத்தான் கொஞ்சம் கொஞ்சமாக இடம்பிடிக்க ஆரம்பித்து விட்டான்.

சாத்தானின் வேதங்களான தீய நம்பிக்கைகளும் மனிதர்களை கவரத் தொடங்கிவிட்டன.

உண்மையில் என்னதான் நடக்கிறது?

சாத்தான் ஒருவேளை மனம் திரும்பிவிட்டானா?

அவன் ஜனங்களுக்கு நன்மை செய்ய முடியுமா? அப்படியே அவன் நன்மை செய்தாலும் நாம் அதை பெற்றுக் கொள்ளலாமா?

ஒரே மூச்சில் இத்தனை கேள்விகள் வேண்டாம். கொஞ்சம் கொஞ்சமாய் இதைப் பற்றி பார்ப்போம். கவனமாகக் கேளுங்கள்.

நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலாக கேழ்வரகிலிருந்து நெய் எடுக்கிறார்களா, கிலோ என்ன விலை என்றோ.....,

அல்லது, மணலிலிருந்து கயிறு திரிக்கிறார்களா, மீட்டர் என்ன விலை என்றோ கேட்டுவிடலாம்.

கேழ்வரகிலிருந்து நெய்யும், மணலிலிருந்து கயிறும் சாத்திய மானால்கூட சாத்தானிடமிருந்து நன்மை என்கிறது கொஞ்சமும் சாத்தியமில்லாத விஷயம்.

*யாக் 1 : 7*

*நன்மையான எந்த ஈவும்... ஜோதிகளின் பிதாவிடத்தி லிருந்தே வருகின்றன.*

நன்மை செய்வதோ, நன்மையை தருவதோ சாத்தானுக்கு சம்மந்தமில்லாத விஷயங்கள்.

இப்போது மாத்திரமல்ல, எப்போதும் மனிதர்களிடம் சாத்தான் வரும் போது தன்னை அவர்கள்மேல் அக்கறையுள்ள வனாகவும், அவர்களுக்கு நன்மை செய்ய விரும்புகிறவனாகவுமே தான் காட்டிக் கொள்கிறான்.

இது அவனது பழைய உத்தி, ஆதாம் காலத்து பழசு.

ஏவாளிடம் சாத்தான் வரும்போது அவர்களை தேவர்களைப் போல மாற்ற விரும்புகிறவனாகவே தான் தன்னை காட்டிக் கொண்டான்.

நாற்பது நாள் உபவாசத்திற்கு பிறகு மிகுந்த பசியடைந்த இயேசுவிடம் அவர் பசிக்கு கற்களை அப்பங்களாக மாற்றலாமே என்ற யோசனை சொல்கிறவனாகத்தான் சாத்தான் தன்னை காட்டிக் கொண்டான்.

நாமாயிருந்தால் சாத்தானுக்குத்தான் நம்மேல் எவ்வளவு பரிவு

என்று புளகாங்கிதமடைந்திருப்போம்.

ஜோதிகளின் பிதாவிடத்திலிருந்து வராமல் வேறு எந்த வழியாகவும் வரும் நன்மைகள் எல்லாம் நன்மை என்ற முலாம் பூசின தீமைகளேயல்லாமல் உண்மையான நன்மைகளல்ல.

என்றால் சாத்தான் செய்வது என்ன ரகம்?

தந்திரம். கடைந்தெடுத்த தந்திரம்.

மீனுக்கு தூண்டிலில் புழுவை மாட்டி உணவிடும் தந்திரம்.

ஏன் நீங்களும் நானும் மனம் திரும்பியிருக்கும்போது சாத்தான் மனம் திரும்பியிருக்கக் கூடாதா?

நல்ல கேள்வி. சாத்தான் ஒரு நியாயம் தீர்க்கப்பட்ட தூதன். இனி மனம் திரும்பவே வழியில்லாதவன். தவிரவும், சாத்தான் மனம் திரும்பியிருந்தால் உலகில் எங்குமே தீமைகள் நடக்கக் கூடாதே.

ஆனால் இன்றைய நிலை என்ன? எங்கு பார்த்தாலும் கலகங்கள், குழப்பங்கள். தீவிரவாதப் பெருக்கம், ஜாதி மற்றும் மதச் சண்டைகள்.

நாள்தோறும் விபத்துக்கள், லஞ்சம், கொலைகள் என்று பட்டியலிட்டால் இன்றைய சாத்தானின் செயல்கள் முன் எப்போதையும்விட இப்போதுதான் அதிகம்.

இவைகள் எல்லாம் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க சாத்தான் நன்மை செய்கிறதாக தன்னை காட்டிக்கொள்வதை வேஷம் என்று சொல்லாமல் மனம் திரும்பிவிட்டதாக கொள்ள முடியுமா என்ன?

வேஷதாரியான சாத்தானுக்கு பல்வேறு முகங்கள் உண்டு. அதில் ஒன்று தான் நல்லவன் கெட்டப்.

இன்று இந்தியாவில் மட்டுமல்ல, உலக நாடுகள் பலவற்றிலும் கூட சாத்தான் தரும் நன்மைகளுக்காக ஜனங்கள் வரிந்து கட்டிக் கொண்டு ஓடுவதுதான் வேதனை.

இதில் கிறிஸ்தவர்களும் அடக்கம் என்பது இன்னும் கொஞ்சம் கூடுதல் வேதனை.

சாத்தான் ஜனங்களுக்கு ஒன்றும் இலவசமாக உதவி செய்துவிடவில்லை. அவன் செய்யும் ஒவ்வொரு உதவிக்கும் விலையுண்டு.

விலை என்ன தெரியுமா?

உயிர்!

விலையேறப் பெற்ற உங்கள் உயிர்!

இன்று இந்த விலையைப் பற்றி ஜனங்களில் யாரும் யோசிப்ப தில்லை. காரணம், உங்கள் ஜீவனுடைய மதிப்பு இன்றைக்கு உங்க ளுக்குத் தெரியாது. மார்க்கெட்டில் இன்னும் இதற்கு விலை நிர்ண யம் செய்யவில்லை.

தவிரவும், ஜீவன் நம் வெளிக் கண்களுக்குத் தெரிவதில்லை. ஆகவே தான் கண்ணுக்குத் தெரியும் எந்தவொரு வெளியான இன்பத்திற்காகவும் நாம் நம் ஜீவனை அடகு வைக்க தயங்குவதே இல்லை.

ஆனால் உண்மையில் நம் ஜீவனின் மதிப்பு மிக மிக அதிகம்.

வேதம் உங்கள் ஜீவனின் மதிப்பைப் பற்றி சொல்வதைக் கவனியுங்கள்.

நாம் உண்ணும் உணவைவிட நம் ஜீவனே விசேஷமானது (மத் 6: 25, லூக் 12: 23)

உண்மைதான், ஒரு கையையோ, காலையோ இழந்தால் நல்ல-தாய் பிளாஸ்டிக்கில் ஒன்றை வாங்கிப் பொருத்திக் கொள்ளலாம்.

ஜீவனை இழந்தால் பிளாஸ்டிக்கில் ஏதாவது ஜீவன் கிடைக்கிறதா என்ன?

இருதயம் பழுதானால், சிறுநீரகம் பாதிக்கப்பட்டால் மாற்று ஆபரேஷன் செய்து பிழைத்துக் கொள்ளலாம்.

ஜீவன் போனால் மாற்று ஜீவன் பொருத்தும் ஆபரேஷன் எந்த ஆஸ்பத்திரியிலாவது நடக்கிறதா என்ன?

கையில்லாமல் காலில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறவர் களைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் உயிரில்லாமல் வாழும் யாரை யாவது பார்த்திருக்கிறீர்களா?

எனவேதான். உலகம் முழுவதையும் கொடுத்தாலும் அது ஒருவனுடைய ஜீவனுக்கு இணையாகாது என்று வேதம் சொல்கிறது.

இவ்வளவு விலையேறப் பெற்ற ஜீவனின் மதிப்பு நமக்கு தெரியவில்லை.

எனவேதான், ஒரு சாதாரண உலக நன்மையை பெறவும், ஒன்றுக்கும் உதவாத தீய இன்பங்களைப் பெறுவதிலும் ஜீவனை விலையாகக் கொடுக்க நாம் தயங்குவதில்லை.

ஆனால் துரதிருஷ்டம்.

சாத்தானுக்கு உங்கள் ஜீவனின் மதிப்பு தெரியும்.

எனவேதான் தன் சத்துருவான உங்களிடமிருந்து அதை பறித்து விட இரவு பகலாக வேலை செய்கிறான். பல்வேறு வேஷங்களை வைத்துக் கொண்டு எத்தனை வழியுண்டோ அத்தனையிலும் உங்கள் ஜீவனை அபகரிக்க முயற்சி செய்கிறான்.

ஒருபுறம் சாராயம் காய்ச்சி, போதைப் பொருட்களை ஊட்டிவிட்டு, சண்டையை மூட்டிவிட்டு, விபச்சாரத்தை வளர்த்துவிட்டு, அசுத்தமான திரைப்படங்களைத் தயாரித்து, கொலை ஆயுதங்களைத் தயாரித்து, ஜாதி துவேஷத்தைப் பரப்பிவிட்டு என பயங்கரமான காரியங்கள் மூலம் மனிதர்களைக் கொள்ளையடிக்கிறான்.

இன்னொருபுறம், தன்னை நன்மை செய்கிறவனாக, ஜனங்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு சொல்கிறவனாக காட்டிக் கொண்டு அவர்களைக் கவர்கிறான்.

ஆனால் எது எப்படியோ சாத்தான் ஒரு மனிதனிடம் வருகிறான் என்றால் அதற்கு ஒரே ஒரு நோக்கம் தான் உண்டு. வேதம் அதைப் பற்றி இப்படிச் சொல்கிறது.

திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயல்லாமல் வேறொன்றுக்கும் வரான்.

அவன் எந்த ரூபத்தில் எந்த வேஷத்தில் நம்மிடம் வந்தாலும் நோக்கம் மட்டும் ஒன்றுதான். அது திருடுவது, கொல்வது, அழிப்பது.

அப்பப்பா.... எவ்வளவு கொடிய நோக்கம் பாருங்கள்.

கிறிஸ்தவர்களுக்கு மாத்திரம் தான் சாத்தான் விரோதி என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சாத்தான் ஒரு

மனிதகுல விரோதி. ஜாதிமத பேதமின்றி யாவரையும் விரோதிப்பவன்.

அவனுடைய மனதில் மனிதர்களைப் பற்றிய வெறுப்புணர்ச்சி எப்போதும் அணையாத தீ மாதிரி எரிந்து கொண்டேயிருக்கிறது.

ஆனால் அதை மறைத்துக் கொண்டு உங்கள் மேல் அக்கறை உள்ளவன் போல் வந்து உங்களிடம் இனிய மொழிபேசி உங்கள் இதயத்தில் இடம் பெற்றுவிட முயல்கிறான். இதயத்தில் இடம் தந்து விட்டாலோ உங்கள் ஜீவனை திருடுவதும், கொல்வதும், அழிப்பதும் அவனுக்கு சுலபம்.

வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

இதை இயேசு சொன்னால் நியாயம் இருக்கிறது. இதையே சாத்தான் சொன்னால் அதில் கபடமில்லாமல் வேறென்ன இருக்க முடியும்?

கவர்ச்சியான அழைப்புகளைத் தந்து ஜனங்களை தன் பக்கத்தில் இழுக்க சாத்தான் தற்சமயம் தீவிரம் கொண்டிருக்கிறான்.

ஜனங்களின் வாழ்வில் தன்னை ஒரு இன்றியமையாத அங்கமாக இணைத்துக் கொள்ள முயன்று வருகிறான்.

இன்று தமிழ்நாட்டில் வியாதிகளை குணமாக்க மருத்துவ மனைகள் போன்று Holistic Healing Centre என்ற பெயர்களில் ஆவிகளைக் கொண்டு குணமாக்கும் மையங்கள் தோன்றியுள்ளன. சென்னை, மதுரை, கோவை உள்ளிட்ட பல பெரிய நகரங்களையும் சேர்த்து சுமார் 140 இடங்களில் இவ்விதமான மையங்கள் இயங்கு வதாக தெரிவிக்கிறார்கள். சில அமைப்புகளிலிருந்து பத்திரிகையும் வெளியிடுகிறார்கள்.

இதுபோன்ற மையங்கள் வெளி தேசங்களில் பலகாலம் முன்பு இருந்தே ஏராளமாக பெருகியுள்ளன.

இங்கு என்னதான் செய்கிறார்கள்?

மீடியங்கள் தாங்கள் கொண்டிருக்கும் ஆவிகளின் வல்லமையை நோயாளியின் உடலுக்குள் செலுத்துவதன் மூலம்

வியாதிகளை குணமாக்குகிறார்கள். சிலர் இறந்துபோன ஆவிகள் என்ற பெயரில் ஆவிகளை அழைத்து நோயாளியின் வியாதிக்கான காரணங்களை கேட்டறிந்து, குணமாக்கும் முறையையும் கேட்டறிந்து குணமாக்குகிறோம் என்கிறார்கள்.

மணிலாவில் இன்னும் ஒருபடி மேலே போய் இந்த மீடியங்கள் ஆயுதம் ஏதுமின்றி வெறும் கையாலேயே ஆபரேஷன் செய்கிறார்கள்.

வயிற்றில் கட்டி என்று போகும் ஒருவரை பெரியசைஸ் மேஜையில் படுக்கவைத்து, நோயாளியுடன் சகஜமாக பேசிக் கொண்டேதன் விரல்களை சர்வசாதாரணமாக வயிற்றிற்குள் நுழைக்கிறார் ஆவி டாக்டர் (?) நோயாளி தன் வயிற்றிற்குள் கை நுழைகிறதே என்ற பிரக்ஞை கொஞ்சம்கூட இல்லாமல் அரசின் அதிரடி விலையேற்றம் பற்றி டாக்டருடன் விவாதித்துக் கொண்டிருக்கிறார்.

அதே நேரம் ஆவி டாக்டர் தன்கை முழுவதுமாக போகிற அளவிற்கு வெறும் கையாலேயே நோயாளியின் வயிற்றை ஜிப்பை திறப்பது மாதிரி வைத்துக் கொண்டு கட்டியை தேடுகிறார்.

"என்ன இருந்தாலும் சட்டசபையை கூட்டாமல் பட்ஜெட் போட்டது ஜனநாயக விரோதம் தான்" என்று நோயாளி பேசிக் கொண்டேயிருக்கிறார். குடல்களின் கொசகொசப்பிற்கிடையில் டாக்டரின் கை துழாவிக் கொண்டிருக்கிறது... "கட்டி எங்கே?"

"ஒரு ஜோக் தெரியுமா டாக்டர்? ஒரு பிரிட்டிஷ் ஆள் அமெரிக்கா போயிருந்தானாம். தான் தங்கியிருந்த ஹோட்டலில் வெளியே போய் விட்டு வந்த ஆள் லிப்டிற்காக காத்திருந்தானாம். நேரம் ஆகவே.. லிப்ட் எப்போது வரும் என்றானாம். அதற்கு அங்கிருந்த அமெரிக்கா ரிசப்ஷனிஸ்ட், லிப்ட்? என்று கேட்டுவிட்டு ஓ... எலிவேட்டரைக் கேட்கிறீர்களா என்றாளாம்."

இதோ கட்டி அகப்பட்டு விட்டது. டாக்டர் அதை தடவிப் பார்க்கிறார்.

"இல்லையில்லை லிப்டைத்தான் கேட்கிறேன் என்றானாம் பிரிட்டிஷ் ஆள் பிடிவாதமாக. அந்தப் பெண் மறுபடியும் மறுத்து இல்லையில்லை.. அதன் பெயர் எலிவேட்டர்தான்.. லிப்ட் இல்லை.

எங்கள் தேசத்தில் தானே அதைக் கண்டுபிடித்தோம் எங்களுக்குத் தெரியாதா என்றாளாம்"

டாக்டர் கையில் சிக்கிய கட்டியை மாங்காயை பறிப்பது மாதிரி பறித்து எடுக்கிறார்.

"அதற்கு அந்த பிரிட்டிஷ் ஆள் என்ன சொன்னான் தெரியுமா? இருக்கலாம் நீங்கள் லிப்டைக் கண்டுபிடித்திருக்கலாம். ஆனால் ஆங்கிலத்தை கண்டுபிடித்தது நாங்கள்தானே.. என்றானாம்... எப்படி டாக்டர்.. ஜோக்..?" ஆள் கொஞ்சம் கூட அலட்டிக் கொண்டதாகவே தெரியவில்லை. அசராமல் மீதம் ஜோக்கையும் சொல்லி முடிக்கிறான். இவனுக்கு வலிக்கவே இல்லையா?

"இதை பார்த்தீர்களா? இதுதான் உங்களை இதுவரை கலங்கப் பண்ணிய கட்டி.." டாக்டர் தன் உள்ளங்கையில் அந்தக் கட்டியை ஏந்தியபடி நோயாளியின் முகத்தருகே நீட்டுகிறார்.

"ஓ. இதுதானா அது.. நாட்டி என்ன பாடுபடுத்திவிட்டது எறிஞ்சிடுங்க டாக்டர்". நோயாளி அலட்டிக் கொள்ளவே இல்லை.

ஆபரேஷனை முடித்துவிட்ட டாக்டர் மறுபடியும் வயிற்றை விட்டு வெளிநடப்பு செய்திருந்த குடல்களையெல்லாம் உள்ளே தள்ளிவிட்டு வயிற்றை மூடி வெறும் கையாலேயே துடைக்கிறார். வயிறு தையலில்லாமல் உடனே தானாய் ஒட்டிக் கொள்கிறது. கிழிக்கப்பட்ட சுவடே தெரியவில்லை.

"முடிந்தது போகலாம்" என்கிறார் டாக்டர். நோயாளியும் சடா ரென்று எழுந்து உடனடி நிவாரணம் பெற்ற டி.வி. விளம்பர ஆசாமி கள் மாதிரி ஏறத்தாழ இருபது பற்கள் தெரிய சிரித்து, வயிற்றைத் தடவிப்பார்க்கிறார்.

அட, வலி இல்லை. போயே போயிந்தி. இட்ஸ் கான்.

வெளியே டாக்டரின் உதவியாளிடம் காசை எண்ணிக் கொடுத்து விட்டு, சலூனில் முடிவெட்டிக் கொண்டு திரும்புகிறவர் மாதிரி கவலையேயில்லாமல் போய் விடுகிறார்.

இப்படிப்பட்ட ஆவி மருத்துவமனைகளில் எடுக்கப்பட்ட ஒரு டாக்குமெண்ட்ரி வீடியோவில் இந்நிகழ்ச்சியை பார்த்தேன்.

இப்போது சொல்லுங்கள் ஜனங்கள் எதை தேர்ந்தெடுப் பார்கள்?

சாதாரண ஆஸ்பத்திரிகளில் ஈ.ஸி.ஜி. எடுத்து பிளட் டெஸ்ட் எடுத்து, ஆஸ்பத்திரியின் சிப்பந்திகள் முதல் டாக்டர் வரை ஒவ்வொருவராக நம் கண்ணை இழுத்துப் பார்த்து, கையிலே, மூக்கிலே குழாய்களை சொருகி வாந்தி பண்ணவைத்து.. நாள் குறித்து ஒரு சுபயோக சுபதினத்தில் ஆபரேஷனைப் பண்ணி...

"நாலு மணி நேரம் போனால்தான் எதையும் தெளிவாக சொல்ல முடியும்" என்று வாட்சைப் பார்த்தபடியே டாக்டர்கள் சொல்லிவிட... ஆஸ்பத்திரியின் மரத்தடியிலேயே நாலு மணிநேரம் காத்திருந்து.....

செத்தாலும் பிழைத்தாலும் சிப்பந்திகளுக்கு பணம் கொடுத்து, உடலை அல்லது மனிதனை தள்ளுவண்டியில் வெளியே கொண்டு வருவதற்குள்....

அப்பப்பா... எவ்வளவு அவஸ்தைகள்.

ஆவி ஆஸ்பத்திரியில் இவ்வளவெல்லாம் தொல்லை இல்லை. துணைக்குக் கூட யாரும் வரவேண்டாம். எல்லாம் சுமார் அரை மணியில் முடிந்து விடுகிறது. சுலபமான முறை. உத்திரவாதமான நிவாரணம். ஆனால் கொஞ்சம் காஸ்ட்லி.

முறை சுலபமானதானாலும் விலை அதிகம்.

நான் ஆவி டாக்டர் வாங்கும் பீஸை மாத்திரம் சொல்ல வில்லை. ஆவிகள் பெறும் கட்டணத்தை சொல்கிறேன்.

டாக்டர்களுக்கு அள்ளிக் கொடுத்தது போக ஆவிகளுக்கு உங்கள் ஜீவனையும் தாரை வார்க்க வேண்டும்.

சாத்தானிடமிருந்து ஒரு உதவியை பெற்றுவிட்டோ மென்றால், சாத்தான் நம் மேல் சகல உரிமையும் கொண்டாடத் துவங்கிவிடுகிறான். சாத்தானின் முத்திரையும் நம் ஆவியில் பதிக்கப்பட்டுவிடும்.

சாதாரணமாக ஆஸ்பத்திரிகளில் மருத்துவம் முடிந்த பின்பு மருத்துவர்கள் உங்கள் வாழ்க்கையுடன் சம்மந்தப்படுவதில்லை.

ஆனால், சாத்தான் அப்படியல்ல, உங்கள் ஒவ்வொரு அசை

விலும் தன் மூக்கை நுழைப்பான் உங்கள் மேல் ரொம்பவும் உரிமை எடுத்துக் கொள்வான்.

நீங்கள் தன்னுடையவர்கள் என்று சொந்தம் கொண்டாடு வான்.

ஒரு மனிதன் சாத்தானின் உடைமையாக இருந்தால் அதன் பாதிப்பு ஒரு வேளை இவ்வுலக வாழ்வில் தெரியாமல் போனால் கூட, மறுமையில் விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும்.

எனவே கவனம்.

பரவிவரும் சாத்தான் அலையில் எந்தவொரு சிறு காரியத்திலும் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளாதீர்கள்.

நாள் பார்த்து திருமணம் செய்தால் தான் பிள்ளைகளுக்கு நல்லது என்று மெதுவாக உங்கள் காதில் ஓதினாலும்,

வாஸ்து பார்க்காமல் வீட்டை கட்டினால் செல்வம் சேராது என்று உங்களிடம் சொல்லப்பட்டாலும்,

நோய்க்கும் பாரு, பேய்க்கும் பாரு என்று பழமொழி சொல்லி யாராவது உங்களை கரைக்க முயன்றாலும்,

எதிரிகளை ஒழிக்க சுலபவழி சூனியம் வைப்பது தான். நீ ஒன்றும் செய்ய வேண்டாம். பணம் மாத்திரம் கொடு, பெயரையும், நட்சத்திரத்தையும், எதிரியின் விலாசத்தையும் மட்டும் கொடு மீதியை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று உங்கள் அவசரத்தை பயன்படுத்தி யாராவது உங்களுக்கு தூண்டில் போட்டாலும்,

தகடு கட்டினால் வியாபாரம் பிச்சிகிட்டு போகும் என்றோ, தாயத்துக்களை பயன்படுத்துவது தான் உங்கள் தொழில் அபிவிருத் திக்கு வழி என்று சொல்லப்பட்டாலும்,

அவற்றை அப்பட்டமாக மறுத்துவிடுங்கள்.

இன்று தமிழ்நாட்டில் இளைஞர்களை வெகுவாக கவர்ந்து வரும் விஷயம் ஆவிகளுடன் பேசுவது, தமிழ்நாட்டில் இதற்கென்று சங்கங்கள் வைத்திருக்கிறார்கள்.

கல்லூரி ஹாஸ்டல்களில் மாணவர்களின் இதயம் கவர்ந்து

இத்துறையில் ஈடுபட வைக்கிறார்கள்.

வெளியே இவை அவ்வளவாக தெரியவில்லையென்றாலும் நிறைய இன்று நடந்து கொண்டுதானிருக்கின்றன.

பெண்கள் விடுதியொன்றில் இப்படி ஆவிகளுடன் பேசத் துவங்கி ஆபத்தில் சிக்கி, நல்ல தருணத்தில் தேவ ஊழியர்களால் காப்பாற்றப்பட்ட ஒரு வாலிப பெண்ணின் கடிதத்தை சில காலம் முன்பு நான் பெற்றபோது தான், இளைஞர்களை இத்துறையில் ஈடுபடுத்த ஒரு பெரிய இயக்கமே செயல்படுவது தெரிந்தது.

ஒரு தமிழ்நாட்டை சேர்ந்த மீடியம், ஆவிகள் பற்றி சொல்லும் போது, "மனிதர்களில் நல்லவர்கள், கெட்டவர்கள் என்று எப்படி உண்டோ அதே போலத்தான் ஆவிகளிலும் உண்டு. மரண மடைந்த மனிதர்களின் ஆவிகளில் நல்ல சுபாவமுள்ள ஆவிகள் இன்றும் மனிதர்களுக்கு நன்மை செய்ய விரும்புகின்றன. எனவே, அவற்றை அழைத்து ஆலோசனைகள் கேட்பதன் மூலம் நல்ல வழிகாட்டுதலையும், நன்மைகளையும் பெறலாம்!" என்கிறார்.

இறந்து போன மனிதர்களின் ஆவி இப்படி நன்மை செய்ய முடியுமா என்ன? வேதம் இது பற்றி என்ன சொல்கிறது?

ஒருமுறை மரணமடைந்துவிட்டால் ஒரு சாதாரண மனிதனின் ஆவி மீண்டும் உலகத்திற்குள் வந்து போக இயலாது. அது நல்லவர் களாயிருந்தாலும் சரி, தீயவர்களாயிருந்தாலும் சரி.

லூக்கா 16:19லிருந்து 31 வரைக்கும் வாசித்துப் பாருங்கள். அதில் ஐசுவரியவானாக வாழ்ந்து வந்த ஒரு மனிதன் பற்றியும், தரித்திரனாக வாழ்ந்த ஒரு மனிதன் பற்றியும் அவர்கள் மரணத் திற்குப் பிறகு நடந்த சம்பவங்கள் பற்றியும் இயேசு விளக்கமாக பேசியிருக்கிறது காட்டப் பட்டுள்ளது. குறிப்பாக அதில் 26லிருந்து சில வசனங்களை படித்துப் பாருங்கள் மறுமையின் சட்டங்கள் சிலது புரியும்.

*லூக்கா 16:24*

*அப்பொழுது அவன் (ஐசுவரியவான்): தகப்பனாகிய ஆபிரகாமே நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவை குளிரப் பண்ணும்படி அவனை அனுப்ப வேண்டும். இந்த*

*அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான்.*

*26. அதுவுமில்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்கு கடந்து போகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்கு கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும், உங்களுக்கும் நடுவே பெரும் பிளவு உண்டாக்கப்பட்டிருக்கிறது. என்றான்.*

*27. அப்பொழுது அவன்: அப்படியானால் தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரர் உண்டு. அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்திற்கு வராதபடிக்கு அவன் போய் அவர்களுக்கு சாட்சியாக அறிவிக்கும்படிக்கு*

*28. நீர் அவனை என் தகப்பன் வீட்டிற்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன். என்றான்.*

*29. ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும், தீர்க்கதரிசிகளும் உண்டு. அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான்.*

நல்லவனாகிய லாசருவும் பூமிக்கு வந்து செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. பொல்லாதவானாகிய ஐசுவரியவானும் அனுமதிக்கப்படவில்லை. மரணம் ஒன்வே டிராபிக் மாதிரி. அல்லது பைனான்ஸ் கம்பெனியில் காசு போடுவது மாதிரி. போனால் வராது.

தவிரவும் மரணத்திற்குப் பிறகு ஒருவனும் மீண்டும் கிரியை செய்யவோ நன்மை செய்யவோ இயலாது.

ஒருதரம் பிறப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும் எல்லாருக்கும் நியமிக்கப்பட்டிருக்கிறது என்று தான் வேதம் கூறுகிறது.

அப்படியானால், இந்த மீடியங்கள் அழைக்கும்போது வருவதும், ஆலோசனை தருவதும் யார்?

இவை யாவும் வஞ்சிக்கும் ஆவிகள், சாத்தானின் தூதர்கள்.

இவைகள்தான் மீடியங்களை பயன்படுத்தி ஜனங்களுடன்

பேசவும், அவர்களுக்கு ஆலோசனை தரவும் செய்து அவர்கள் தேவனை விசுவாசிக்க விடாமல் செய்து அவர்களது நம்பிக்கையை தங்கள் பக்கம் திருப்பிக் கொள்கின்றன.

மரித்துப்போன தாயாரைப் போலவும், தந்தையாரைப் போலவும் பேசுவதால் சுலபமாக ஜனங்களின் அபிமானத்தையும் அன்பையும் சம்பாதித்துக் கொள்கின்றன. சென்டிமெண்ட் டச்.

சமீப காலமாகப் பெருகிவரும் இந்த சாத்தானின் அலைக்குக் காரணம் என்ன?

இன்னும் கொஞ்சக் காலம் மாத்திரமே தனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கண்டு சாத்தான் தீவிரமாக வேலை செய்கிறான்.

சாத்தானே இன்னும் கொஞ்சக் காலம் மாத்திரமே உண்டு என்பதை விசுவாசித்து படு தீவிரமாக வேலை செய்கையிலே நாம் மாத்திரம் கவனமில்லாமல் நடந்து கொள்ளலாமா?

சாத்தான் விரித்துள்ள இந்த மாயவலைக்கு கவனமாக இருங்கள். சாத்தான் எவ்வளவு தான் இனிமையாக உங்களை அழைத்தாலும் அவன் உங்கள் விரோதி என்பதை மறந்து விடாதீர்கள்.

எவ்வளவு நயங்காட்டினாலும் அவன் உங்களை அழிக்கத்தான் அழைக்கிறான் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

சாத்தான் நன்மையைத் தருவதுபோல தோன்றினாலும், அதில் மறைந்துள்ள தூண்டில் முள்ளை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

நன்மையால் நம்மை இம்மையிலும், மறுமையிலும் திருப்தியாக்கும் தேவன் பேரில் பற்றுதலாயிருங்கள். வைராக்கிய வாஞ்சையாக இருங்கள்.

இழிவான உலக ஆதாயத்திற்காக உங்கள் ஜீவனை இழக்க சம்மதியாதீர்கள். ஏனெனில் -

-- உங்கள் ஜீவன் விலையேறப் பெற்றது உலகத்தையும் மற்ற யாவற்றையையும் விட.

7

காற்றினிலே வரும் மரணம்!

## *எச்சரிக்கைச் செய்தி*

**மத்தேயு 24: 7-8**

ஜனத்துக்கு விரோதமாக ஜனமும், ராஜ்ஜியத்திற்கு விரோதமாக ராஜ்ஜியமும் எழும்பும். பஞ்சங்களும் கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்.

இவையெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்.

**வெளிப்படுத்துதல் 16 : 2**

முதலாம் தூதன் போய், தன் கலசத்திலுள்ளதை பூமியின் மேல் ஊற்றினான். உடனே, மிருகத்தின் முத்திரையைத் தரித்தவர்களும், அதின் சொருபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்கு பொல்லாத கொடிய புண் உண்டாயிற்று.

# காற்றினிலே வரும் மரணம்

காற்றினிலே கீதம் வருவதாக கொஞ்சக் காலம் முன்பு பாடி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இப்போது காற்றில் மரணம் வருவதாக சொல்லி பயந்து கொண்டிருக்கிறார்கள்.

காற்று மனிதனுக்கு அவசியமானது சுவாசிக்கவும், வியர்க்காமலிருக்கவும், இசையையும், பேச்சையும் கேட்கவும் காற்று அவசியம் ஆனால்....

அப்படிப்பட்ட காற்றிலியேயே மரணம் வரும் என்றால்...?

வேண்டாம் என்று தள்ளவும் முடியாது. வாவென்று வரவேற்கவும் முடியாது.

தென்றலையும், வாடையையும் வாவென்று பாடிய தமிழ் கதாநாயகர்களும், கவிஞர்களும் கூட பயந்துகொண்டு இப்போதெல்லாம் வாயையே திறப்பதில்லை.

என்ன நடந்தது?

நாடுகள் ஒன்றுடன் ஒன்று சண்டையிடுவதானால் அக்காலத்தில் எல்லாம் கத்திகளைக் கொண்டு வெட்டுவார்கள். துப்பாக்கிகளை வைத்து சுட்டுக் கொள்வார்கள். அட மிஞ்சிப் போனால் குண்டுகளை வீசிக்கொள்வார்கள்.

ஆனால் இப்போது நிலைமையே வேறு, நாடுகளுக்கு விரோதமாக விஷக்கிருமிகளை காற்றில் ஏவிவிடுகிறார்கள்.

இந்த போர்முறை மூச்சுவிடும் யாவரையும் பாதிக்கிறது.

யுத்தங்களுக்கு சம்மந்தமே இல்லாத கால்நடைகளையும் பழி வாங்குகிறது.

சில காலம் முன்பு, 1990 என்று நினைக்கிறேன். நாம் வெளியிட்ட பத்திரிகையில் கண்ணுக்கு தெரியாத எதிரிகள் என்ற தலைப்பில், கிருமிகளைக் கொண்டு நடைபெறப்போகும் போர்களைப் பற்றி எழுதியிருந்தேன்.

அந்தக் கட்டுரை, இனி எதிர்காலத்தில் யுத்தம் என்று வருமானால் அதில் விஷக்கிருமிகளே அதிகமாக பயன்படுத்தப்படும் என்றது.

இன்று அது நடந்து கொண்டிருக்கிறது. நான் அதை தீர்க்கதரிசனமாக எழுதவில்லை. அனுமானமாகத்தான் எழுதியிருந்தேன்.

இன்று ஆப்கான் மற்றும் அமெரிக்க தேசங்களுக்கிடையே நடைபெற்று வரும் யுத்தம் காரணமாக ஏராளமான விஷக் கிருமிகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

ஆந்திராக்ஸ் என்ற வார்த்தை கொஞ்சக்காலம் முன்பு எல்லா செய்தித் தாள்களையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. சின்னாம் பாளையம் டீக்கடையில் கூட மக்கள் ஆந்திராக்ஸ் பற்றி பேசிக் கொண்டார்கள். பத்திரிகைகளில் நாலு ஜோக்குகள் வந்தால் இரண்டில் ஆந்திராக்ஸ் இருந்தது. அவ்வளவு பிரபலமாகக் காணப் பட்டது. யாராவது பிள்ளைகளுக்கு ஆந்திராக்ஸ் என்று பேர் வைத் திருந்தார்களா என்று தெரியவில்லை.

ஆந்திராக்ஸ் என்னும் வகை கிருமி, தபால்கள் மூலம் கூட எதிரி நாடுகளுக்குள் அனுப்பப்படுகின்றன.

இதனிமித்தம் இன்று பல்வேறு தேசங்களிலும் பீதி பரவி உள்ளது.

பல நாடுகளில் தபால் துறையினர் நிலவுக்கு போகிறவர்கள் மாதிரி உடையணிந்து கொண்டு அலுவலகம் செல்கிறார்கள்.

தபால்களைப் பிரிக்கும் இடங்களில் ஆபரேஷன் தியேட்டர் டாக்டர்கள் மாதிரி நடந்து கொள்கிறார்கள்.

வெகு ஜனங்களில் பலருக்கு மூக்கில் நீளம் கூடியிருக்கிறது. உபயம்: சுவாசக் கவசம்.

பல இடங்களில் வரும் தபால்களில் மெல்லிய பவுடர் போன்ற துகள்களில் இவ்வகை கிருமிகள் இலவச இணைப்பாக அனுப்பப் படுவதாக செய்திகளில் சொல்கிறார்கள்.

பல்வேறு முக்கிய நிறுவனங்களுக்கும், தலைவர்களுக்கும் இவ் வகை பவுடர் தபால்கள் வருவது தற்சமயம் பெருகிவருகிறது.

இவற்றுள் வதந்தி தபால்களைக் கழித்துவிட்டுப் பார்த்தாலும், நிறைய கிருமித்தபால்கள் வந்ததையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

இன்று நாடுகள் ஒன்றையொன்று பழிதீர்த்துக் கொள்ள கண்ணுக்குத் தெரியாத இந்த கிருமிகளை பயன்படுத்துவது பயங்கரம்.

ஆளாளுக்கு இப்படிச் செய்வார்களேயானால் ஒரு கட்டத் தில் காற்று முழுவதுமே பாதிக்கப்பட்டு சுவாசத்திற்கும் தனியாக நாம் சிலிண்டர் வாங்க வேண்டியிருக்கும்.

பண்டிகைக்கு விண்வெளி டிரெஸ் தான் தைக்க வேண்டி யிருக்கும்.

யுத்தங்களில் கிருமிகளை பயன்படுத்துவதன் காரணம் என்ன?

கிருமிகளை யுத்தத்தில் பயன்படுத்துவதில் நாடுகளுக்கு பல அனுகூலங்கள் இருக்கின்றன. முதலாவது இந்தக் கிருமியுத்தத் திற்கு செலவு ரொம்பவும் குறைச்சல் ஒரு பிளாட்பார லேகியம் தயாரிக்கும் விஞ்ஞானி கூடதன் அடுப்படியில் இந்தக் கிருமிகளை தயார் செய்து விட முடியும். ரொம்ப சுலபம்.

போர் என்றால் நிறைய வீரர்களை தயார் செய்ய வேண்டும். அவர்களுக்கு நிறைய செலவழிக்க வேண்டும். பயிற்சியளிக்க வேண்டும். அந்த மாதிரி கச்சடாக்களெல்லாம் இதில் இல்லை.

நாடுகள் போரில் குதிக்க வேண்டுமானால் ஐ.நா. சபைக்கு தகுந்த ஆதாரங்களுடன் போருக்கான காரணத்தை விளக்க வேண்டும். கிருமிப் போர் என்றால் அது துவங்குவதே தெரியாது. ஐ.நா.வுக்கும் சொல்ல வேண்டாம்.

நிறைய வசதிகள் உண்டு.

எனவே, இன்று நிறைய நாடுகள் குண்டுகள் தயாரிப்பதை இரண்டாம் கட்டமாக்கிவிட்டு கிருமிகளை தயாரிப்பதில் அதிக நாட்டம் காட்டுகின்றன.

கிருமிகளை யுத்தத்தில் பயன்படுத்தக் கூடாது என்ற சட்டம் உலக அளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் காரியத்தை வெளியே தெரியாமல் கள்ளச்சாராயம் காய்ச்சுகிற பாணியில் கமுக்கமாய் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த முறை யுத்தமும் வெகு சுலபமானது.

பயங்கரத் தொற்றுநோய்களான மூளைக்காய்ச்சல், பிளேக், கொடிய தோல்நோய்கள் சிலவகை விஷக்காய்ச்சல்கள், காலரா போன்றவற்றை உண்டாக்கும் நுண்ணியிர்களை சோதனைச் சாலைகளில் உருவாக்க வேண்டியது.

பின்னர் அவைகளை எதிரிநாடுகளுக்குள் தந்திரமாக கடத்த வேண்டியது.

எதிரி நாடுகளுக்குள் கிருமிகளைப் பரப்புவதிலும் சில புதிய முறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள். ஒன்று, கிருமிகளை சோதனைச் சாலைகளில் வளர்த்து அவற்றை எலி, முயல் போன்ற பிராணிகளின் உடல்களில் ஏற்றி எதிரிநாடுகளுக்குள் அனுப்பி விடுகிறார்கள்.

பிறகென்ன? சற்று ஓய்வாக அமர்ந்து கொண்டு எதிரிநாட்டின் சாவு எண்ணிக்கை பற்றிக் கணக்கிட வேண்டியது. கத்தியின்றி இரத்தமின்றி கச்சிதமாக காரியம் முடிந்துவிடும்.

சென்ற 1993ம் ஆண்டு இந்தியாவிற்குள் சட்டவிரோதமாக நுழைந்து, குஜராத்துக்குள் நுழைய முயன்ற சில பாகிஸ்தானிய உளவாளிகள் பிடிபட்டனர். அவர்களது சூட்கேஸ்களை ஆராய்ந்தால் உள்ளே சின்னது சின்னதாய் எலிப்பொறிகள். அவற்றுக்குள் தாங்களும் தீவிரவாதிகளாய் மாற்றப்பட்டதை அறியாத எலிகள் மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்தன.

விசாரித்தால், "சிலர் நாய் வளர்க்கிறது போல நாங்கள் இந்த எலிகளை வளர்க்கிறோம். ரொம்பவும் செல்லம் எங்களுடன் தான் சாப்பிடும். எங்களுடன் தான் தூங்கும்" என்று கதையளந்தனர்.

வழக்கம்போல இது விஷயத்திலும் அலட்சியம் பாராட்டிய இந்திய அதிகாரிகள், தொடர்ந்து நாட்டில் பிளேக் நோய் பரவி ஜனங்கள் கொத்துக் கொத்தாய் சாகிறதை கண்டபோது தான் பிளாஷ்பேக்கில் நடந்ததை நினைவுக்கு கொண்டுவந்து கையை பிசைந்தார்கள்.

உளவாளிகள், கிருமியேற்றம் செய்யப்பட்ட எலிகளை கொண்டு வந்துதான் நாட்டில் பிளேக்கை பரப்பியிருக்க வேண்டும் என்று கருதினார்கள்.

உளவாளிகளும், ஒற்றர்களும் கையளவு துப்பாக்கியுடனும், டிரான்ஸ்மிட்டர்களுடனும் வந்த காலம் போய் இன்று எலிகளுடனும், கொசுக்களுடனும் வரத்துவங்கியுள்ளது என்பது கிருமி யுத்தத்தின் பயங்கர துவக்கத்தைக் காட்டுகிறது.

இரண்டாவது முறையை வியூபாயின்ட் என்ற பத்திரிகை இப்படி காட்டுகிறது. "எலிகள், கொசுக்கள் மூலம்தான் கிருமிகளை நாட்டிற்குள் கொண்டு வரவேண்டும் என்பதில்லை. ஒரு நாலங்குல டெஸ்ட் டியூபிலேயே கூடக் கொண்டு வந்து ஊருக்குள் உடைத்து விட்டால் போதும், வியாதிகள் பரவ ஆரம்பித்துவிடும். இப்போது வைரஸ் கிருமிகள் அடங்கிய சிறிய குண்டுகள் கூட வந்துவிட்டன"

விளாங்காயளவேயான இக்குண்டுகள் சப்தமில்லாமல் வெடிக்கக் கூடியவை. நகரத்திலோ, கிராமத்திலோ நாட்டின் எந்த ஒரு மூலையிலோ சப்தமில்லாமல் வெடித்துவிட்டுப் போய் விட்டால் நிச்சயமாக மூன்று நாட்களுக்குள்ளெல்லாம் இந்த விளாங்காய்களின் பயங்கரம் தெரிய ஆரம்பித்துவிடும்.

மூன்றாவது முறை. தற்கொலைப் படை தீவிரவாதிகள் தங்கள் உடலிலேயே விஷக்கிருமிகளை ஏற்றிக்கொண்டு மிகச் சுலபமாக நாட்டிற்குள் வந்துவிடுவது.

கஸ்டம்ஸிலும் தங்கம், மற்றும் கஞ்சா தேடுகிற அளவிற்கு யாரும் கிருமிகளை தேடுவதில்லை.

காரணம் சிலவகைக் கிருமிகள் உடலில் ஏற்றப்பட்டு பல மணி நேரங்களுக்குப் பிறகே தான் விருத்தியடைந்து உடலில் பரவ ஆரம் பிக்கும். அதன் பின்புதான் சோதனைச் சாலையில் தன்னை காண் பிக்கும்.

எனவே, பயணத்திற்கு இரண்டொரு மணி நேரத்திற்கு முன்பு "சிரிஞ்ச்" மூலம் உடலில் கிருமிகளை ஏற்றிக் கொண்டு வந்தால் நிச்சயம் மாட்டிக் கொள்ள மாட்டார்கள்.

சோதனை முறைகளை இன்னும் தீவிரப்படுத்தி உடனடியாக கண்டுபிடிக்கிற மாதிரி முறைகளை கொண்டுவந்து தீவிரவாதி களை கண்டுகொள்ளும் வசதி செய்தால் கூட நம்போன்ற தேசங்களில் ஒரு பிராந்தி பாட்டிலையோ, சென்ட் பாட்டிலையோ தந்து சுலபமாகத் தப்பிவிடலாம்.

இவை தவிர இப்போது மிகச் சுலபமாக தபால் மூலம் கிருமி களை அனுப்புகிறார்கள்.

தபால் முறையில் தையல், தபால் முறையில் பல்கலைப் படிப்பு என்றெல்லாம் துவங்கி கடைசியில் தபால்மூலம் யுத்தங் களும் நடக்கின்றன. தபால்துறையின் வளர்ச்சி பிரமிக்க வைக் கிறது.

இரகசியமாகக் கொண்டுவரப்படும் கிருமிகளை நீர் நிலைக ளிலோ, உணவு சம்மந்தப்பட்ட இடங்களிலோ கலந்து விட்டால் இன்னும் ஆபத்து அதிகமாக இருக்கும்.

கிருமியுத்தம் பற்றி நம் நாட்டில் விழிப்புணர்வு குறைவு.

தொற்றுநோய் வேகமாக பரவினாலும், நம் அரசியல் வாதிகளும், தலைவர்களும் எலெக்ஷனிலும், கலெக்ஷனிலும், வழக்குகளிலும் தான் நாட்டம் காட்டுவார்களேயொழிய இது போன்ற விஷயங்களி லெல்லாம் அலட்டிக்கொள்ளமாட்டார்கள்.

ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் சாகத் துவங்கினாலும் எதிர்கட்சிகள் மீது பழிபோட்டு சட்டசபைகளில் பேசிக் கொண்டேதானிருப்பார்கள். காரியத்தில் இறங்கமாட்டார்கள்.

ஆந்திராக்ஸ் பற்றிய பயமும் பீதியும் பல நாடுகளை கலங்கடித் துக் கொண்டிருக்கிறது. அமெரிக்க அதிபர் இதுபற்றி நேரில் தொலைக்காட்சியில் பேசுகிறார். ஜனங்களை கவனமாக இருக்க அறிவுறுத்துகிறார்.

இங்கேயோ விஞ்ஞானிகள் ஆந்திராக்ஸ் ஒன்றும் பெரிய விஷயமில்லை. சும்மா பர்னால் தடவினால் சரியாகப் போய்விடும் என்று பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காலை நேர டி.வி.யில் சித்த மருத்துவர்கள் ஆந்திராக்ஸிற்கு தங்களிடம் லேகியம் இருப்பதாக சொல்கிறார்கள்.

நம்மை போன்ற அலட்சிய தேசங்களில் கிருமிகள் பரப்பப் பட்டால் விளைவுகள் மிகவும் பயங்கரமாக இருக்கும்.

நாட்டின் எந்த ஒரு சிறிய இடத்திலும் வெடிக்கப்படும் வைரஸ் வெடிகுண்டுகள் சில தினங்களிலேயே நாட்டை சுடுகாடாக்கிவிடும்.

ஆப்கான் தீவிரவாதிகளிடம் இது போன்ற முப்பத்தியேழு வகைக் கிருமிகள் கைவசம் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

ஆப்கானில் இவ்வகை கிருமிகளை ஏராளமாக உற்பத்தி பண்ணி அதற்கு ஒரு ஊரையே ஒதுக்கி காவல் வைத்து வருகிறார் களாம். அமெரிக்கா யுத்தம் துவங்கும் முன் இந்த இடத்தைக் கைப்பற்றி விடத் தீர்மானித்தே நாட்களை கடத்தியதாம். பின்னர் அம்முயற்சி முடியாமல் போகவேதான் யுத்த அறிவிப்பு செய்தது என்று சி.என்.என். செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மூளைக்காய்ச்சல், ஈரல் அழற்சி நோய், மஞ்சள் காமாலை, சீத பேதி, காலரா மற்றும் தோல் நோய்கள் போன்றவற்றை உண்டாக்கும் கொடிய கிருமிகளை கொண்ட சிறுகுண்டுகளை ஆப்கான் மட்டுமல்ல, பல வல்லரசு நாடுகளும் செய்து பராமரித்து வருகின்றன என்பது தான் உண்மை.

அமெரிக்காவிலுள்ள "மெர்ரிலேண்ட் பல்கலைக்கழகம்"

கிருமியியல் பரிசோதனை என்ற பெயரில் பயங்கரமான கிருமி ஆயுதங்களை உருவாக்குவதாக "தி வேர்ல்ட்" என்ற பத்திரிகை குற்றம்சாட்டியுள்ளது.

மேலும் இப்பத்திரிகை தனது செய்தியில் லாகூரிலுள்ள பாகிஸ்தான் மருத்துவ நிலையமான BMRLல் மக்களைக் கொல்லும் கொடிய கிருமிகளை உண்டாக்கும் பணிகளை மெரிலாண்ட் பல்கலைக் கழகமே தனது மேற்பார்வையில் செய்வதாக குறிப்பிட்டுள்ளது.

கியூபா தெரியுமா?

அமெரிக்கா அடிக்கடி சீண்டி விளையாடும் துளியூண்டு நாடு. இங்கே கொஞ்ச நாட்கள் முன்பு விதவிதமான தொற்று நோய்களால் ஜனங்கள் குவியல் குவியலாக மடிந்தார்கள். இதற்கும் அமெரிக்கா இங்கு சப்தமில்லாமல் வெடித்த கிருமி குண்டுகளே காரணம் என்று பலமாக நம்பப்படுகிறது.

அபாயம் நிறைந்த இந்த கொள்ளை நோய்கள் காய சண்டிகை மாதிரி அடங்காப்பசி கொண்டவை. கும்பல் கும்பலாய் ஜனங்களை விழுங்கிவிடும் தன்மையுள்ளவை. மழுங்காமல் பரவிக் கொண்டேயிருக்கும் ஆற்றல் கொண்டவை.

உதாரணமாக, 1901ம் ஆண்டில் பிளேக் நோய் இந்தியாவில் பரவத் துவங்கினபோது மகாராஷ்டிராவில் மட்டும் சுமார் 1,29,000 பேர் மடிந்தனர். பின்னர் 1902ம் ஆண்டில் சுமார் 1,84,752 பேர் பலியானார்கள். இன்னும் இரண்டாண்டுகள் கழித்து சாவு எண்ணிக்கை 1,94,000 ஆக உயர்ந்ததாக புள்ளிவிபரங்கள் சொல்லுகின்றன.

கொள்ளை நோய்கள் மற்றும் கிருமிகளுடனான மனிதர்களின் யுத்தம் காலம் காலமாக நடந்து வருவதுதான். பண்டைக் காலங்களில் மலேரியா, டிங்கு, காலரா, அம்மை போன்ற கொடிய நோய்கள் மனிதர்களை அச்சுறுத்தின. கடைசியில் அதற்கு பல தீர்வுகளைக் கண்டு வெகுவான பிரயத்தனங்களுக்குப் பின் மனிதன் அவைகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தான்.

பண்டைக்காலத்தில் காணப்பட்ட பல கொடிய நோய்களின் கிருமிகளைக் கூட வேருடன் அழித்தான்.

ஒழிக்கப்பட்ட அதே கிருமிகளை இன்றைக்கு மனிதனே உற்பத்தி செய்கிறான். அவனே கட்டவிழ்த்து விடுகிறான்.

என்ன பயங்கரம் என்று பாருங்கள்!

கிருமிகளும் வியாதிகளும் இன்றைக்கு மனிதனாலேயே திட்டமிட்டு உருவாக்கப்பட்டு பரப்பப்படுகின்றன.

யுத்தங்களில் பழைய காலங்களில் நாய்களை பயன்படுத்தினார்கள். பிற்பாடு குதிரைகள், இந்தியா போன்ற தேசங்களில் யுத்தங்களில் யானைகளை பயன்படுத்தி பிரமிக்க வைத்தார்கள். இன்றைக்கோ யுத்தங்களில் கிருமிகளை பயன்படுத்தி நம்மை கலங்க வைக்கிறார்கள்.

நமக்கு கிருமிகளை கண்டு பயமில்லை. ஆனால் இதுமாதிரி கிருமிகள் யுத்தங்களில் கட்டவிழ்த்து விடப்படும். எங்கும் வியாதிகள் பெருகும். இது கடைசிக்கால அடையாளம் என்று வேதம் சொல்வதில் தான் நமக்குப் பதட்டம் உண்டாகிறது. (சீக்கிரம் ஆயத்தமாக வேண்டுமே)

இந்த பிரசங்கியார்களிடம் பிடிக்காததே இது ஒன்றுதான் டி.வி. புழக்கத்திற்கு வந்தாலும், வாக்காளர்களுக்கு அடையாள அட்டை கொடுத்தாலும், குழாயில் தண்ணீர் வராவிட்டாலும் எல்லாவற்றுக்கும் காரணம் இது கடைசிக்காலம், வருகை சமீபம் என்பீர்கள்.

பொறுமை, பொறுமை

வேதத்தை கொஞ்சம் கவனமாக படித்துப் பாருங்கள். நான் சொல்வது சரியாக இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்து பின் ஏற்று கொள்ளுங்கள். அல்லது மறுத்துவிடுங்கள். ஒன்றும் பாதிப்பில்லை.

சரி. வேதம் என்னதான் சொல்கிறது?

*மத் 24:7, லூக் 21: 11*
*ஜனத்திற்கு விரோதமாய் ஜனமும், இராஜ்ஜியத்திற்கு விரோதமாய் இராஜ்ஜியமும் எழும்பும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் தோன்றும்.*

வெறுமனே பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் தோன்றும் என்று வேதம் குறிப்பிடாமல் இராஜ்ஜியங்கள் ஒன்றுக்கொன்று விரோதமாக எழும்பும் என்பதைத் தொடர்ந்து பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் தோன்றும் என்று குறிப்பிடுவதால், இவையெல்லாம் இயற்கையாகத் தோன்றும் பஞ்சங்களையும், கொள்ளை நோய்களையும் குறிப்பிடாமல் யுத் தங்களின் விளைவாகத் தோன்றும் பஞ்சங்களையும் கொள்ளை நோய்களையும் குறிப்பிடுகிறது என்று கொள்ளலாம்.

என்றால், கடைசிக் காலத்தில் தோன்றும் பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் இயற்கையானவை அல்ல, மனிதனால் பகையினிமித்தம் தோற்றுவிக்கப்படப் போகிறவை என்று பொருள் கொள்ளலாம்.

அது எத்தனை உண்மை பாருங்கள்.

கிறிஸ்து இவற்றை வெளிப்படுத்தின காலத்தில் எல்லாம் இப்படி ஒரு கிருமியுத்தத்தை யாரும் கற்பனை செய்து கூடப் பார்த்திருக்க முடியாது.

இன்று தேசங்கள் தங்களுக்குள் உண்டாகும் பகைகள் நிமித்தம் வஞ்சம் தீர்க்க கொள்ளை நோய்களை பல இடங்களில் உண்டாக்கியும் பரப்பியும் வருகின்றன.

இது கடைசிக்காலம் என்பதற்கு ஆணித்தரமான சான்று.

பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் தோன்றுவது கடைசிக்கால அடையாளம் என்று பிரசங்கித்த போதெல்லாம் பஞ்சமும், நோய்களும் எந்தக் காலத்தில் தான் வரவில்லை? காலம் காலமாக அவை ஆங்காங்கே வந்து கொண்டு தானே இருக்கின்றன என்று கிண்டலாக பலர் கூறுவதுண்டு.

இதுவரை தோன்றிய பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் இயற்கையாகத் தோன்றியவை. ஆனால் கடைசிக் காலத்தில் தோன்றுபவையோ நாடுகளிடையே நடைபெறும் யுத்தங்களால் தோற்றுவிக்கப்படுபவை.

எனவே, இனி காலம் செல்லாது என்பதற்கு இரண்டாவது சிந்தனை தேவையில்லை.

வெகு கவனம் நண்பரே.

உலகத்தின் ஒவ்வொரு அசைவிலும் இயேசுவின் வருகை தெரிகிறது.

நீங்களும் அவரை எதிர்கொண்டுபோக ஆயத்தமாக இருந்தால் என்னுடன் சேர்ந்து சந்தோஷமாகச் சொல்லுங்கள்.

ஆமென்! கர்த்தராகிய இயேசுவே வாரும்.

# 8

## எச்சரிக்கைச் செய்தி

### வெளிப்படுத்தல் 1 : 3

இந்த தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள். காலம் சமீபமாயிருக்கிறது.

### 1 பேதுரு 4 : 7

எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம் பண்ணுவ தற்கு ஜாக்கிரதையாயிருங்கள்.

### வெளிப்படுத்தல் 22 : 11-12

அநியாயம் செய்கிறவன் இன்னும் அநியாயம் செய்யட் டும். அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக் கட்டும். நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும். பரிசுத்தமாயிருக்கிறவன் இன்னும் பரிசுத்தமாயிருக் கட்டும்.

இதோ, சீக்கிரமாக வருகிறேன். அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.

# இது கடைசிக் காலமா?

முந்திய அத்தியாயத்துக் கட்டுரைகள் எல்லாம் நமக்குச் சொன்ன ஒட்டுமொத்தச் செய்தி இது கடைசிக்காலம் எச்சரிக்கை யாயிருங்கள் என்பதுதான். இல்லையா?

மனிதனுக்கு முடிவு என்று ஒன்றிருப்பதைப் போல உலகத்திற் கும் முடிவு என்று ஒன்று இருக்கிறதா என்ன? உலகம் தோன்றித் தான் பல்லாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டதாக சொல்கிறார்களே, அதெப்படி அழியும்?

கேள்வி நியாயமானதுதான். ஆனால் பதில் ரொம்ப சுலபமா னது.

முதல் என்று ஒன்றிருந்தால் முடிவு என்று ஒன்று கட்டாயமாக இருக்கும். தவிர்க்க முடியாது. உலகத்திற்கு முதல் என்று ஒன்றிருந் தது. ஆதியாகமத்து துவக்க அதிகாரங்கள் அதுபற்றி விளக்கமாக பேசுகின்றன.

துவக்கமென்றிருந்த உலகத்திற்கு முடிவு என்று ஒன்றும்

இருக்கிறது. அதுபற்றி வேதாகமத்தின் எல்லாப் புத்தகங்களுமே ஏறத்தாழ பேசுகின்றன. அவற்றுள் வெளிப்படுத்தின விசேஷம் கொஞ்சம் தூக்கலாகப் பேசுகிறது.

உலகில் பிற மதங்கள் சார்ந்த வேதங்களும் உலகத்திற்கு ஒரு முடிவு உண்டு என்பதில் உடன்படுகின்றன.

நாம் வாழும் இந்த பூமி ஒரு மாபெரும் அழிவை எதிர்நோக்கி யுள்ளது என்பதை எந்தவொரு உணர்வுள்ள மனிதனும் மறுக்க முடியாது.

உலகத்தின் முடிவு பற்றிய உணர்வு இன்று மனிதர்கள் யாவரை யும் பற்றியிருப்பது, சற்று கூர்ந்து கவனித்தால் வெளிப்படையாகத் தெரிகிறது.

விஞ்ஞானிகள், ஆன்மீகவாதிகள், பத்திரிக்கையாளர்கள், சாதாரண குடிமக்கள், தேசியத்தலைவர்கள் போன்ற சமுதாயத் தின் எல்லாமட்ட மனிதர்களின் பிரதானமான பேச்சு கடைசிக் காலம் பற்றியே திரும்பியுள்ளது.

மிகச் சில வருடங்களாக இவ்வுணர்வு மனுக்குலம் முழுவதி லும் வியாபித்து வருகிறது.

Dr. ராபர்ட், M. ஹட்சின்ஸ் என்ற சிகாகோ பல்கலைக் கழகத் தின் துணைவேந்தர் சொல்வதைக் கேளுங்கள். "இனி வரும் ஐம்பது வருடங்களுக்கு மேல் ஒரு எதிர்காலம் இருக்குமென்று என்னால் கற்பனை கூட பண்ண முடியவில்லை!".

H.G. வெல்ஸ் என்ற சரித்திர ஆராய்ச்சியாளரின் கூற்றை கவனியுங்கள்.

"உலகம் தன்னுடைய கடைசிச் சுற்றில் இருக்கிறது. உலகத்தி லுள்ள யாவற்றிற்கும் முடிவு சமீபம் என்று தெரிகிறது!" (Mind at the End of the Earth. By. H.G. Wells)

முடிவு காலம் என்பதும் கடைசிக் காலம் என்பதும் வெறும் கிறிஸ்தவ மதவாதிகளின் பிதற்றல் என்று கருதி வந்த உலகம் நடைமுறைச் சம்பவங்களைக் கண்டு மெல்ல மெல்ல தன் கருத்தை மாற்றிக் கொண்டு முந்தைய பிரசங்கிமார்களைவிட உரத்த சத்தமாய் கடைசிக்காலம் பற்றிப் பேசி வருகிறது.

இன்று யாவரும் எதிர்நோக்கியுள்ளபடி மெய்யாகவே இது கடைசிக் காலம் தானோ?

வேதம் இதைக் குறித்து என்ன சொல்கிறது என்று கவனிக் கலாம். ஏனென்றால் நமக்கு வேதம் சொல்வதுதானே இறுதித் தீர்ப்பு?

ஒருமுறை இயேசுவின் சீடர்கள் அவரிடத்தில் தனித்து வந்து, "உம்முடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும்." என்றார்கள். அதற்கு இயேசு உலகத்தின் கடைசிக் காலத்தில் நடைபெறும் அடையாளங் களை சுட்டிக் காட்டியுள்ளார். மத்தேயு 24வது அதிகாரம் முழுவதும் கடைசிக் காலச் சம்பவங்கள் பற்றியே இயேசு பேசியுள் ளார். வாசித்துத்தான் பாருங்களேன்.

இரண்டாயிரம் வருடத்திற்கு முன்பு இயேசு சொன்னதை நம்பலாமா?

மத்தேயு 24ல் அவர் சொன்ன அடையாளங்கள் யாவும் அச்சுப் பிசகாமல் இன்று நம் கண்ணெதிரே அப்படியே நிறைவேறி வருகிறது. நடைபெறும் சம்பவங்கள் யாவும் இயேசுவின் கூற்றிற் கும், உலகத்தின் முடிவிற்கும் பலமான சாட்சிகளாக இருக்கின்றன.

காலத்தை முன்னறிவித்த வேதத்தையும், கண்ணெதிரே காணும் காலத்தையும் இணைத்துப் பாருங்கள். உங்களால் இயேசுவை விசுவாசியாமல் இருக்கவே முடியாது.

கடைசிக் காலங்களில் நடைபெறும் யுத்தங்கள் பற்றி.. இயற்கையில் தோன்றும் மாறுதல்கள் பற்றி.. மனிதர்களின் சுபாவங்களில் தோன்றும் வியர்த்தங்கள் பற்றி..

ஆவிக்குரியவர்கள் நடுவில் தோன்றும் அடையாளங்கள் பற்றி.. யூதர்கள் வாழ்வில் நிகழப்போகும் சம்பவங்கள் பற்றி.. என்று இயேசு, கடைசிக் காலம் பற்றிச் சொன்ன ஒவ்வொன்றும் நிறை வேறியே வருகிறது.

சத்திய வேதத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகளெல்லாம் உண்மையும் சத்தியமும் எல்லா அங்கீகரிப்புக்கும் ஏற்றதும் என் பதை நம் கண் எதிரே நடைபெறும் நடைமுறைச் சம்பவங்கள் உறுதிப்படுத்துகின்றன.

மனிதனுக்கு இயல்பாகவே உள்ள ஆவல்களுள் ஒன்று எதிர்

காலத்தை அறிவது பற்றியது.

அதில் தற்காலத்தில் தோன்றியுள்ள பிரச்சனைகளின் பெருக்கத்தால், எதிர்காலத்தை அறிந்து கொள்வதிலான ஆர்வம் ஜனங்களுக்குள்ளே அதிகரித்துள்ளது எனலாம்.

விஞ்ஞானிகள் பெருகியுள்ள முன்னணி தேசங்களிலிருந்து நூற்றுக்கணக்கான ஆருடப் பத்திரிக்கைகள் புறப்பட்டுள்ளன. கம்ப்யூட்டர்களில் ஜாதகம் சொல்லுகிறார்கள்.

பிரான்சில் மட்டும் சுமார் 60,000 குறி சொல்லுபவர்கள் இருக்கி றார்கள். பிராங்ஃபர்ட் (ஜெர்மனி)யில் மட்டும் சுமார் 17,000 குறிகாரர்கள் இருக்கிறார்கள் என்றும் குறிப்புகள் கூறுகின்றன.

அமெரிக்காவில் தோன்றியுள்ள செரில் (Cheryl) என்ற குறி சொல்லும் பெண்மணியின் உதவியை அரசியல் தலைவர்களும் உயர் அதிகாரிகளும் மதத் தலைவர்களும் கூட நாடுகின்றனர். அவளுடைய எதிர்காலக் கணிப்பு பற்றிய நூல்கள் கோடிக் கணக்கில் விற்பனையாகின்றன. அவளிடம் அப்பாயிண்மெண்ட் வாங்க கூட்டம் அலை மோதுகிறது.

நம்முடைய நாட்டிலும் கூட ராசிபலன் என்று பெயரிட்டு ஆரூடம் பற்றி வெளியிடாத பத்திரிக்கைகள் குறைவு எனலாம்.

இவையெல்லாம் எதிர்காலத்தை அறிந்து கொள்வதில் மனிதன் காட்டும் ஆர்வத்திற்கு சான்றுகளாக இருக்கின்றன.

இன்று உலகநாடுகளிடையே தோன்றியுள்ள ஆயுதப் பெருக்கம், வேலையின்மை, பஞ்சம் ஒழுக்கச் சீர்குலைவு இவற்றினால் பாதிக்கப்பட்டுள்ள மனுக்குலத்தின் மனதில் தோன்றியுள்ள பூதாகரமான கேள்வி.. அடுத்தது என்ன? என்பது தான்.

எதிர்காலத்தை அறிந்துகொள்வதை வேதம் ஒருநாளும் தவறு என்று போதிக்கவில்லை; மாறாக அதற்காக தவறான முறைகளைப் பின்பற்றுவதையே தவறு என்று போதிக்கிறது.

எதிர்காலத்தை முன்னறிவிப்பதே தீர்க்கதரிசனம் என்கிறோம். வேதத்தில் எழுபத்தி ஐந்து சதவீதம் தீர்க்கதரிசனங்களே.

இந்த தீர்க்கதரிசனங்கள் எதிர்காலத்தைக் குறித்து

தேவனுடைய திட்டத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. பொய்க் கலப்பில்லாமல் துல்லியமாக சொல்கிறது.

எதிர்காலத்தை மனிதன் அறிந்து கொள்வது தேவனுக்கு பிரிய மில்லாததாயிருக்குமானால் தீர்க்கதரிசன நூல்கள் பொய்யென்று பொருளாகுமல்லவா?

ஆனால் தேவனுடைய சித்தமோ மனிதன் இனிவரும் காலத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்பதாகவே இருக்கிறது.

எனவே, காலாகாலங்களில் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூல மாக தீர்க்கதரிசனங்களை அருளினார் என்கிறது வேதம். வாசித்துப் பாருங்கள்.

***II** பேதுரு 1 : 21*
*தீர்க்கதரிசனமானது ஒருக்காலத்திலும் மனுஷ ருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவ னுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்.*

உலகில் அடுத்தடுத்து நடைபெற வேண்டிய சம்பவங்கள் யாவும் தேவனால் ஏற்கனவே திட்டம் செய்யப்பட்டவையே. பிறந்தவன் ஒவ்வொருவனும் பிறக்கிறதற்கும் முன்பாகவே பேரிடப் பட்டிருக்கிறான் என்கிறது வேதம்.

திட்டமிட்டவரின் வழியாக அன்றி வேறே எந்த விதத்தி னாலாவது நாம் வருங்காலத்தை அறிந்து கொள்ள முற்படுவது வியர்த்தமும் வீணுமாகும். மாத்திரமல்ல நம்மை விபரீதத்திலும் கொண்டுபோய் விட்டுவிடும்.

பிசாசின் ஆவிகளின் துனணயுடன் காலத்தைக் கணிக்க முற் படுவதும், காலங்களை யூகிக்க முற்படுவதும் தவறான, ஆபத்தான அணுகுமுறைகள்.

வருங்காலங்களின் திட்டத்தை வகுத்த தேவன், அதை வேதத் தின் வழியாக மனிதருக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

அதை முறையாக வாசித்தறிகிற யாவரும் எதிர்காலத்தைக் குறித்து ஒரு சரியான புரிந்து கொள்ளுதலைக் கொண்டிருக் கிறார்கள் என்பதுதான் நிதர்சனம்.

இனி வரப்போகும் எதிர்காலத்தைக் குறித்து தேவனுடைய திட்டங்கள் யாதென அறிந்துகொள்ள விரும்பும் யாவருக்காகவும் எழுதப்பட்டதே இந்தப் புத்தகம்.

இன்று நாம் கொடிய காலங்களில் நின்று கொண்டிருக் கிறோம். தேசத்தில் பிரிவினைகள், பகைகள், யுத்தங்கள், பஞ்சங் கள், கொள்ளை நோய்கள் என்று உலகம் தழுவிய பல பிரச்சனை களை சந்தித்துக் கொண்டு வருகிறோம். இவையெல்லாம், கூட தேவனால் முன்னுரைக்கப்பட்ட சம்பவங்களே. (மத் 27 : 6, 7, 12).

இக்காலத்திற்கு பின்பாக ஏழுவிதமான முக்கிய சம்பவங்கள் நடைபெற வேண்டுமென தேவன் திட்டம் பண்ணியுள்ளார். தொடர்ந்து அவை பற்றி அடுத்த அத்தியாயத்தில் பார்க்கலாம்.

9

## *எச்சரிக்கைச் செய்தி*

### வெளிப்படுத்துதல் 14 : 15

அப்பொழுது வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி: பூமியின் பயிர் முதிர்ந்தது. அறுக்கிறதற்கு காலம் வந்தது. ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன் னான்.

### வெளிப்படுத்துதல் 11 : 18

ஜாதிகள் கோபித்தார்கள். அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது. மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிற தற்கும். தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்கார ருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின் மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலன ளிக்கிறதற்கும். பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கி றதற்கும் காலம் வந்தது என்று சொல்லி, தேவனைத் தொழுது கொண்டார்கள்.

# அந்த ஏழு சம்பவங்கள்

சென்ற அத்தியாயத்தில் உலகத்தின் கடைசி நாட்களில் மிக முக்கியமான ஏழு சம்பவங்கள் நடைபெறும் என்று வேதம் முன்னறிவித்துள்ளதாக பார்த்தோம். இனி அந்தச் சம்பவங்கள் பற்றி பார்க்கலாம்.

## *I. இயேசு மத்திய வானத்திற்கு திரும்புவார்:*

சிலுவையில் அறையுண்டு மரித்த இயேசு, அடக்கம் பண்ணப் பட்டு மூன்றாவது நாளிலே உயிரோடு எழுந்தார் என்பது நாம் யாவரும் அறிந்த செய்தி. அப்படி உயிரோடு எழுந்த இயேசு நாற்பது நாட்கள் தம்முடைய சீடர்களுக்கு தம்மை உயிருள்ளவராக வெளிப்படுத்திய பின்பு, பல பேருடைய கண்கள் காண உயிரோடு வானத்துக்கு ஏறிப்போனார். அப்படி வானத்திற்கு ஏறிப்போன இயேசு மறுபடியும் கடைசி நாட்களில் திரும்பவும் வருவார் என்கிறது வேதம்.

*அப்போஸ்தலர் 1: 9-11*

*இவைகளை அவர் சொன்ன பின்பு அவர்கள்*

*பார்த்துக் கொண்டிருக்கையில் உயரே எடுத்துக் கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது.*

*அவர் போகிறபோது, அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரம் தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று:*

*கலிலேயராகிய மனுஷரே நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்.*

வானத்துக்கு எப்படி எழுந்தருளிப் போனாரோ அப்படியே திரும்ப வருவார் என்பதிலிருந்தே அவர் மாம்சீகக் கண்கள் காணும்படி வருவார் என்றுதானே அர்த்தமாகிறது.

அப்படியானால் உயரே எடுத்துக் கொள்ளப்பட்ட இயேசு யாவரும் காணும்படி வருவார் என்றுதானே அர்த்தமாகிறது.

முதலாவது, இயேசு கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் - (கவனிக்கவும் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் மட்டும்தான். கிறிஸ்தவர்கள் யாவரும் அல்ல) - தங்கள் கல்லறைகளிலிருந்து உயிர்த்தெழுவார்கள்.

***I*** *கொரிந்தியர் 15: 51, 52*
*இதோ, ஒரு ரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை. ஆகிலும், கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப் பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்.*

*எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாக எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.*

கிறிஸ்துவின் வருகையின்போது எக்காளம் தொனிக்கும் சமயத்தில் ஏற்கனவே மரித்தவர்களின் நிலைதான் நீங்கள் மேலே வாசித்தது, அந்தச் சமயத்தில் உயிருடன் அவர் வருகைக்காக காத்திருக்கும் மெய்யான விசுவாசிகள் யாவரும் நொடிப் பொழுதிலே மறுரூபமாவார்கள். இதைப் பற்றியும் வேதம் சொல்கிறதை கவனியுங்கள்.

*I தெசலோனிக்கேயர் 4: 16, 17*

*ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.*

*பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்களின் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.*

இந்த வசனங்கள் இயேசுவின் வருகை பற்றி சொல்கின்றன.

ஆனால், இது இரண்டாம் வருகையல்ல, இரகசிய வருகை என்று அழைக்கப்படுகிறது.

சில சபைகளும், சில போதகர்களும் இதை ஏற்றுக் கொள்வதில்லை. கிறிஸ்து இரண்டுமுறை பூமிக்கு திரும்ப வருவாரா? என்கிறார்கள்.

இயேசு இனி பூமிக்கு திரும்ப வருவதைத்தான் நாம் இரண்டாம் வருகை என்கிறோம். அது வேறொரு சந்தர்ப்பத்தில், நடைபெறப் போகிறது. அது ஒருமுறை தான் நிகழப் போகிறது சந்தேகமேயில்லை.

ஆனால் இங்கே குறிப்பிட்டுள்ள காரியம் இயேசு பூமிக்கு வருவதையல்ல, வானத்தில் தோன்றுவதையே குறிக்கிறது.

எனவே, இதை இரண்டாம் வருகையென்று கொள்ளக் கூடாது. இந்த வருகையில் சம்பந்தப்படப் போவது மெய்யான கிறிஸ்துவின் விசுவாசிகள் மட்டுமே. எனவே, இதை ரகசிய வருகை என்கிறோம்.

இந்த இரகசிய வருகையில் ஒவ்வொரு உத்தம விசுவாசியும் எடுத்து கொள்ளப்படுவதினால் இந்த வருகைக்குப் பிறகு எந்த ஒரு விசுவாசியும் பூமியில் இல்லாத நிலையுண்டாகும்.

இது எப்போது நடைபெறும்?

தேவனுடைய செயல்களுக்கான சரியான காலத்தையும் நேரத்தையும் அறிவது மனிதருக்குரியதல்ல, அது பிதாவின் ஆதீனத்திற்குட்பட்டது. நமக்குரியதல்ல.

துல்லியமான காலத்தை தான் அறிய முடியாதேயொழிய காலத்தை நாம் உத்தேசமாக அனுமானிக்கலாம். அதன்படி, நாம் வாழும் இந்த கொடிய நாட்களின் முடிவிலும், உபத்திரவ காலத்தின் முன்பாகவும் இது நடைபெற வேண்டும்.

வேதம் குறிப்பிட்டுள்ள பொல்லாத நாட்கள் இவைகள் ஆனபடியினால் எந்த நேரமும் அவருடைய இரகசிய வருகை இருக்கலாம். இதைக் குறித்து வேதம் சொல்லும்போது நினையாத வேளையில் மனுஷகுமாரன் வருவார் என்று கூறுகிறது.

*மத் 24: 44*

*நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார். ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.*

அவர் இரகசிய வருகை எந்த நேரமும் இருக்கலாம். இரகசிய வருகை என்பது முடிவு கால சம்பவங்களில் முதலாவது நிகழப்போகும் சம்பவம்.

மேற்சொன்ன இந்தச் சம்பவம் கட்டுக்கதை என்று எண்ணி பலர் இன்று ஏளனம் செய்யத் துவங்கியுள்ளனர். இது அவர்களது பௌதீக அறிவிற்குள் அடங்கவில்லை என்பதுதான் காரணம்.

மனிதனின் பௌதீக அறிவு குறைவானது. வரையறைகளுக்கு உட்பட்டது. ஆனால், தேவ ஞானமும், திட்டங்களும் அப்படிப் பட்டவையல்ல, அது நிறைவானது. எல்லா வரையறைகளுக்கும் மேலானது.

இப்போது நம்பப்பட அரிதான இந்தச் சம்பவம், நடைபெற்ற பின் ஒரு வேளை ஜனங்களால் நம்பப்படலாம். ஏற்றுக் கொள்ளவும்படலாம். ஆயினும் காலம் கடந்த அங்கீகரிப்பால்

பயன்தான் ஒன்றுமில்லை!

இன்னும் சில சபைப் பிரிவினரும், சில ஊழியர்களும் இயேசு மத்திய வானத்தில் வருவதை நம்பவும், ஏற்றுக் கொள்ளவும் செய்கிறதில்லை. அவர்களிடம் கேட்டால் இரகசிய வருகை என்றவொரு பதம் வேதத்தில் எங்கும் குறிக்கப்படவில்லையே என்கிறார்கள்.

ஆனால் வேத வசனங்களை ஆராய்ந்து நோக்கினால் 1தெ 2: 19, 4:5, 5:23. 2 தெச. 2:1. யாக். 5,7,8 1 யோ 2: 29 ஆகிய வசனங்கள் சபையை கர்த்தர் எடுத்துக் கொள்வதையும் மத். 24:3, 27, , 39. 2 தெச. 2: 8,2 பேதுரு 1: 16 ஆகிய வசனங்கள் அந்த சபையுடன் இயேசு மீண்டும் பூமிக்கு வருவதையும் குறிக்கின்றன என்பதை தெளிவாகக் கண்டு கொள்ளலாம்.

எனவே இந்த பொல்லாத நாட்களிலே எந்த வேளையிலும் சபையை எடுத்துக் கொள்ளும்படிக்கு கர்த்தர் வெளிப்படலாம். இதுதான் கடைசிக்காலச் சம்பவம் பற்றிய தேவனுடைய திட்டத்தில் முதலாவது கட்டம்.

## 2. அந்திக் கிறிஸ்துவின் வருகை

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மத்திய வானத்தில் வெளிப்பட்டு தன்னுடைய ஜனங்களைக் கூட்டிச் சேர்த்தபின்பு, அந்திக்கிறிஸ்து இந்த உலகத்தில் வெளிப்படுவான். யார் இந்த அந்திக் கிறிஸ்து?

அந்திக் கிறிஸ்து என்பவன் சாத்தானின் திரித்துவத்தில் ஒருவன். “என்னது? சாத்தானுக்கும் திரித்துவம் இருக்கிறதா” என்று ஆச்சரியப்படுவீர்கள்.

தேவன் என்ன செய்கிறாரோ அதன் போலியான மாதிரியே சாத்தான். அதன்படி பிதாவாகிய தேவன் எப்படி திரித்துவமாக இயங்குகிறாரோ, அதே வண்ணமாக சாத்தானும் திரித்துவத்தின் போலியான மாதிரியாக தன்னை வெளிப்படுத்துகிறான்.

சாத்தானின் திரித்துவங்கள் என்னென்ன என்று தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா?

சொல்கிறேன். கேளுங்கள். சாத்தானின் திரித்துவமானது

ஒன்று வலுசர்ப்பம். இரண்டு அந்திக்கிறிஸ்து, மூன்றாவது கள்ளத் தீர்க்கதரிசி என்பதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சாத்தானான அந்திக் கிறிஸ்து இதுவரை தன்னை வெளிப் படுத்தாதபடிக்கு ஆவியானவர் தடைசெய்து கொண்டிருக்கிறார். சபை இவ்வுலகில் இருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, ஆவியானவரும் தன் பணியை முடித்து உலகத்தை விட்டு நீங்கிப் போவார், அதன் பின்பு, அந்திக்கிறிஸ்து இந்த உலகத்திற்கு தன்னை வெளிப்படுத்துவான் அவனுடைய வருகையை குறித்து 2 தெச 2: 1-10 வரை வாசித்துப் பாருங்கள். தெளிவாகப் புரியும்.

***II** தெசலோனிக்கேயர் 2: 9-10*

*அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும், அடையாளத் தோடும் பொய்யான அற்புதங்களோடும்,*

*கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண் டாகும் சகலவிதமான வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கபடத்தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமல் போனபடியால் அப்படியாகும்.*

வந்த அந்திக்கிறிஸ்து சும்மாவாயிருப்பான்?

உலகத்தின் முழு ஆட்சியையும் கைப்பற்றி, இவ்வுலகத்தை ஆளுகை செய்வான், அவனுடைய ஆளுகை இந்த பூமியில் ஏழு வருடங்கள் இருக்கும்.

சாத்தானை பின்பற்றுகிறவர்களுக்கும் அவன் பக்தர்களுக்கும் பதவி கிடைக்கும். கொஞ்ச நஞ்சம் விசுவாசிகளாயிருந்து இரகசிய வருகையில் கைவிடப்பட்டவர்கள் அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியில் துன்புறுத்தப்படுவார்கள்.

ஏன் சார் வம்பு? அரைகுறை கிறிஸ்தவத்திற்கு மூட்டை கட்டி விடுவதே உத்தமம்.

## 3. உபத்திரவ காலம்:

அவன் ஆளுகை செய்யும் காலம் உபத்திரவ காலம் என்று குறிக் கப்படுகிறது. இதை மூன்றரை, மூன்றரை வருடங்களாக

இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

முதல் பிரிவிற்கு உபத்திரவ காலம் என்று பெயர். மத் 24: 29ல் இக்காலம் குறிக்கப்பட்டுள்ளது.

இந்த உபத்திரவ காலத்தில் கைவிடப்பட்ட சபை கொடிய துன்பத்தை அனுபவிக்கும் (வெளி 12: 1,2,13)

வெளிப்படுத்துதல் 12: 1, 2, 13

*அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது. ஒரு ஸ்திரி சூரியனை அணிந்திருந் தாள். அவள் பாதங்களின் கீழே சந்திரனும் அவள் சிரசின் மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களும் இருந்தன*

*அவள் கர்ப்பவதியாயிருந்து பிரசவ வேதனை யடைந்து, பிள்ளைபெறும்படிக்கு வருத்தப்பட்டு அலறினாள்.*

*வலுசர்ப்பமானது தான் பூமியிலிருந்து தள்ளப்பட்ட தை அறிந்து அந்த ஆண் பிள்ளையைப் பெற்ற ஸ்திரி யைத் துன்பப்படுத்தினது.*

இயேசு கிறிஸ்து வானத்திற்குத் திரும்பும்போது பரிபூரணம டைந்த பரிசுத்தவான்களையே தம்முடன் சேர்த்துக் கொள்வார் என்பதையறிய வேண்டும். இயேசுவின் இரகசிய வருகைக்கு உட்படுவோர் எல்லா கிறிஸ்துவர்களுமோ, எல்லா விசுவாசி களுமோ அல்லர்.

தேவனுடைய வார்த்தையின்படி ஆயத்தமும், பரிபூரணமும் அடைந்த பரிசுத்தவான்கள் மட்டுமே எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

மீதியிருப்போர் அனைவரும் கைவிடப்படுவார்கள். அப்படிக் கைவிடப்பட்டவர்கள், தங்களுக்கு முன்பாக எடுத்துக் கொள்ளப் பட்ட விசுவாசிகளினிமித்தம் உணர்வும்,வைராக்கியமும் அடைந்து தங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொள்ள முனைவார்கள். இப்படிப்பட்டவர்களுக்குத்தான் உபத்திரவங்கள் உண்டாகும்.

காரணம், அந்திக்கிறிஸ்து அவர்களை தங்கள் விசுவாசத்தை மறுதலிக்கும்படி வற்புறுத்துவான். அவர்கள் விசுவாசத்தை மறுதலிக்கப்பண்ண என்னென்ன திட்டங்கள் உண்டோ யாவற்றை யும் சமுதாயத்தில் நடைமுறைக்கு கொண்டு வருவான். இதனால்

கைவிடப்பட்ட சபை உபத்திரவத்திற்குள்ளாகும்.

அவர்களைத் தேற்ற சபைகளும், ஆலோசனை கூற மூப்பர்களும், பரிசுத்தவான்களும் இல்லாமையால் அவர்களது உபத்திரவம் பயங்கரமாயிருக்கும். பலர் விசுவாசத்தை விட்டு விடும்படி சித்திரவதை செய்யப்படுவார்கள்.

தளராத வைராக்கியம் கொண்ட பலர் இரத்த சாட்சிகளாக மரிப்பார்கள். சபை கடுமையான உபத்திரவங்களையும் போராட்டங்களையும் சந்திக்கும்.

இந்த உபத்திரவ காலமான மூன்றரை ஆண்டுகளும் யூதர்கள் அந்திகிறிஸ்துவை மேசியா என்று ஏற்றுக் கொள்வார்கள். எனவே யூதர்களுக்கு இது உபத்திரவ காலமாயிராது.

மொத்தமாக ஏழு ஆண்டுகள் நீடிக்கும் அந்திக்கிறிஸ்துவின் காலத்திற்கு உபத்திரவகாலம் என்று பெயர். அதின் முதல் மூன்றரை ஆண்டுகளுக்கு உபத்திரவ காலம் என்றும், அடுத்த பாதி உபத்திரவ காலத்திற்கு மகா உபத்திரவ காலம் என்றும் பெயர்.

கொடியவனாகிய அந்திக்கிறிஸ்துவின் ஆளுகையில் யுத்தங்களும், தவிப்பும் பெருகியிருக்கும்.

ஜனங்கள் சாவைத் தேடுவார்கள்: சாவோ இவர்களுக்கு தூரமாகப் போகும்.

சாத்தானின் கொடிய ஆட்சிக் காலம் ஏழு ஆண்டுகள் நீடிக்கும்.

### 4. இயேசுவின் இரண்டாம் வருகை:

சாத்தானின் ஆட்சிக் காலமான ஏழாவது ஆண்டின் முடிவில் இயேசுகிறிஸ்து மீண்டும் பூமிக்குத் திரும்பி வருவார்.

அவருடைய வருகை மின்னலைப் போலிருக்கும். அவர் மேகங்களுடனே வருவார்.

இரகசிய வருகையில் ஆயத்தமான பரிசுத்தவான்கள் மட்டுமே அவரைக் கண்பார்கள். அவருடன் செல்வார்கள். ஆனால்.

இரண்டாம் வருகையில் யாவரும் அவரைக் காண்பார்கள்.

அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்.

*வெளிப்படுத்துதல் 1 : 7*

*இதோ, மேகங்களுடனே அவர் வருகிறார். கண்கள் யாவும் அவரைக் காணும். அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள். பூமியின் கோத்திரத்தார் யாவரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும். ஆமென்.*

இதற்கு பகிரங்க வருகை அல்லது இரண்டாம் வருகை என்று பெயர்.

இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றி சொல்லும் போது, அவர் எப்படி வானத்திற்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மீண்டும் திரும்பி வருவார் என்று வேதம் முன்னறிவித் துள்ளது (அப் 1: 11)

அவர் ஒலிவமலையிலிருந்து வானத்திற்கு எழுந்தருளிப் போனார் அப்படியே அவர் வருவதானால் அவர் ஒலிவ மலையிலே யேதானே இறங்கவேண்டும்?

இதைக் குறித்து சகரியா 14: 4ல் அவருடைய பாதங்கள் ஒலிவ மலையின் மேல் நிற்கும் என்று முன் குறிக்கப்பட்டுள்ளது.

*சகரியா 14: 4*

*அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின் மேல் நிற்கும். அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராய்ப் பிளந்துபோம். அதினாலே, ஒருபாதி வட பக்கத்திலும் ஒரு பாதி தென் பக்கத் திலும் சாய்ந்து போகும்.*

1 தெசலோனிக்கேயர் 4: 16-17 வசனங்களில் அவர் வானத்தில் நிற்கிறதையும் சகரியா 14:4ல் அவர் ஒலிவமலையில் நிற்கிறதையும் காண்கிறோம்.

எனவே, இரகசிய வருகை வானத்திலும், அவரது இரண்டாம் வருகை பூமியிலேயும் உண்டாக வேண்டும் என்பது தெளிவாகிறது.

இது மாத்திரமல்ல, இரண்டு வருகைகளுக்குமான நோக்கங்களிலும் வேறுபாடுகள் இருக்கிறது.

இரகசிய வருகையின் நோக்கம், பூரணப்படுத்தப்பட்ட தேவனுடைய சபையைத் தன்னுடன் எடுத்துக் கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டது.

பகிரங்க வருகை அல்லது இரண்டாம் வருகை என்பதன் நோக்கம், அந்திக்கிறிஸ்துவை சிறைப்பிடிப்பதும், இந்த பூமியை ஆயிரம் வருடம் ஆரசாட்சி செய்வதும் ஆகும்.

சகரியா 14:3ல் இயேசுகிறிஸ்து யுத்தம் செய்வதையும், சகரியா 14:9ல் அவர் பூமியின் மீதெங்கும் இராஜாவாக ஆளுகை செய்வதையும் காணலாம்.

இயேசுவின் இரகசிய வருகையில் அவருடன் தேவ தூதர்களும், ஒரு பங்கு பரிசுத்தவான்களும், (இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்கள்) வருவார்கள் என்று 1 தெச 4: 14, 16 கூறுகிறது.

இரண்டாம் வருகையில் தேவ தூதர்களும் அவருக்குள் நித்திரை அடைந்த மற்றும் அவருடன் எடுத்துக் கொள்ளப்பட்டவர்களுமாகிய எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள் (சகரி 14:5)

சகரி 14:5ல் உள்ள எல்லா என்ற வார்த்தையை கவனிக்கவும்.

1 தெச 4:14ல் குறிக்கப்பட்டுள்ள வருகையில் எல்லா பரிசுத்தவான்களும் அவருடன் வரவில்லை என்பதையும் கவனிக்கவும்.

எனவே, இரகசிய வருகை கிடையாது எனவும், இரண்டாம் வருகை மட்டுமே உண்டு எனவும் கொள்வது தவறு.

இரண்டு சம்பவங்களுக்கும் இடையே நிறைய வித்தியாசங்கள் உண்டு.

கூர்ந்து கவனித்தால் மட்டுமே புலனாகும்.

இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகையில் இயேசு தமது ஜனத்திற்காகவும், எருசலேமிற்காகவும் போராடுவார்.

அப்பொழுது அந்திக்கிறிஸ்து தாக்கப்படுவான். (தானி 11:4-5)

அந்திக்கிறிஸ்துவும் தேவனோடு போரிடுவதற்காக ராஜாக்க

ளையும் ஜாதிகளையும் எபிரெயுபாஷையிலே அர்மெகெதோன் என்றழைக்கப்படும் மெஹிதோ பள்ளத்தாக்கில் கூட்டிச் சேர்ப்பான். (வெளி 16: 13-16)

அங்கு நடைபெறும் யுத்தம் மகாபயங்கரமானதாக இருக்கும் (சக 14: 1-5)

இந்த யுத்தத்தின் முடிவில் இயேசு கிறிஸ்து அவர்களை ஜெயிப்பார். சாத்தானை பின்பற்றினவர்களையும், அந்திக்கிறிஸ்து வினுடையவர்களையும் அவர் தமது வாயிலிருந்து புறப்படும் பட்டயத்தினால் அழிப்பார். அவர்களது பிரேதங்களை பறவைகள் தின்று திருப்தியடையும், அந்திக்கிறிஸ்துவும், கள்ள தீர்க்கதரிசியும் பிடிக்கப்பட்டு அக்கினிக் கடலில் உயிருடன் தள்ளப்படுவார்கள். (வெளி19: 20,21)

## 5. ஆயிரம் வருட அரசாட்சி:

அர்மகெதோன் யுத்தத்திற்குப் பிறகு ஜெயம் கொண்ட இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்களுடனே ஆயிரம் வருடங்கள் அரசாளுகை செய்வார்.

இயேசு கிறிஸ்து ஆயிரம் வருடம் ஆளுகை செய்யும்போது பூமி எங்கும் சமாதானம் நிறைந்திருக்கும்.

எருசலேம் அக்காலத்தில் முக்கிய நகரமாயும், இராஜ்ஜியங் களின் தலைநகராயும் இருக்கும். யுத்தங்கள் ஓய்ந்து சமாதானம் நிலவும். அக்காலத்தில் ஜனங்கள் பட்டயங்களை மண்வெட்டி களாயும், ஈட்டிகளை அரிவாள்களாயும் அடிப்பார்கள். யுத்தம் மறக்கப்பட்டுப் போகும். (மீகா 4: 3,4 ஏசா 2: 4)

*மீகா 4: 3,4*

*திரளான ஜாதிகள் புறப்பட்டு வந்து நாம் கர்த்தரின் பர்வதத்திற்கும் யாக்கோபின் தேவனுடைய ஆலயத் துக்கும் போவோம் வாருங்கள். அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார் நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.*

*அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த, ஜாதிகளை கடிந்துகொள்வார். அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள் களாயும் அடித்துக்கொள்வார்கள். ஒரு ஜாதிக்கு விரோதமாக மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை. இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை.*

## 6. நியாயத் தீர்ப்பு:

ஆயிரம் வருட அரசாட்சியின் முடிவில் சாத்தான் கொஞ்சக் காலம் கட்டவிழ்க்கப்படுவான். அப்போது ஜனங்களை பாவம் செய்யும்படித் தூண்டி மோசம் போக்குவான். ஜனங்களில் திரளா னவர்கள் அவனது மோசத்திற்குட்பட்டு வஞ்சிக்கப்படுவார்கள். இவர்கள் புறப்பட்டு பரிசுத்தவான்களின் நகரங்களை வளைந்து கொள்வார்கள். அப்பொழுது தேவனுடைய அக்கினி வானத்திலி ருந்து இறங்கி அவர்களைப் பட்சித்துப்போடும்.

தேவன் மரித்தோர் யாவரையும் உயிரோடு எழுப்புவார். அவர் கள் யாவரும் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக நிற்பார்கள். அவர்கள் யாவரும் நியாயம் விசாரிக்கப்பட்டு தங்கள் தங்கள் செய்கைகளுக்கேற்ற பலனையடைவார்கள்.

*தானியேல் 12: 2*

*பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந் தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்.*

அவர் சாத்தானையும் அவன் தூதரையும் அக்கினிக் கடலிலே தள்ளி நித்தியமாய் வாதிக்கப்பட ஒப்புக்கொடுப்பார் (வெளி 20: 7-5)

நியாயத்தீர்ப்பு மகா பயங்கரமான நாள். நியாயத்தீர்ப்பு என்பது அவனவனுடைய பாவத்திற்குத் தண்டனை கிடைக்கும் நாள். நியாயத்தீர்ப்பு பற்றி தனியாகப் புத்தகமே எழுதலாம்.

## 7. புதிய வானம், புதிய பூமி:

இதுவரை இருந்த பழைய பூமி எரிந்து போகும்.

*2 பேதுரு 3: 10*

*கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போம். பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும் அதில் உள்ள கிரியைகளும் எரிந்துபோம்.*

அதன் பின்பு கர்த்தர் புதிய வானத்தையும், புதிய பூமியையும் உண்டாக்குவார். சாபம் நீக்கப்பட்டதாலும் சாத்தான் தள்ளப்பட்ட தாலும் அங்கு நித்திய சமாதானம் குடிகொண்டிருக்கும்.

இதைக் குறித்து நாம் வெளி 21: 1, 2 ஆகிய வசனங்களில் வாசிக்கலாம்.

*வெளிப்படுத்துதல் 21: 1, 2*

*பின்பு நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன். முந்தின வானமும் பூமியும் ஒழிந்து போயின. சமுத்திரமும் இல்லாமற் போயிற்று.*

*யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்திலிருந்து பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன். அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்த மாக்கப்பட்டிருந்து.*

மேற்கண்ட காரியங்கள் தாம் உலகத்தைக் குறித்த தேவனு டைய வருங்காலத் திட்டங்கள்.

மேலே கூறப்பட்ட சம்பவங்களைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

சிலர் இதை வேடிக்கையாக எடுத்துக் கொள்கிறார்கள்.

சிலர் மட்டுமே இதை தங்கள் வாழ்க்கை பிரச்சனையாக கருது கிறார்கள்.

இக்காரியங்கள் நம்புவதற்கு கடினம் போல தோன்றலாம்.

ஒருகாலத்தில் நம் முன்னோர்களுக்கு பூமியை உருண்டை என்று நம்புவது கூட கடினமாகத்தானிருந்து. ஆனால் -

நம்புவதற்கு கடினமாயிருப்பதால் அது உண்மையல்ல

என்றோ, பெருவாரியான ஜனங்கள் நம்பவில்லையென்பதால் உண்மை மாறி விடவோ போகிறதில்லை.

அப்படி மாறுவதானால் ஒரு காலத்தில் உலகம் முழுவதும் நம்பினதற்கு பூமி இந்நேரம் தட்டையாகியிருக்க வேண்டும்.

ஒன்று மட்டும் நிச்சயம்.

நாம் நம்புவதாலோ, நம்பாமல் போவதாலோ, இரட்சிக்கப்படுவதாலோ, இரட்சிக்கப்படாமல் போவதாலோ இயேசுவின் வருகை நின்றுவிடப் போவதில்லை. அது நடந்தே தீரும். குறித்த காலத்தில் குறித்தபடியே!

ஏனெனில், வானமும் பூமியும் ஒழிந்துபோம். அவர் வாயின் வார்த்தைகளோ ஒழிவதில்லை.

உங்கள் முடிவு உங்கள் கையில். என்ன தீர்மானம் எடுத்திருக்கிறீர் நண்பரே?

# 10

## ஏச்சரிக்கைச் செய்தி

### யாக்கோபு 5 : 8

நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருத யங்களை ஸ்திரப்படுத்துங்கள். கர்த்தரின் வருகை சமீப மாயிருக்கிறதே.

### மத்தேயு 24 : 27, 29

மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதைப் போல மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்.

அந்நாட்களில் உபத்திரவம் முடிந்தவுடனேயே சூரியன் அந்தகாரப்படும் சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும். நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்.

### 1 யோவான் 2 : 28

அவர் வரும்போது அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப்போகாமல் தைரியமுள்ளவர் களாயிருக்கும்படி அவரில் நிலைத்திருங்கள்.

## இயேசுவின் வருகை நம்பகமானதா?

இயேசுவின் வருகை பற்றி வெகுகாலமாகவே சபைகள் பேசி வருகின்றன.

தற்காலத்தில் நிறைய சபைகள் கர்த்தரின் வருகை பற்றி பேசுவதை விட்டுவிட்டாலும் சபைகளின் துவக்க காலத்தில் இயேசுவின் வருகை பற்றிய செய்திகள் தான் பிரதானமானவைகளாக விசுவாசிகளிடையே இருந்து வந்தன.

முதல் நூற்றாண்டிலேயே அவர் வருகை எந்த நேரமும் இருக்கலாம் என்று துரிதமானார்கள். நிருப வாக்கியங்களிலேயே விசுவாசிகளை கர்த்தரின் வருகைக்கு ஆயத்தப்படுத்தி நிறைய எழுதினார்கள். ஆதி அப்போஸ்தலர்கள் தங்கள் செய்திகளில் வருகை பற்றி பேசி ஜனங்களை ஆயத்தமடைய ஊக்கப்படுத்தினார்கள்.

சபை சரித்திரத்தின் துவக்க காலத்தில் விசுவாசிகள் ஒருவரையொருவர் பார்க்கும்போது "மாரநாதா" என்று சொல்லிக் கொள்வார்கள். மாரநாதா என்பதற்கு கர்த்தர் சீக்கிரம் வருகிறார் என்று

பொருளாம். இப்படி சொல்லிக் கொள்வதால் கர்த்தரின் வருகையை ஒருவருக்கொருவர் ஞாபகப்படுத்திக் கொண்டார்கள். வருகைக்கு ஆயத்தமாக வேண்டிய அவசியத்தை உணர்த்தினார்கள்.

காலப்போக்கில் கொஞ்சம் மாற்றி விசுவாசிகள் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளும்போது "ஸ்தோத்திரம்" என்றும் Praise the Lord என்றும் சொல்லிக் கொள்ளப் பழகிவிட்டனர். மாரநாதா மறந்து விட்டது.

அதேபோலவே கர்த்தரின் வருகை பற்றிய செய்திகளும், வருகைக்கு ஜனங்களை ஆயத்தப்படுத்தும் வேகமும் குறைந்து போய்விட்டன.

சில சபைகள் கர்த்தரின் வருகையை பகிரங்கமாக மறுக்க ஆரம்பித்தன.

சில," வரும்போது வரட்டும் சார். இப்போ என்ன அவசரம்?'' என்றன.

சில, இயேசுவின் வருகைக்கு ஆவிக்குரிய அர்த்தம் கற்பித்தன. இயேசுவை நாம் உள்ளத்திலே ஏற்றுக் கொண்டபோதே அவர் வருகை நமக்குள் நிகழ்ந்து விட்டது. அதுதான் வருகை என்றன.

இன்னும் சில,"வருகைதானே... அது ஏற்கனவே வந்து விட்டதே... மனிதன் சந்திரனில் காலடி வைத்த போதே இயேசு பூமிக்கு வந்து விட்டாரே. பார்க்கலியா?'' என்றன.

வருகையை பற்றி சொல்லிச் சொல்லியே காலம் போய்க் கொண்டிருப்பதால் பல சபைகள் வருகையை சந்தேகிக்க ஆரம்பித்து விட்டன.

இயேசுவின் வருகையை மறுப்பது சில சபைகளுக்கு இன்று நாகரிகமாகவும் கருதப்படுகிறது.

சரி. இத்தனை குழப்பமான நிலை இயேசுவின் வருகையை பற்றி சபைகளின் நடுவில் இருக்கும்போது இதுபற்றிய உண்மை நிலைதான் என்ன?

இயேசுவின் வருகை உண்மையிலேயே நிகழ்ந்து விடப் போகும் சம்பவம் தானா?

ஆம் என்பதே இதற்கான எளிய பதில்.

தேவனால் முன் குறிக்கப்பட்ட காரியங்கள் யாவையும் எப்போதும் யாருடைய அங்கீகரிப்பிற்காகவும் காத்திருக்கப் போவதில்லை.

கர்த்தர் குறித்த கால அளவில் அது கண்டிப்பாக நிகழ்ந்தே தீரும்.

கர்த்தரின் வருகையைப் பற்றி நாம் நம்பிக்கை கொள்ள ஆதாரமாக நமக்கு பல பலமான சாட்சிகள் உண்டு.

சாட்சிகள் என்று நான் சொல்வது சாதாரண மனிதர்களின் சாட்சிகளையல்ல; சரித்திரங்களை மாற்றியமைத்தவர்களின் தவறாத சாட்சிகள். அவற்றில் ஒன்றிரண்டை இங்கு காணலாமா?

**சாட்சி எண்: 1**

இரண்டாம் வருகைக்கு சாட்சியிடுபவர்களில் பிரதானமானவர் இயேசு கிறிஸ்து.

வருகையின் நாயகரான அவரே தம்முடைய வாயை திறந்து தாம் இரண்டாம் முறையாக பூமிக்கு வரப்போவதாக முன்னறிவித்துள்ளார். ( இதைவிட என்னங்க வேணும்?)

கஷ்டம் பார்க்காமல் கீழ்க்காணும் வசனங்களை எடுத்து வாசித்துப் பார்ப்பீர்களேயானால் நான் சொல்வதை உண்மையென்று காண்பீர்கள். யோவா 14: 1-3, யோவா 14:18 லூக் 9:26 மத் 16: 27 மாற் 13: 26, வெளி 22:6 வெளி 22:12 சரிதானே?

உயிரோடு விண்ணகத்திற்கு ஏறிப்போன இயேசு, தாம் மீண்டும் திரும்ப வந்து துன்மார்க்கமான உலகத்தை அழித்து தன்னுடைய ஜனங்களை தன்னுடன் எடுத்துச் செல்வார் என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களில் இயேசு இவ்வுலகத்திற்கு வெளிப்படுத்தியுள்ளார்.

இயேசுவின் சாட்சியை ஏற்றுக் கொள்ளலாமா? நம்பகமானது தானா? என்று நிச்சயம் நீங்கள் கேட்கமாட்டீர்கள். என்றாலும் இயேசுவின் நம்பகத்தன்மை குறித்தும் கொஞ்சம் சொல்கிறேன். உங்கள் சந்தேக நண்பர் கேட்டால் சொல்லலாம் பாருங்கள். பயன்படும்.

இயேசு தான் வாழ்ந்த காலத்தில் உரைத்த தீர்க்கதரிசனங்க ளெல்லாம் ஒன்றுவிடாமல், வரிக்குவரி மாறாமல் நிறைவேறி யுள்ளன.

இயேசுவை தேவன் என்று ஒத்துக் கொள்ள மறுப்பவர்கள் கூட அவரை தீர்க்கதரிசி என்கிறார்கள்.

அவர் தான் வாழ்ந்த காலத்தில் எருசலேம் அழிவதைக் குறித் தும், உலகப் புகழ் பெற்றிருந்த எருசலேம் தேவாலயம் ஒரு கல்லின் மேல் ஒரு கல் இல்லாமற்போகும்படி இடிக்கப்பட்டுப் போகும் என்றும் முன்னறிவித்திருந்தார். வாசித்துப் பாருங்கள் லூக் 19: 42-44

*42. உனக்கு கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமா தானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும். இப்பொழுதோ அவைகள் உன் கண் களுக்கு மறைவாயிருக்கிறது.*

*43. உன்னை சந்திக்கும் காலத்தை நீ அறியாமற்போன படியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில் போட்டு, உன்னை வளைந்து கொண்டு, எப்பக்கத்தி லும் உன்னை நெருக்கி,*

*44. உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார்.*

அவர் மரணத்திற்குப் பின் கி.பி. 70ம் ஆண்டில் அவர் சொன்ன வார்த்தைகள் கொஞ்சமும் மாற்றமில்லாமல் அப்படியே நிறை வேறியது.

கி.பி. 66ல் எருசலேமில் யூதர்கள் தங்களை ஆண்ட ரோமர் களை எதிர்த்துக் கலகம் செய்தனர். எருசலேமில் குடியிருந்த ரோமர்களை கொலை செய்யவும், அங்கிருந்த அவர்களுடைய வியாபார ஸ்தலங்களுக்கு தீயிடவும், கொள்ளையிடவும், யூத புரட்சியாளர்கள் முனைந்தனர். சாதாரண போர் வீரர்களால் கலகக்காரர்களை அடக்குவது கூடாத காரியமாயிற்று. எனவே, அப்போதைய ரோம சக்கரவர்த்தியான நீரோ கலகக்காரர்களை அடக்கும் பொறுப்பை வெஸ்பேசியன் என்பவனிடம் கொடுத் தான். இந்த வெஸ்பேசியன் பெரிய படையுடன் எருசலேமை

முற்றுகையிட்டான். எருசலேம் கோட்டை கதவுகளை உட்புறமாக அடைத்துக் கொண்டு யூதர்கள் உள்ளேயே தங்கிவிட்டனர்.

எருசலேமுக்குள் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு, உணவுப் பஞ்சம் ஏற்படும் வரையிலும் முற்றுகை நீடித்துக் கொண்டே போனது.

இறுதியாக வெஸ்பேசியன் கி.பி. 70ம் ஆண்டு ஆகஸ்ட் 4ம் தேதி எருசலேம் கோட்டைகளை தகர்க்கத் துவங்கினான். அழுகையின் சுவர் தவிர ஏனைய எல்லா மதில்களும் தகர்க்கப் பட்டன. யூதர்கள் சிதறி ஓடினார்கள்.

சிதறி ஓடின யூத ஜனங்கள் எருசலேம் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்தனர். எனவே, ரோமர்கள் அதைச் சூழ்ந்து கொண்டு அதை தீயிட்டு தகர்த்தனர். தேவாலயம் உருத்தெரியாமல் சிதைக்கப் பட்டது. 10 லட்சம் யூதர்கள் பஞ்சத்தாலும், யுத்தத்தாலும் கொல்லப்பட்டார்கள். 97 ஆயிரம் பேர் சிறைபிடிக்கப்பட்டனர். மற்றவர்கள் பல நாடுகளுக்குள் சிதறி ஓடினர். (The Complete works of Josephus By. Flavius Josephus)

மேற்கண்ட நிகழ்ச்சி பற்றி இயேசு சொன்ன தீர்க்கதரிசனத்தை ஏற்கனவே வாசித்தீர்கள் அல்லவா? சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு இயேசு சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறுமானால் அவர் தன் வருகையைப் பற்றி சொன்ன காரியம் மாத்திரம் நிறைவேறா மல் போகுமா என்ன?

நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன். (யோ 14: 3) என்பதே இயேசு சொன்னதில் இனிமேல் நிறைவேற வேண்டிய வார்த்தை.

**சாட்சி எண்: 2**

இயேசுவின் இரண்டாம் வருகை பற்றி சாட்சியிடும் இரண்டா வது பிரிவினர். தேவதூதர்கள்.

இயேசு விண்ணேறிச் சென்ற போது கடைசியாக அவரோடி ருந்த அவரது சீடர்களும், இன்னும் சிலரும் வானத்தை ஆச்சரியத் தோடு அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்க, அவ்வேளையில் வெண்மையான வஸ்திரம் தரித்த இரண்டு தேவதூதர்கள் தோன்றி இயேசுவின் இரண்டாம் வருகையை குறித்து முன்னறிவித்தார்கள்.

வாசித்துப் பாருங்கள் அப் 1: 11

உங்களிடமிருந்து வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசு எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்திற்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்.

நடைபெறப் போகும் நிகழ்ச்சிகளை முன்னறிவிப்பது தேவதூதர்களின் பணிகளில் ஒன்று. இயேசு பிறப்பதற்கு முன்பு தேவதூதர் மரியாளின் முன்தோன்றி அவரது பிறப்பை குறித்து முன்னறிவித்தார். ஆபிரகாமிடம் தேவதூதர்கள் தோன்றி நடைபெறவிருக்கும் பல சம்பவங்களை முன்னறிவித்தனர். தானியேலிடம் அதேபோல தேவதூதர்கள் அடிக்கடி தோன்றி பாபிலோனுக்கும் இனிவரும் உலகத்திற்கும் நடக்கவிருக்கும் சம்பவங்கள் பற்றிப் பேசினார்கள். அல்லது முன்னறிவித்தார்கள்.

ஆம். நடைபெறப் போகும் சம்பவங்களை முன்னறிவிப்பதில் தீர்க்கதரிசிகளுக்கு மாத்திரமல்ல, தேவதூதர்களுக்கும் பங்குண்டு. அது அவர்களது பணிகளில் பிரதானமானதும் கூட.

இந்த தேவதூதர்கள் முன்னறிவித்த காரியங்கள் தவறாமல் நடைபெற்றதற்கு சாட்சிகள் உண்டா? என்ற கேள்வி எழுவது இயற்கைதான். அதையும் பார்த்துவிடலாம்.

கி.மு. 534ல் தானியேல் என்ற மனிதனுக்கு முன்பாக தேவதூதன் தோன்றி, உலக வரலாற்றில் நிகழப்போகிற சில காரியங்களை முன்னறிவித்தார். அவற்றிலொன்றை தானி 11:2-4 வசனங்களில் நாம் காணலாம். வாசித்துப் பாருங்கள்.

தானியேல் 11: 2-4

*பராக்கிரமமுள்ள ஒரு ராஜா எழும்பி, பிரபலமாய் ஆண்டு தனக்கு இஷ்டமானபடி செய்வான்.*

*அவனுடைய ராஜ்ஜியம் உடைந்து போய் வானத்தின் நான்கு திசைகளிலும் பகுக்கப்படும். ஆனாலும் அவனுடைய சந்ததியாருக்கல்ல. அவனுடையவர்களல்லாத வேறு பேர்களிடம் தாண்டிப் போகும்.*

கி.மு. 534ல் உரைக்கப்பட்ட இந்த தீர்க்கதரிசனம் சுமார் 200 ஆண்டுகளுக்குப் பின் அப்படியே நிறைவேறியது.

கிரேக்க நாட்டில் மகா அலெக்ஸாண்டர் என்கிற சக்கரவர்த்தி தோன்றினார். கி.மு. 336ல் பட்டத்திற்கு வந்த அவர் மிகுந்த பராக்கிர மசாலியாகவும், படைபலம் பொருந்தியவராகவும் இருந்தார். பல நாடுகளைக் கைப்பற்றி பேரரசனாக மாறினார். அவர் தானி 11: 3ல் சொல்கிறபடி ஒரு பிரபலமான ராஜா என்பதற்கு எள்ளளவும் சந்தேகமேயில்லை. (மகா அலெக்ஸாண்டரின் பெயர் உங்களுக் கும் சின்ன வயசிலேயே தெரிந்தது தானே?)

தூதனால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தின்படி அவருடைய இராஜ்ஜியம் அவருக்குப்பின் நான்காக பிரியவும், அவருடையவர் களல்லாத வேறே நான்கு பேரிடம் கடந்து போகவும் வேண்டும்.

நடந்தது என்ன?

கி.மு. 323 ஜுன் 13ம் தேதி அலெக்ஸாண்டர் மரித்தார். அவரு டைய படைத்தளபதிகளாயிருந்த தாலமி, செல்யூக்கஸ் நிகேடார், லைகிமாக்ஸ், கசாண்டர் ஆகியோர் ராஜ்ஜியத்தை கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு இராஜ்ஜியங்களாகப் பிரித்து ஆண்டனர். மட்டுமல்ல, தங்களுக்கு இடையூறில்லாதபடி அலெக்ஸாண்டரின் மனைவி, மகன், சகோதரன் ஆகியோரைக் கொன்று அவரது சந்ததியில்லாதபடி அழித்தனர். (The Bible as History - By Warner Keller)

## சாட்சி எண் :3

வருகையை சாட்சியிடுகிற மூன்றாவது பிரிவினர் தீர்க்கதரிசிகள்.

ஒவ்வொரு காலங்களிலும் தீர்க்கதரிசி என்பவர்களை தேவன் எழுப்பியபடியே இருந்தார். இவர்கள் யாவரும் இயேசுவின் இரண் டாவது வருகையைப் பற்றி காலங்கள் தோறும் சாட்சியிட்டுக் கொண்டேயிருந்திருக்கிறார்கள். இந்த தீர்க்கதரிசிகளில் மிகவும் பிரபலமானவர் ஏசாயா என்ற தீர்க்கதரிசி. அவர் இயேசுவின் இரண்டாம் வருகை பற்றி முன்னறிவித்துள்ள காரியம் பற்றி கொஞ்சம் பார்க்கலாம்.

அக்காலத்தில் கர்த்தர் உன்னதமான சேனையை உன்னதத் திலும், பூமியின் இராஜாக்களை பூமியிலும் விசாரிப்பார். அப்பொழுது சேனைகளின் கர்த்தர் சீயோன் மலையிலும்

எருசலேமிலும் ஆளுகை செய்வார். (ஏசாயா 24: 21, 23)

இதே ஏசாயா தீர்க்கதரிசி ஏற்கனவே முன்னுரைத்த தீர்க்க தரிசனங்கள் நிறைவேறியிருக்கின்றனவா?

ஆம். ஒன்றை மட்டும் உங்கள் பார்வைக்கு வைக்கிறேன். ஏசாயா எப்படிப்பட்ட தீர்க்கதரிசி என்ற முடிவிற்கு வாருங்கள்.

நான் உங்களுக்கு காட்டப் போகும் ஏசாயாவின் இந்த தீர்க்க தரிசனம் கி.மு. 712ல் அறிவிக்கப்பட்டது. அவர் சொன்ன தீர்க்கதரிச னம் ஒரு ராஜாவைப் பற்றியது.

..... கர்த்தராகிய நான் அபிஷேகம் பண்ணின கோரேஸிற்கு எல்லா ஜாதிகளையும் கீழ்ப்படியப் பண்ணி...... (ஏசா 45:1)

கோரேஸ் என்ற இந்த இராஜாவைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தபோது கோரேஸ் என்ற இராஜாவே பிறந்திருக்கவில்லை. அவருக்கு கோரேஸ் என்ற பெயரும் சூட்டப் பட்டிருக்கவில்லை. இந்த தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டு சுமார் 170 ஆண்டுகளுக்குப் பிறகு தான் கோரேஸ் என்ற இராஜாவே தோன்றினார்.

இவ்வாறு ஒரு மனிதன் பிறப்பதற்கு முன்பே அவனது பெயரையும் அவன் செய்யப்போகும் கிரியைகளையும் முன்னறி வித்துள்ளார் இந்த ஏசாயா.

அவன் என் நகரத்தைக் கட்டி சிறைப்பட்டுப் போன என்னு டையவர்களை கிரயமில்லாமலும் பரிதானமில்லாமலும் விடுதலை யாக்குவான். (ஏசா 45: 13)

ஏசாயா இந்த தீர்க்கதரிசனத்தை உரைத்த பின்பு சுமார் 180 ஆண்டுகளுக்குப் பிறகு என்ன நடந்தது என்று பாருங்கள்.

பெர்சிய ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்திலே கர்த்தர் பெர்ஸியாவின் ராஜாவின் ஆவியை ஏவினதினாலே, எருசலேமில் தேவனுடைய ஆலயத்தை கட்டவும், அதற்காக யூதர்களை பிணையப் பணம் இன்றி விடுதலை செய்வதாகவும் தன் இராஜ்ஜியம் எங்கும் எழுதி விளம்பரம் செய்தான். (2 நாளா 36: 22, 23, எஸ்றா 1: 11)

ஏசாயா முன்னறிவித்தபடியே எழுத்துப் பிசகாமல் இந்த தீர்க்க தரிசனம் நிறைவேறியது மாத்திரமல்ல, சுமார் 170 ஆண்டுகளுக்குப்

பின் பிறக்கப்போகும் ஒரு ராஜாவின் பெயர் உட்பட இந்த ஏசாயா முன்னறிவித்திருப்பதும் நமக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளிக்கிற தல்லவா?

இது தவிர யாவராலும் அறியப்பட்ட மிகப்பெரிய தீர்க்கதரிசி மோசே, யூதர்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என்ற மூன்றுபெரிய மதத்தை சேர்ந்தவர்களாலும் மிகப் பெரிய தீர்க்கதரிசி என்று ஏற்றுக் கொள்ளப்பட்டவர் இந்த மோசே.

இயேசு பிறப்பதற்கு சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த இவர் அப்போதே இயேசுவின் பிறப்பைக் குறித்து முன்னறிவித்துள்ளார். உபா 18: 15, 18 ஆகிய வசனங்களில் வாசித்துப் பாருங்கள்.

இந்த மோசே இயேசுவின் இரண்டாம் வருகைப் பற்றியும் முன்னறிவித்துள்ளார். அவர் வானங்களின் மேலும், தனது மாட்சியோடு ஆகாய மண்டலங்கள் மேலும் ஏறி வருகிறார். (உபா 33: 26-29)

வெகுவிரைவிலேயே நடைபெறப்போகும் இயேசுவின் இரண்டாம் வருகைக்கு சாட்சியிட எத்தனை விசேஷமான சாட்சிகள் இருக்கிறார்கள் பாருங்கள். மேசியாவாகிய இயேசுவும், தேவதூதர்களும், மகாப் பெரிய தீர்க்கதரிசிகளும் என்று திரளான, நம்பகமான சாட்சிகள் உண்டு.

ஆனால் அதேசமயம் இயேசுவின் வருகையை நம்பாதவர் களுக்கு பக்கபலமாக சில நாஸ்தீகவாதிகளின் நூல்கள் மட்டுமே உண்டு. அவை பாவம், ஒன்றுக்கும் உதவாத நூல்கள், யாருடைய வாழ்க்கையையும் மாற்றியமைக்க சக்தியற்ற காகிதத் தொகுப்புகள்.

அப்படிப்பட்ட ஒன்றின் கூற்றாகிலும் நிறைவேறியதாக நாம் காண்பதில்லை. அவை உண்மையை அஸ்திபாரமாகக் கொள்ளா மல் குறைவான மனித அறிவையும், வெறும் அனுமானங்களையும், வார்த்தை ஜாலங்களையும் மட்டுமே கொண்டுள்ளன.

ஆனால் புனித வேதாகமம் உண்மையையும் சத்தியத்தையும் கொண்டுள்ள ஒரு நூல்.

வருங்காலங்களை முன்னறிவிப்பதில் ஒப்பற்ற நூலான புனித வேதாகமத்தில் இயேசுவின் இரண்டாம் வருகை பற்றி சுமார் 2163 முறைகள் பகிரங்கமாக முன்னறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த வேதவசனங்கள் யாவும் மனிதனால் எழுதப்படாமல் தேவ ஆவியால் எழுதப்பட்டுள்ளபடியால் இதன் நம்பகத்தன்மை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது. யாவராலும் இரண்டாம் சிந்தனை யின்றி ஏற்றுக் கொள்ளக்கூடியது. நிலையானது.

வானமும் பூமியும் ஒழிந்தாலும் ஒழியாத வேத வசனங்கள் சொல்கின்றன.

.. இனி காலம் செல்லாது என்று.

ஆம். யாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று.

எனவே, இனி ஒன்றுக்கும் நேரமில்லை.

ஆயத்தப்படுங்கள்.

Copies can be had from:

**VOICE OF JESUS PUBLICATIONS,**
P.O.Box : 6, Ramanathapuram-623501
Phone: 98941 31211, 94423 22264

**JESUS MINISTRIES,**
105/229,M.T.H. Salai, Villivakkam,
Chennai- 600 049. S.India.
Ph: 044-43554021

**EL-SHADDAI**
**DIRECT INFORMATION CENTRE,**
Blessing Cottage, 41/2, Gandhi Colony,
Central Bank Building II floor,
70 feet Kennett Road, New Ellis Nagar,
Madurai - 625010

**VOICE OF JESUS**
**LITERATURE SERVICE,**
#290,Kariyannapalaya Nilayam, Hennur
Main Road, Thomas Town Post.
Bangalore- 560 084.901969964

**E.L.S.BOOK SHOP**
Brezer Town, Oil mills Road,
BANGALORE- 560 084

**C.L.S.BOOK SHOP**
Bangalore-Nilgris Road,
MYSORE- 570 001. Karnataka State.

**AND**
**ALL LEADING CHRISTIAN BOOKSELLERS**
**IN TAMILNADU AND KARNATAKA.**

**இயேசுவின் தொனி பதிப்பகத்தின்**

# பிற வெளியீடுகள்

## தமிழில்

வேதாகமத் துணுக்குச் செய்திகள் - பாகம் 1
வேதாகமத் துணுக்குச் செய்திகள் - பாகம் 2
ஆழங்கள் சொல்லும் சாட்சிகள் - பாகம் 1
ஆழங்கள் சொல்லும் சாட்சிகள் - பாகம் 2
வேதாகம ஜாதிகள்
பிரசங்க பீடம்
ஜாலி ஹோம் - பாகம் 1
ஜாலி ஹோம் - பாகம் 2
எச்சரிக்கைச் செய்திகள்
கடைசிக்கால ஆபத்துகள்
முடிவுக்கு முன்..
ஜெபிக்கலாம் வாங்க..
தள்ளுபடியாகமக் கதைகள்
உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்
முடியாததை முடியப்பண்ணும் கர்த்தர்
எளிய உவமைகள்

## மலையாளத்தில்

எச்சரிக்கைச் செய்திகள்
அந்திமகால ஆபத்துகள்

## கன்னடத்தில்

அந்தியகே முன்னா
எச்சரிக்கேய சுத்திகளு
கடேயகால ஆபத்துக்களு

## ஆங்கிலத்தில்

Endtime Catastrophies
Endtime Warnings
Raising A Company of Prophets

**விபரங்களுக்கு:**

இயேசுவின் தொனி பதிப்பகம்
தபால் பெட்டி எண்: 6
இராமநாதபுரம் - 623501
தென்னிந்தியா
தொலைபேசி: 98941 31211
94423 22264

VOICE OF JESUS
PUBLICATIONS
P.O.Box: 6,Ramanathapuram
623501. South India
Phones: 98941 31211
94423 22264

# TAMIL AUDIO CDS BY
## BRO. VINCENT SELVAKUMAR




**VOICE OF JESUS MEDIA**

Post Box No: 7206 Bangalore-72

Cell : 09731722977.

# TAMIL BOOKS BY
## BRO. VINCENT SELVAKUMAR




## VOICE OF JESUS PUBLICATIONS,

Post Box No: 6, Ramanathapuram-623501

Phone : 98941 31211, 94423 22264

## விழித்துக்கொள்ளுங்கள்..
## எச்சரிக்கையாயிருங்கள்..
## ஆயத்தப்படுங்கள்..

உலகத்தைப் பலியாக்கத் தலைக்கு மேல் காத்திருக்கும் அபாய மினுமினுப்புகள்.. காற்றில் ஒளிந்து வரும் மரணம்.. பெருகி வரும் சாத்தானின் செயல்பாடுகள்.. நடமாடத் துவங்கியிருக்கும் சிலைகள்.. ஆக்கிரமித்து வரும் எண்களுக்குள் அடங்கிவரும் உலகம்.. என நம்மைச் சுற்றிலும் நடைபெற்றுவரும் அபாய மாறுதல்களைக் கொண்டு நம்மை எச்சரிக்கவும் வஞ்சகக் கண்ணிகளில் சிக்கிக்கொள்ளாமல் நம்மை விழிப்புள்ளவர்களாக மாற்றவும், வரப்போகும் தேவனுடைய ராஜ்ஜியத்துக்கு நம்மை ஆயத்தப்படத் துரிதப்படுத்தவும் உதவி செய்கிறது இந்த நூல்.

# எச்சரிக்கை செய்திகள்

வின்சென்ட் செல்வகுமார்

